# வாழ்க்கைப் பயணம்

(சிறுகதைத் தொகுப்பு)



முருகேசு ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பயணம்

(சிறுகதைத் தொகுப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பயணம்

(சிறுகதைத் தொகுப்பு)

முருகேசு ரவீந்திரன்

வெளியீடு
நண்பர்கள்
உயர்தரம் - 1985
யாழ். இந்துக் கல்லூரி
2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | வாழ்க்கைப் பயணம் (சிறுகதைத் தொகுப்பு) |
| ஆசிரியர் | : | முருகேசு ரவீந்திரன் |
| உரிமை | : | திருமதி அருணாதேவி ரவீந்திரன் |
| அட்டை வடிவமைப்பு, ஓவியங்கள் | : | கோ. கயிலாசநாதன் |
| முதற் பதிப்பு | : | ஏப்ரல் 2012 |
| வெளியீடு | : | நண்பர்கள் (உயர்தரம் - 1985)<br>யாழ். இந்துக் கல்லூரி<br>தொ.பேசி: 0775342129 |
| அச்சு | : | குமரன் அச்சகம்<br>39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 6<br>தொ.பேசி: 011 2364550 |
| விலை | : | 300/- |

| | | |
|---|---|---|
| Title | : | Valkai Pyanam (Anthology of Short Story) |
| Author | : | Murugesu Raveendran |
| Copy Right | : | Mrs. Arunadevi Raveendran |
| First Edition | : | April 2012 |
| Published | : | Friends (A.L. - 1985)<br>Jaffna Hindu College |
| Cover Design and Illustrations by | : | G. Kailasanathan |
| Printed by | : | Kumaran Press<br>39, 36th Lane, Colombo - 6<br>E.mail - kumbhlk@gmail.com |
| Price | : | 300/= |
| ISBN | : | 978-955-54221-0-9 |


சமர்ப்பணம்



யாழ். இந்துக் கல்லூரியில் எமக்குத்
தமிழைத் தமிழாய்ப் போதித்த ஆசிரியர்
அமரர் கந்தையா குமாரசிங்கத்தின்
நினைவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

வீரகேசரி வாரவெளியீடு
தினகரன் வாரமஞ்சரி
ஞாயிறு தினக்குரல்
சுடர் ஒளி
வண்ண வானவில்

## எண்ணப் பகிர்வு

அநேகம் பேர் விரும்பிப் படிக்கும் இலக்கிய வடிவமாக சிறுகதைகள் காணப்படுகின்றன. கவிதைகளை விடவும் கதைகளை, இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருப்பதால், அவை அதிகளவு வாசகர்களைச் சென்றடைகின்றன. கதை சொல்வதும் கதை கேட்பதும் பலருக்கும் பிடிக்கும். கதை சொல்லத் தயங்கு வோரும் கதைகேட்கத் தயங்குவதில்லை. பாட்டி, அம்மா, அப்பா இவர்களிடம் எம்மில் பலர் கதைகேட்டிருப்போம். எனவே கதை என்பது தமிழுக்கு புதிதான விடயமல்ல.

வீரகேசரியில் ஒப்புநோக்குநராகப் பணியாற்றிய போது கதைகளை எழுதினேன். அங்கு உதவி ஆசிரியராகப் பணியாற்றிய ஜி.ரி. கேதாரநாதன் சிறந்த மொழிபெயர்ப்பாளர். நவீன தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்லாது ஆங்கில இலக்கியங்களிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவர். நவீன சினிமா பற்றிய நல்ல கட்டுரைகளை எழுதியுள்ளார். அதனால் 'வாழ்க்கைப் பயணம்' சிறுகதைத் தொகுப்பின் அணிந்துரையை எழுதுமாறு அவரைக் கேட்டேன்.

என்னைப் பற்றிய சிறு குறிப்பினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் ஆர். கணபதிப் பிள்ளை எழுதியுள்ளார். இருவருக்கும் என் அன்பினைத் தெரிவிக் கிறேன்.

சிறுகதைகள் எப்படி அமைய வேண்டும் என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. கட்டுடைத்தல் என்பது சிறுகதை இலக்கியத்திலும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாறும் மனிதர்கள்' சிறுகதை 12.08.1990 இல் வீரகேசரி வார வெளியீட்டில் வெளியானது. இதுவே எனது முதலாவது சிறுகதை. அதனைத் தொடர்ந்து வீரகேசரி வாரவெளியீட்டிலும் மித்திரன் வாரமலரிலும் சிறுகதைகளை எழுதினேன். வீரகேசரியில் ஒப்பு நோக்குநராகப் பணியாற்றிய போது பல கட்டுரைகளையும் எழுதியுள்ளேன். ஆனால் ஆக்க இலக்கியம் என்ற வகையில் சிறுகதைகள் எழுதவே அதிகம் விரும்பினேன்.

நான் எழுதிய கதைகள் கூடுதலான வாசகர்களைச் சென்ற டைந்தன. வீரகேசரியில் வெளியானதாலேயே இது சாத்திய மானது.

சின்ன வயதில் தாயார் சிவசோதியம்மா கதை சொல்லக் கேட்டிருக்கிறேன். வாசிப்பில் ஆர்வம் ஏற்பட்டபோது அம்மா என்னை யாழ்நகரிலுள்ள இரகுநாதன் பதிப்பகம், ஸ்ரீலங்கா புத்தக சாலை என்பவற்றுக்குக் கூட்டிச் சென்று புத்தகங்களை வாங்கித் தந்திருக்கிறார். ஆரம்பத்தில் கழகக் கதைப் புத்தகங்கள், அம்புலிமாமா என்பவற்றைப் படித்தேன்.

தந்தை ஆ.முருகேசு தபாலதிபராகப் பணியாற்றினார். வேலை நிமித்தம் வெளியிடங்களில் கடமையாற்றினாலும் விடுமுறையில் வரும்போது மறக்காமல் நூல்கள் வாங்கி வருவார். இத்தருணத்தில் எனது பெற்றோருக்கு நன்றி சொல்வதில் பெருமிதம் கொள்கிறேன்.

சிறுவயது முதலே வாசிப்பில் ஆர்வமிருந்தது. பாடப்புத்தகங் களை விடவும் கதைப் புத்தகங்களை விரும்பி வாசித்திருக்கிறேன். அப்படி வாசித்தவைகள் எல்லாம் தரமான படைப்புக்கள் என்று கூறிவிட முடியாது. அப்போது ஜனரஞ்சகமான கதைப் புத்தகங் களையே கூடுதலாக வாசித்தேன். அவற்றின் தாக்கம் எனது ஆரம்பகால சிறுகதைகளிலும் காணப்பட்டது. அதற்காக இப்போது அற்புதமான படைப்புக்களை வெளிக்கொண்டு வருகிறேன் எனப் பெருமைப்படவில்லை. ஏன் என்றால் அற்புதம் என்று எதுவும் இல்லை என்பது எனது நிலைப்பாடு.



ஒவ்வொரு கதையும் எழுதி முடித்ததும் உடனே அதைப் படித்துக் கருத்துக் கூறும் எனது மனைவி அருணா, என்னைக் காட்டிலும் இத் தொகுப்பு வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தார். அருணாவுக்கு என் தீராப் பிரியங்கள்.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் சிறுகதைகளை எழுதிய போதும் சில கதைகளை எழுதிய பின் கதைகள் எழுதுவதில் சோர்வு ஏற்பட்டது. வாசிப்பு பரப்பு விரிவடைந்தபோது நாம் எல்லாம் எழுத வேண்டுமா என்ற எண்ணம் மேலோங்கியது. அதனால் சிறு கதைகள் எழுதுவதைக் கைவிட்டு கட்டுரைகளை எழுதினேன்.

தொண்ணூறுகளின் பிற்பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் அறிவிப்பாளராகும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் பின்னர் வானொலி நிகழ்ச்சிகளுக்கான பிரதிகளை எழுதுவதில் ஆர்வம் செலுத்தினேன்.

சில வருடங்களுக்கு முன்னர் தினகரன் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றும் லோரன்ஸ் செல்வநாயகம் தினகரன் வார மஞ்சரியில் இலக்கிய விடயங்களை எழுதுமாறு கேட்டார். இலக்கியம் தொடர்பான ஆழமான அறிவு என்னிடம் இருப்பதாக அவர் எண்ணியிருக்கலாம். ஆனால் என்னைப் பற்றி எனக்குத் தானே தெரியும். உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானம் படித்த எனக்கு இலக்கியம் பற்றி அதிகம் தெரியாது. ஏதோ சில நூல்களை வாசித்திருக்கிறேன். அந்த அறிவுடன் எழுதத் தொடங்கினேன்.

தினகரன் வாரமஞ்சரியில் 'கூராயுதம்' பகுதியில் கட்டுரைகள் வெளியாகின. பலரும் கட்டுரைகளை வாசித்தார்கள். பாராட்டினார்கள். அபிப்பிராயம் சொன்னார்கள். ஆரம்பத்தில் எழுதத் தயங்கியவன், மூன்று வருடங்கள் தினகரன் வாரமஞ்சரியில் எழுதினேன். மீண்டும் சிறுகதைகள் எழுதவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அப்படி எழுதியது தான் 'சின்ன அரும்பு' சிறுகதை. நண்பர்களின் தூண்டு தலாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் உதவிப் பதிவாளராகப் பணிபுரியும் தம்பி மு.நந்தகுமாரின் ஊக்கு விப்பாலும் தொடர்ந்து கதைகளை எழுதினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்பு வேலை நிமித்தம் கொழும்பு வந்தேன். ஆனால் எனது நினைவுகள் எப்போதும் யாழ்ப்பாணம் பற்றியதாகவே இருக்கிறது. உலகில் வேறெந்தப் பிரதேசமும் அதற்கு இணையாக மாட்டாது என்பது என் எண்ணம்.

யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்றதை பெரும்பாக்கிய மாகவே கருதுகின்றேன். சிறந்த ஆசிரியர்களுடனான தொடர்பு, நல்ல நண்பர்களின் நட்பு, இவை எல்லாம் அந்தக் கல்லூரியில் படித்ததால் கிடைத்தது.

1985 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதினோம். அத்தோடு எமது கல்லூரி வாழ்க்கை முற்றுப் பெற்றது. கனத்த நெஞ்சங்களுடன் பிரிந்தோம். இன்று எனது மகன் செந்தூரன் யாழ். இந்துக் கல்லூரி யில் படிப்பது மனதுக்கு நிறைவாகவுள்ளது.

கையடக்க தொலைபேசிகளோ முகநூலோ இல்லாத காலம். இருந்தும் சில நண்பர்களோடு தொடர்பு இருந்தது. யாழ். இந்துக் கல்லூரியில் எம்மோடு கல்வி கற்ற பலரும் நல்ல நிலையில் உள்ளனர். எமது கல்லூரித் தாய் யாரையும் கைவிடவில்லை. யாழ். இந்துக் கல்லூரியில் படித்தோம் என்பதே பெருமை.

காலம் எல்லோரிடத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. எம்மோடு படித்தவர்கள் அருகில் இருந்த போதும் அவர்களை அடையாளம் காணமுடியவில்லை. எம்மோடு படித்தவர்கள் எங்கிருக்கிறார்கள், எப்படி இருக்கிறார்கள் என்பதை அறிவதில் நண்பர்கள் சிலர் ஆர்வம் காட்டினர். முகநூலின் வாயிலாகவும் வேறு வழிகளிலும் கல்லூரியில் படித்த பலரையும் கண்டுபிடிக்க முடிந்தது. இந்த விடயத்தில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றும் பெனோ ரமேஷின் பங்கு அளப்பெரியது.

கடந்த வருடம் டிசம்பர் 30ந் திகதி எம்மோடு படித்த நண்பர்களில் பதினாறு பேர் குடும்பத்தினரோடு யாழ்ப்பாணத்தில் சந்தித்தோம். விருந்துண்டோம். இது மனதுக்கு நிறைவைத் தந்தது.



பத்திரிகைகளில் வெளியான சிறுகதைகளைத் தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்பதில் நண்பர்கள் ஆர்வம் காட்டினர். தியாகேசபிள்ளை அன்பன் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும் யாழ். இந்துக் கல்லூரியிலும் என்னோடு ஒன்றாகப் படித்தவர். தற்போது தென்னாபிரிக்காவில் தொலைத்தொடர்புத் துறையில் உயர்பதவி வகிக்கிறார். இவர் சிறுகதைத் தொகுப்பினை வெளிக் கொண்டுவருவதில் கூடுதல் கவனம் செலுத்தினார். அன்பனின் அன்பு போற்றுதலுக்குரியது.

நூலிலே நவீன ஓவியங்கள் இடம்பெற்றால் நன்றாக இருக்கும் என எண்ணினோம். யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் சிறந்த ஓவியரும் தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப் பாளருமான கோ. கயிலாசநாதன் எமது எண்ணத்தை அழகுறப் பூர்த்தி செய்தார். அவருக்கு எமது நன்றிகள்.

மிக நேர்த்தியாக நூலினை வடிவமைத்து அச்சேற்றித்தந்த குமரன் அச்சகத்தினரின் பணி சிறப்பானது. என்னோடு கல்விகற்ற நண்பர்களால் இந்நூல் வெளியிடப்படுவது மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகிறது.

சுருங்கச் சொல்லின் 'வாழ்க்கைப் பயணம்' சிறுகதைத் தொகுப்பு நட்பின் வெற்றி.

நன்றி

அன்புடன்
முருகேசு ரவீந்திரன்

அருணோதயம்
22/10, பாரதி வீதி
கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
15.02.2012
தொலைபேசி: 0775342129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

நவீன சிறுகதைகள் உள்ளடக்க, வடிவ ரீதியில் அவற்றிற்குரிய பொதுவான வரையறைகள் எல்லைப்பாடுகளை கடந்தனவாகப் பரிணமித்துள்ளன. எனினும் இலங்கையில் வெளிவரும் நாளாந்த, வாராந்த பத்திரிகைகளில் பெரும்பாலும் மலினமான உணர்வுப் புலம்பல் கதைகளையே காணமுடிகிறது. விதிவிலக்காக சிலவேளை களில் ஓரளவு நல்ல சிறுகதைகள் என அடையாளப்படுத்தக் கூடியனவும் வெளியாவதுண்டு. இத் தொகுதியில் இடம் பெற்றிருக்கும் கதைகள் யாவும் வாராந்தப் பத்திரிகைகளில் வெளிவந்தவையே. எனினும் இக்கதைகள் காத்திரமான சிறு சஞ்சிகைச் சூழலுக்குரியனவாகத் திகழ்வதை நல்ல வாசகனால் இனங்கண்டு கொள்ள முடியும்.

அசைவாக்கமற்ற வெற்றுச் சூழலிலிருந்து படைப்பாக்கம் சாத்தியம் இல்லை. எனவே ஒரு சமூகம் தான் எழுத்தாளனை இயக்குகிறது. அவனுடைய படைப்புகளுக்கு களமாகிறது. மாற்றுக் கருத்துகளுக்கும் மற்றும் புதிய இலக்கிய முயற்சிகளுக்கும் நம்பிக்கையளிக்கக்கூடிய ஆரோக்கியமான வாசகத்தளமொன்று உருவாக வேண்டும்.

இந்த வகையில் வணிக ரீதியான பத்திரிகைகளிலிருந்து தரமான சிறு சஞ்சிகைகள் வித்தியாசமானவை. எந்த நிலையிலும் சிறுகதை வளர்ச்சி சிறு சஞ்சிகைச் சூழல் சார்ந்ததாகவேயிருக்கிறது.

வணிக பத்திரிகைகளாகயிருந்தாலென்ன, தரமான சிறு சஞ்சிகை களாகயிருந்தாலென்ன இவை சகலவற்றிலுமே வாசிப்புத் தேவையினை நிறைவேற்றும் பெரிதும் புழக்கத்திலுள்ள இலக்கிய வடிவமாக, சிறுகதையிருப்பதை எவரும் ஒத்துக் கொள்வர்.

போரினால் சிதைவுற்ற யாழ் குடாநாட்டை, தொலைந்து போய்க் கொண்டிருக்கும் அதன் அங்க அடையாளங்களை மீட்டெடுக்கும் அல்லது மீள்பதிவு செய்யும் முயற்சியே ரவீந்திரனின் கதைகள் என்பது மிகையானதொரு கூற்றல்ல. மைக்கல் ஒண்டாச்சி என்பவர் ஆங்கிலத்தில் எழுதி வரும் கனடாவில் வாழும் இலங்கை எழுத் தாளராவார். அவர் தமது பன்னிரண்டாவது வயதில் இலங்கையை விட்டு வெளியேறி கனடாவில் வாழ்ந்து வருகிறார். கடைசியாக அவர் எழுதிய 'The Cats Table' என்ற நாவல் பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையை விட்டு இங்கிலாந்துக்கு புறப்பட்ட கப்பல் பயணத்தைப் பற்றிச் சொல்கிறது. இலங்கையில் அவர் அனுபவித்த அந்தக் கால வாழ்க்கை அவர் கண்முன் நிழலாடுகிறது.

நினைவுகள் பலவற்றை அவர் அசைபோடுகிறார். இலங்கையை விட்டு 56 வருடங்களுக்கு முன்னர் அவர் வெளியேறிவிட்டாலும் இலங்கை அவரை விட்டு இன்னும் அகலவில்லை.

முருகேசு ரவீந்திரனைப் பொறுத்த வரையில் அவர் தொழில் நிர்ப்பந்தம் காரணமாக கொழும்புக்கு வந்தவர். போரின் அவலங்களுக்கு மத்தியில் தமது குடும்பத்தினருடன் கொழும்பில் வாழ்ந்தார். போர் முடிந்தவுடன் அவரது மனைவியும் பிள்ளைகளும் யாழ்ப்பாணம் செல்ல விரும்பினர். அவரது பிறந்த மண்ணுடனான நாளாந்த ஏக்கத்துக்கு, அது அவருக்கு வடிகாலாகியது. இதனால் உத்வேகம் பெற்ற அவர் யாழ்ப்பாண மண்ணை மையமாகக் கொண்ட இன்னும் பல கதைகளை எழுதியது மாத்திரமன்றி அக்கதைகள் சிலவற்றையேனும் உள்ளடக்கியதாக முதலாவது தொகுதியை வெளிக்கொணர வேண்டுமென ஆவல் கொண்டார். அவருடன் யாழ். இந்துக்கல்லூரியில் படித்த நண்பர்களின் பக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தால் நீண்ட காலமெடுக்காது அவருடைய ஆவல் பூர்த்தி யாகியிருப்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும். இத் தொகுதியில் பன்னிரண்டு கதைகள் உள்ளன. அவர் இதுவரை சுமார் இருபத்தைந்து கதைகள் வரையில் எழுதியிருப்பாரென நினைக்கிறேன். கையெழுத்துப் பிரதியில் அவருடைய கதைகளின் முதல் வாசகனாக பல தடவைகளில் நானிருந்திருக்கிறேன். அவரெழுதிய கதைகளுள் அவரே தெரிவு செய்த பன்னிரண்டு கதைகள் இத் தொகுதியில் அடங்கியுள்ளன.

பாசம்:- பொருள் பற்று மிகுந்த இந்த உலகில் முதியவரொரு வரின் அந்நியப்பாட்டினையும், எல்லாவற்றையும் இழந்த நிலையில் எங்கிருந்தோ வந்த உறவற்ற ஏதிலிகள் அவருக்கு நெருக்கமாவ தையும் இது சித்திரிக்கின்றது.

மாற்றம்:- மனிதர்களின் ஒழுக்க விழுமியங்களை குறிப்பாக ஆண்-பெண் உறவு தொடர்பில் ஒரு வரையறைக்குட்படுத்துவது என்பது இயலாத காரியமாகும். ஒட்டுதலும் விலகுதலுமாகத் தொடரும் வாழ்வின் மறுதலிக்க முடியாத நகர்வின் வெட்டுமுகத் தோற்றத்தை இதில் வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

பிறந்த மண்:- நீண்ட காலம் தொடர்ந்த யுத்தம் யாழ்ப்பாணத்தை விட்டு இடம் பெயர்ந்தவர்களிடையே ஏற்படுத்தும் ஏக்கவுணர்வு களையும் அவ்வாறு சென்ற இடங்களில் தம்மை நிலை நிறுத்திக் கொள்வதில் அவர்களது சிக்கல்களையும் பதிவு செய்திருக்கிறார்.

சின்ன அரும்பு:- இலவசக்கல்வி அர்த்தமிழந்து போவதையும் இன்றைய நவீன யுகத்தில் கூட கல்விக் கூடங்கள் தண்டனைக்குரிய சிறைக் கூடங்களாக மாறுவதையும் குழந்தை உளவியல் தெரியாதோர் ஆசிரியர்களாக இருப்பதன் அவலத்தையும் உணர வைக்கிறார்.

புள்ளிக் கோழி:- உணவுக்காக உயிர்களைக் கொல்வது யதார்த்த மாக இருந்த போதிலும், அதன் மறுபக்கத்தை மெல்லிய உணர்வு களுடன் விசாரணைக்கு திருப்பி விடுகிறார். ஆன்மநேயமென்பது தனியே மானுடம் சார்ந்ததென குறுக்கி விட முடியாதெனவும் அது



பிராணிகள், மரங்கள் ஏன் சடப்பொருள்கள் போன்றவற்றையும் தழுவியதாக பரந்து செல்வதையும் இது காட்டுகிறது. எல்லாவற்றிலும், சகலவற்றிலும் தன்னையே காணுதல் என்ற மெய்மையே இங்கு துலக்கமாகிறது.

அந்திமம்:- குடும்பத்தில் உழைக்கும் சக்தியாயிருந்த குடும்பத் தலைவனின் வகிபாகம் மாறும்போது நேரும் அவலத்தையும் இறுதியில் அவனது நெருக்கமான உறவுகளே தத்தமது சௌகரியங் களுக்காக அவனை அந்நியப்படுத்தி ஒதுக்குவதையும் எடுத்துக் காட்டுகிறது.

மீட்சி:- குடும்ப உறவில் காணப்படும் இறுக்கமான பிணைப் பினையும் அதே வேளை, எதிர்பார்ப்பிற்கு மாறாக, புதிய உறவான காதல் அக்குடும்பத்தை சிதறவிடாது பரிவுடன் பேணுவதையும் நேர்மையுடன் ஒரு சேர சித்திரிப்பதைக் காணலாம்.

வேதனை:- மதுவுக்கு ஆட்பட்டு நோயுற்று இருக்கும் ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படும் தெளிவு, காலம் கடந்த ஒன்றாகிப் போனதன் வெறுமையும், இயலாமையும் உணர்த்தப்படுகிறது.

வாழ்க்கைப் பயணம்:- கல்வியில் பின்னடைவு கண்ட ஒருவன் உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுகிறான். தாழ்ந்த சாதிப் பெண்ணொருத்தியின் உண்மையான நேசம், அவனது இருண்ட வாழ்வில் பிடிப்பையும் நம்பிக்கை ஒளியையும் கொண்டு வருகிறது.

தயக்கம்:- பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டிருந்த கால கட்ட யாழ்ப்பாணப் பின்னணியில் உருவாகும் ஒரு காதல் கதை பற்றியதாகும். இக் காதலின் ஊடாக நெஞ்சுரமற்ற யாழ்ப்பாணத்து இளைஞனொருவனின், திடமற்ற மனோநிலை வெளிப்படுத்தப் படுவதுடன் இறுதியில் காதல் நிறைவேறாது நசிந்து போவதையும் கதை சித்திரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியேல்லை:- யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலையும் அவர்களது பழமை பேணும் சிந்தனைப் போக்கையும் வெளிக் கொணரும் பின்புலத்தில் தோல்வியுற்ற காதல் நினைவு கூரப் படுகிறது.

இதம்:- பதின்ம பருவத்தில் பாடசாலையில் படிக்கும் காலத்தில் அரும்பும் எதிர்ப்பால் ஈர்ப்பும் பிடிப்பும் பின்னாளில் ஞாபக அடுக்குகளிலிருந்து மீட்டிப் பார்க்கப்படுகிறது.

மண்வாசனையுடன் கூடிய இக்கதைகள் யாழ்ப்பாணத்து நிலப் பரப்பில் வாழும் மக்களின் வாழ்வியல் கூறுகளை அழகியல் உணர்வுடன் சித்திரிப்பவையாக அமைந்துள்ளன. அவர்களுடைய குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினருடைய வாழ்க்கையில் ஏற்படும் ஏக்கங்கள், நம்பிக்கைகள், இழப்புகள், சவால்கள் மற்றும் அவர்களது தொன்மங்கள் போன்றவற்றினூடாக அவர்களது மன அழுத்தங் களை அடி நாதமாகக் கொண்டனவாக இக்கதைகள் மிளிர்கின்றன. பலமும், பலயீனமும் கூடிய இயல்பான மனிதர்களே இவரது படைப்புகளில் ஊடாடுகின்றனர். கதாநாயக மனோரதிய பிம்பங் களையோ, படிமங்களையோ முன்னிறுத்தாது அத்தகைய கதா மாந்தர்களுக்கு இருக்கக்கூடிய மேன்மைகளையும் யாழ்ப்பாண வாழ்வியல் அனுபவங்களினூடாக கதாசிரியர் அதீதமின்றி இயல்பாக சித்திரிக்கிறார். எதையும் வில்லங்கமாக தூக்கி நிறுத்தாமலும், எவர் மீதும் குற்றம் சுமத்தாமலும் கதைகளை எத்தகைய மிகையுமின்றி அதன் இயல்புப் போக்கில் தன்னிச்சையாக நகர்த்தியிருப்பது சிலாகிக்கப்பட வேண்டியதொரு அம்சமாகும். மேலும் கிடுகுவேலி கலாசாரத்தின் பிரிக்க முடியாத கூறுகளும் இறுக்கமான மனோ பாவமும் காலமாற்றத்தால் தளர்வடைந்து பின்னொதுங்குவதையும் இக்கதைகளினூடாக ரவீந்திரன் ஆவணப்படுத்தியிருக்கிறார்.

பெரும்பாலும் இவரது சிறுகதை உலகத்தைப் பொறுத்த வரையில் உண்மைக்கும் புனைவுக்குமிடையே மிகச் சிறியதொரு பிரிவெல்லையே இழையோடுகிறது. எவையையுமே வேறுபடுத்திப் பார்க்க முடியாதவாறு அக்கலவை சேர்மானம் கொண்டிருக்கக்கூடிய



விதத்தில் சித்தித்திருப்பது அவற்றுக்கேயுரிய பலமென நான் நினைக்கிறேன். படைப்பு என்பது வாழ்வுடனான உரசல், எதிர்கொள்ளல் என்ற வகையில் ஒரு படைப்பாளியாக இந்த உண்மை நிலைக்கு நேர்மையுடன் எதிர்வினையாற்றும் போது தான் அதற்குரிய மேன்மையும் வலிமையும் கிட்டுகிறது. இங்கே வேஷங்களுக்கோ போலித்தனமான பாசாங்குகள் பாவனைகள் போன்றவற்றுக்கோ மேலும் இட்டுக்கட்டல்களுக்கோ இடமில்லாது போய்விடுகிறது. இந்த வகையில் அதீதமின்றி இயல்பான போக்கில் படைப்பாளிக்குரிய வாழ்வுக் கோணமொன்றினை கதையில் கொண்டு வருதல் அப்படைப்பாளியின் தவமெனலாம். இக்கதைகள் பெரும்பாலானவற்றிலிருந்து ரவீந்திரனின் இயல்பையும் வாழ்வு நோக்கையும் நெருக்கமாக உணர்ந்து கொள்ளவும் தொகுத்துப் பார்க்கவும் முடிகிறது.

எனினும் எக்கதைகளிலுமே நம்பிக்கை வரட்சியோ வெறுமையோ அல்லது விரக்தியோ மேலோங்கவில்லை. வாழ்க்கையை நேசிக்கும் தீவிர பற்றும் பிடிப்பும் கொண்ட சாமானிய மனிதர்களின் கதைகளே இவை.

கால மாற்றங்களின் பிரதிபலிப்பாகவிருக்கும் யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் கோலங்களுக்கு இவரது கதைகள் புதிய பரிமாணத்தை அளிக்கின்றன.

***ஜி.ரி. கேதாரநாதன்***

163/9B, மிகுந்து மாவத்தை
தெகிவளை
05-03-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பாசம் | 1 |
| 2. | மாற்றம் | 9 |
| 3. | பிறந்த மண் | 17 |
| 4. | சின்ன அரும்பு | 26 |
| 5. | புள்ளிக் கோழி | 34 |
| 6. | அந்திமம் | 44 |
| 7. | மீட்சி | 52 |
| 8. | வேதனை | 61 |
| 9. | வாழ்க்கைப் பயணம் | 69 |
| 10. | தயக்கம் | 77 |
| 11. | மறக்க முடியேல்லை! | 84 |
| 12. | இதம் | 91 |


# I

## பாசம்

'அங்கிள்' என்ற குரல் கேட்டு வேதா மெல்லக் கண் விழித்தார். சூரியவெளிச்சம் கண்களைக் கூசச் செய்தது. சுவரில் மாட்டப் பட்டிருந்த கடிகாரம் நேரம் எட்டு மணி எனக்காட்டியது. மார்கழி மாதம் என்பதால் குளிர் இன்னும் முற்றாக அகலவில்லை. வேதா என அழைக்கப்படும் வேதநாயகம் போர்வையை இழுத்துப் போர்த்தபடி படுத்திருந்தார்.

"அங்கிள் இடியப்பமும் சொதியும் மேசையில வைச்சிருக்கிறன். எழும்பி முகத்தைக் கழுவிப் போட்டுச் சாப்பிடுங்கோ" எனக் கூறிய மலர் கோப்பிக் கோப்பையைக் கட்டிலுக்கு அருகில் வைத்தாள். அவர் இப்போது எழும்பமாட்டார் என்பது அவளுக்குத் தெரியும். எப்படியும் இன்னும் பத்து நிமிடமாவது வேதா படுத்திருப்பார். அதுவரை அவளால் பொறுத்திருக்க முடியாது. வீட்டிலே ஏகப்பட்ட வேலைகள். பிள்ளைகள் இரண்டையும் ஒருவாறு பாடசாலைக்கு அனுப்பி விட்டாள். இனிக் கணவனை வேலைக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதன் பின் வீடு, வளவு என்பவற்றைக் கூட்ட வேண்டும். உடுப்புகள் தோய்க்க வேண்டும். குளித்துவிட்டு மத்தி யானச் சாப்பாட்டுக்கு வேண்டிய அலுவல்களை கவனிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து மணியளவில் றக்கா வீதிப்பக்கம் போனால் மீன் வாங்கலாம். மழை காலம் என்பதால் ஓரா மீன்களும் திருக்கை மீன்களும் மலிவாகக் கிடைக்கும். மலருக்குத் திருக்கை மீன் என்றால் விருப்பம். இறைச்சிக்கறி போன்று சுவையாக இருக்கும். அவளது கணவனுக்கு ஓராமீன் பிடிக்கும். பிள்ளைகள் இறால் என்றால் விரும்பிச் சாப்பிடுவார்கள். வேதா கீளி மீன் தான் சாப்பிடுவார்.

எல்லோரது விருப்பத்தையும் நிறைவேற்றும் வகையில் மீன் வாங்குவது என்பது சிரமமான விடயம். மலர் எப்போதும் வேதாவின் விருப்பத்துக்கே முன்னுரிமை வழங்குவாள். அவளது கணவனின் உழைப்பில் இருந்து கிடைக்கும் பணம் அவர்களின் குடும்பச் செலவைச் சமாளிக்கப் போதுமானதாக இல்லை. வேதா அவளது குடும்பச் செலவுக்கென அவ்வப் போது பணஉதவி செய்வார். மலரின் பிள்ளைகளில் மூத்தவன் நான்காந் தரத்தில் படிக்கிறான். இளையவன் இரண்டாந் தரத்தில் படிக்கிறான். இருவருக்கும் ஒரு சிறங்கையளவு இறால் வாங்கினால் போதும்.

வேதாவுக்கென வைக்கும் கீளி மீன் குளம்பும் பிள்ளைகள் சாப்பிட்டு மிச்சமாக வைக்கும் இறால் பொரியலும் இவளுக்கும் கணவனுக்கும் போதுமானதாக இருக்கும். சில வேளைகளில் வெறும் மீன் குளம்போடு சோறு சாப்பிடுவதுமுண்டு. ஏதோ இப்படியாவது சாப்பிடக் கிடைத்ததே என எண்ணி மலர் திருப்திப் படுவாள்.

மலரின் கணவன் சுரேஷ் கிளிநொச்சியில் முச்சக்கரவண்டி சாரதியாக இருந்தான். அதில் கிடைக்கும் வருமானம் அவர்களின் அன்றாடச் சீவியத்துக்குப் போதுமானதாக இருந்தது.

யுத்தம் ஆரம்பமானபோது அவர்கள் மிகுந்த சிரமங்களை அனுபவித்தனர். குண்டுகளுக்கு அஞ்சி ஒவ்வொரு இடமாக ஓடிக் கொண்டிருந்தனர். அப்படி ஓடும்போதுதான் மிதிவெடியில் அகப் பட்டுச் சுரேஷ் தன் கால்களில் ஒன்றை இழந்தான். இது மலரை மிகவும் பாதித்தது. கால் இல்லாவிட்டாலும் அவன் உயிரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறான் என எண்ணி அவள் ஆறுதலடைந்தாள். போர் முடிவடைந்த பின்னர் சிலகாலம் நலன்புரி முகாம்களில் இருந்தனர். பிறகு யாழ்ப்பாணம் செல்ல முடிவெடுத்தனர்.

யாழ்ப்பாணம் வந்த மலரின் குடும்பத்துக்கு வேதா தனது வளவில் இருக்க இடந்தந்தார். சுண்டுக்குளியில் அவரது வீட்டுக்கு அருகில் கொட்டில் ஒன்றை அமைத்து அங்கே குடியிருந்தனர்.

ஊன்றுகோலை எடுத்து சுரேஷிடம் கொடுத்தவள் அவனைக் கைத்தாங்கலாக வாசல்வரை கூட்டி வந்தாள்.

"என்ன அப்படிப் பாக்கிறீர்." சுரேஷ் கேட்டான்.

"ஒன்றுமில்லை." அவள் கூறினாள்.

"எனக்குக் கால் இல்லாமல் போயிட்டுதே என்று கவலையே."

"கால் போனாலும் ஆண்டவர் உங்கட உயிரைக் காப்பாற்றிப் போட்டார்."

"இன்றைக்கு செவ்வாய்க் கிழமை. அந்தோனியாற்றை நாள்." இப்படிச் சுரேஷ் சொன்னான்.

"அந்தோனியார் கோயிலுக்கும் கனநாளாய்ப்போகேல்லை" என மலர் கூறினாள்.

"பின்னேரம் பாசையூர் அந்தோனியார் கோயிலுக்குப் போவம்." அவன் கூறியதை அவள் ஆமோதித்தாள்.

யாழ் நகரில் உள்ள கடையொன்றில் சுரேஷ் வேலை பார்த்தான். அவன் ஊன்றுகோலை ஊன்றி மெதுவாக நடந்து போவதை இவள் பார்த்துக் கொண்டிருந்தாள். கம்பீரமாக நடந்த கணவன் ஊன்றுகோலுடன் நடப்பதைப் பார்த்துக் கண் கலங்கினாள். தெருவில் போகிறவர்கள் யாரும் தன்னைப் பார்த்துவிடக் கூடாது என எண்ணியவள் சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்தாள்.



தெருக்கோடியில் சுரேஷின் உருவம் மறைந்ததும் படலையைச் சாத்தினாள்.

இப்போது அவளுக்கு வேதாவின் நினைவு வந்தது.

மெல்லக் கட்டிலை விட்டு எழும்பிய வேதா கோப்பிக் கோப்பையை எடுத்து வாயில் வைத்தார். அது ஆறிப் போயிருந்தது. மலர் எழுப்பிய போதே எழும்பியிருக்கலாம். அவரது வயோதிபம் அதற்கு இடங் கொடுக்கவில்லை. ஆறிய கோப்பியைக் குடித்தவர் கொல்லைப்புறம் போனார். பல்துலக்க நினைத்தவர் கோடியில் நின்ற வேப்பமரத்திலிருந்து குச்சியொன்றை முறித்தார். இலைகளில் படிந்திருந்த பனித்துளிகள் இவரது உடலில் தெறித்து ஒரு வித சிலிர்ப்பை ஏற்படுத்தின.

நேற்று இரவு பனி அதிகம் பெய்திருந்தது. பனிப்பொழிவின் தாக்கம் நிலத்திலும் தெரிந்தது. பனி புற்களை மூடியிருந்தது. அவற்றின் மீது கால் வைத்து நடப்பது அவருக்கு உற்சாகத்தைத் தந்தது.

வேதாவின் மகள் கனடாவில் வசிக்கிறாள். நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக மகள் வெளிநாட்டுக்குப் புலம்பெயர நேர்ந்தது. கையில் உள்ளவற்றைச் செலவழித்து வேதாவும் மனைவியும் மகளை வெளிநாட்டு மாப்பிளைக்குக் கலியாணம் செய்து வைத்தனர்.

வேதாவின் மனைவி மேரி இருந்தவரை அவருக்கு எந்தக் குறையும் இருக்கவில்லை. ஆனால் அவள் இறந்த பின் அவர் தனிமையாகி விட்டார்.

அவரது மகள் ஸ்ரெலா அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைப்பாள். நாட்டில் தற்போது பிரச்சினைகள் இல்லை. மகள் ஒருமுறை வந்து போனால் மனதுக்கு ஆறுதலாக இருக்கும். பேரக் குழந்தைகளையும் பார்க்கலாம் இப்படி அவர் எண்ணுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவரது எண்ணத்தை ஸ்ரெலா புரிந்து கொண்ட தாகத் தெரியவில்லை. வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்கள் இப்போது கூடுதலாக இங்கு வந்து போகின்றனர். அப்படி வரும் உறவினர்கள் இவரது வீட்டுக்கும் வருவார்கள்.

அப்படித்தான் அன்று அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த உறவினர் ஒருவர் இவரைப் பார்க்க வந்திருந்தார்.

"இந்த முறை நத்தாருக்கு மகள் வருவா தானே." அவர் கேட்டதற்கு இவரால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

"அவையளுக்கும் அங்க வேலையள் கூட, வாறதென்றால் கனக்க காசும் செலவாகுமெல்லே." இவர் இவ்வாறு கூறினார்.

"போனதுக்கு இன்னும் இஞ்சாலை வரேலைத்தானே. ஒருக்கா வந்திட்டுப் போகச் சொல்லிக் கேளுங்கோவன்." இப்படி அந்த உறவினர் கூறிச் சென்றார்.

வேதா தனது ஆதங்கத்தை எத்தனையோ முறை மகளிடம் சொல்லிப் போட்டார். அப்படிச் சொல்லும் போதெல்லாம் ஸ்ரெலா ஏதாவது ஒரு சாட்டுச் சொல்லி இவரைச் சமாளிப்பாள்.

"அப்பா நீங்கள் கனடாவுக்கு வந்து எங்களோட இருங்கோ." ஸ்ரெலா போனவாரம் தொலைபேசியில் கதைக்கும் போதும் இவ்வாறு கூறினாள். வேதாவுக்கு வெளிநாடு போவதில் விருப்ப மில்லை.

"பிள்ளை நான் கனடா வரேல்லை. அந்தக் குளிரை என்னாலை தாங்கேலாது" என அவர் கூறினார்.

"இஞ்ச எவ்வளவு வயது போனவையள் எல்லாம் வந்திருக் கினம். நீங்களும் எங்களோட வந்திடுங்கோ" என்று ஸ்ரெலா கெஞ்சியது இவரது நினைவுக்கு வந்தது.

மகள் தன்மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறாள் என்பது வேதாவுக்குத் தெரியும். ஆனால் தான் அங்கு போய் என்ன



செய்வது. மகளும் மருமகனும் வேலைக்குப் போய்விடுவார்கள். அவர்கள் வரும் வரை அவர் தொலைக்காட்சியே கதி என்று இருக்க வேண்டும். போதாக் குறைக்குக் குளிரைப் போக்க தடிப்பமான உடுப்புக்கள், இவை எல்லாம் தனக்குச் சரிப்பட்டு வராது என வேதா எண்ணினார்.

அவர் ஸ்ரெலாவை விருப்பத்தோடு வெளிநாட்டு மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்து வைக்கவில்லை. அன்று நாட்டில் காணப்பட்ட யுத்த நிலைமை அவரை அவ்வாறு சிந்திக்க வைத்தது.

வெளிநாடுகளுக்குப் போனவர்கள் இனி இங்கே திரும்பி வரமாட்டார்கள். தொண்ணூறுகளின் பிற்பகுதியில் யாழ் குடா நாட்டை விட்டுக் கொழும்புக்குச் சென்றவர்களே யாழ்ப்பாணத் துக்குத் திரும்ப விரும்பாத போது வெளிநாடுகளில் வாழ்பவர்கள் இங்கே வருவார்களா என வேதா எண்ணினார்.

"அங்கிள் சாப்பாட்டை வைச்சுக் கொண்டு என்ன யோசிக் கிறியள்" என மலர் கேட்டதற்கு "ஒன்றுமில்லை" எனச் சொல்லிச் சமாளிக்க முயன்றார். ஆனால் அவரால் முடியவில்லை. தன்மீது பாசம் கொண்டுள்ள அவளிடம் பேசுவதன் மூலம் தன் மனம் ஆறுதலடையும் என எண்ணினார்.

"வாற ஞாயிற்றுக்கிழமை நத்தார். யேசுபாலன் அவதரித்த நாள்." இப்படி வேதா கூறினார்.

"நாட்டில பிரச்சினை இல்லை என்றதாலை நள்ளிரவுப் பிராத்தனை எல்லாம் இந்த முறை சிறப்பாய் நடக்கும்" மலர் சொன்னாள்.

"அந்தச் சந்தோசமான நேரத்தில என்ர ஸ்ரெலா என்னோட இருந்தால்......."

அவர் முடிக்கவில்லை.

"அங்கிள் உங்கட மகள் வந்தாலும் வருவா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளை நீ என்னை ஆறுதல் படுத்துறத்துக்காகச் சொல்லுறாய். ஆனால் எனக்குத் தெரியும் அவள் இஞ்ச வரமாட்டாள்."

"மகள் வராட்டிலும் நாங்கள் உங்களோட இருக்கிறந்தானே." அவள் இவ்வாறு கூறினாள்.

"ஓம்பிள்ளை, உன்ரஅப்பாவா நினைச்சு என்னைப் பாக்கிறாய். நானும் உன்னை என்ர மகளாத்தான் நினைக்கிறன். ஆண்டவர் யேசுதான் உங்களை என்னட்ட அனுப்பி வைச்சிருக்கிறார். இந்த நத்தார் ஆதரவற்ற எனக்கு அர்த்தமுள்ளதாய் அமையப் போகுது."

இப்படி வேதா கூறினார். அவரது கண்களில் இருந்து வழிந்த கண்ணீரை மகளின் பாசத்தோடு மலர் கைகளால் துடைத்து விட்டாள்.

*(வண்ண வானவில் டிசம்பர் 2011)*

# 2

# மாற்றம்

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அந்த அச்சகம் அமைந்திருந்தது. விமலன் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தான். தேர்வின் போது வினாக்கள் கேட்கப்பட்டன. அவன் அவற்றுக்கு முடிந்தவரை பதிலளித்தான்.

"உம்மட வீட்டில எத்தனை பேர்." முகாமையாளர் கேட்டார்.

"ஐந்து பேர்."

"விபரமாய்ச் சொல்லும்"

"அம்மா, அப்பா, நான், இரண்டு தங்கச்சிமார்." இப்படி இவன் கூறினான்.

"அப்பா, என்ன வேலை செய்யிறார்."

முகாமையாளர் கேட்டார்.

"தோட்டம்" என இவன் கூறினான்.

முகாமையாளர் அவனிடம் திருநெல்வேலியில் தனக்குத் தெரிந்த பிரமுகர்கள் சிலரது பெயர்களைச் சொன்னார். இவனிடம் அவர்களைத் தெரியுமா எனக் கேட்டார். விமலன் அவர்களைத் தெரியும் எனச் சொன்னான். அவர்களில் ஒருவர் தனது உறவினர் எனவும் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்முகத் தேர்வு முடிந்து ஒரு மாதத்துக்கு பின்னர் இவனுக்குக் கடிதம் வந்தது. விமலன் அச்சகத்தில் வேலைக்குச் சேர்ந்தான். அச்சிடப்போகும் பிரதிகளில் காணப்படும் எழுத்துப் பிழைகளைத் திருத்த வேண்டும். இவனுக்கு ஒப்புநோக்குநர் பணி வழங்கப் பட்டது.

இவன் வேலைக்குச் சேர்ந்த முதல்நாள் விமலனிடம் பலரும் பல கேள்விகளைக் கேட்டனர். அவனுக்கு அது மற்றுமொரு நேர்முகப்பரீட்சை போன்று இருந்தது. அவனது சாதியை அறிந்து கொள்வதில் அவர்கள் ஆர்வமாக இருந்தனர். ஆனால் முகாமை யாளரைப் போலவே இவர்களும் அதனை நேரடியாக கேட்க வில்லை.

ஆரம்பத்தில் அச்சுப் பிழைகளைத் திருத்தும் பணி விமலனுக்குத் தரப்படவில்லை. தலைமை ஒப்புநோக்குநர் கையெழுத்துப் பிரதிகளை வாசிக்குமாறு இவனிடம் கூறினார்.

இவன் இலங்கை வானொலி செய்தி வாசிப்பாளர் போன்று வாசித்தான்.

“என்ன றேடியோவில செய்தி வாசிக்கிறதா எண்ணமே அதுக்கெல்லாம் ஒரு யோகம் வேணும்.”

இப்படித் தலைமை ஒப்புநோக்குநர் கூறினார். ஏனையோர் இவனைப் பார்த்துச் சிரித்தனர். விமலனுக்கு அவமானமாக இருந்தது.

“நீர் வேகமா வாசிச்சால் என்னால திருத்தேலாது” எனச் சித்ரா கூறினாள். இவன் ஆறுதலாக வாசித்தான்.

“வாயிக்கை என்ன கொழுக்கட்டையே” என மைதிலி கேட்டாள். மீண்டும் சிரிப்பு. இவர்கள் தன்னைப் பகிடிவதை செய்கிறார் களோ என விமலன் நினைத்தான். அவர்கள் திருப்திப்படும் வகையில் எப்படி வாசிப்பது என எண்ணிக் குழம்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அச்சகத்தில் ஐந்துபேர் ஒப்புநோக்குநர்களாக வேலை பார்த்தனர். தலைமை ஒப்புநோக்குநர் யோகநாதன் ஆளுமை யற்றவராக இருந்தார். அவரது ஆளுமைக் குறைபாட்டை மைதிலியும் சித்ராவும் நன்கு பயன்படுத்தினர். அவர்கள் என்ன சொன்னாலும் அவர் கேட்பார். பல ஆண்களிடம் இப்படியான பலயீனம் இருப்பதை இவன் கண்டிருக்கிறான்.

அந்தப் பெண்கள் இருவரோடும் அவதானமாகப் பழகுமாறு சண்முகம் இவனிடம் கூறினார். அவரும் விமலனோடு ஒப்பு நோக்குநராக வேலை செய்பவர்.

அச்சுப் பிரதிகளில் பிழை திருத்துவதற்காக இவர்களுக்கு அச்சக நிர்வாகத்தால் சிவப்புப் பேனாக்கள் வழங்கப்பட்டிருந்தன. விமலனுக்கு அச்சுப் பிழைகளைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது. இவன் திருத்திய பிரதிகளை மைதிலியோ, சித்ராவோ மீண்டும் சரி பார்த்தனர்.

அப்படிப் பார்க்கும் போது ஏதாவது பிழைகள் தென்படும். இவர்கள் தலைமை ஒப்புநோக்குநர் யோகநாதனிடம் ஒன்றைப் பத்தாக்கிக் கூறிவிடுவர். இதனால் இவன் அடிக்கடி அவரிடம் ஏச்சு வாங்கினான்.

விமலன் கூடுதலாகக் கையெழுத்துப் பிரதிகளையே வாசிப்பான். சண்முகம் திருத்துவார் அல்லது மைதிலியோ, சித்ராவோ திருத்து வார்கள். சண்முகம் திருத்தினால் பிரச்சினை இருக்காது. விமலன் வாசிப்பதை விளங்கிக் கொண்டு திருத்துவார். மைதிலியும் சித்ராவும் இவன் வாசிப்பில் குறை கூறினர்.

இவனுக்குச் சண்முகத்தைப் பிடித்திருந்தது. அவர் விமலனோடு அன்பாகப் பழகினார். அச்சுப் பிரதிகளில் எழுத்துப் பிழைகளை எப்படித் திருத்துவது எனக் காட்டித் தந்தார். ஆரோடும் எந்தச் சோலிக்கும் போகமாட்டார்.



விமலன் அவரோடு சேர்ந்து சாப்பிடப் போவான். சண்முகம் சைவ உணவே உண்பார். இருவரும் மலாயன் கபேக்குப் போய்ச் சாப்பிடுவார்கள்.

சண்முகத்தின் வீடு சித்தன்கேணியிலிருந்தது. அவர் அச்சகத் துக்குச் சைக்கிளில் வருவார். காலையில் நேரத்துடன் வேலைக்கு வந்து விடுவார்.

சண்முகம் மத்தியானம் சோறு சாப்பிடுவதில்லை. வடையும் பிளேன்ரீயும் மட்டுமே எடுப்பார். விமலன் சோறு சாப்பிடுவான்.

சோறு சாப்பிட்டால் நித்திரை வரும். இவன் கேட்காமலேயே அவர் சொல்லுவார். விமலனுக்கு அவரது வீட்டு நிலைமை தெரிந் திருந்தது. சண்முகத்தின் உழைப்பை நம்பி மனைவியும் நான்கு பிள்ளைகளும் உள்ளனர். அச்சகத்தில் கிடைக்கும் சொற்ப ஊதியம் போதுமானதாக இல்லை. எழுத்துப் பிழை பார்ப்பதைத் தவிர அவருக்கு வேறெந்த வேலையுந் தெரியாது. இதை அவரே அவனிடம் கூறியிருக்கிறார். சண்முகம் படித்து முடித்தவுடன் அச்சக வேலையில் சேர்ந்து விட்டார். இந்த ஒப்புநோக்குநர் வேலையை நம்பியே அவருக்குப் பெண் கொடுத்தார்கள்.

சண்முகம் சீதனம் என்று எதையும் கேட்கவில்லை. பெண்ணின் பெற்றோர் சீவிய உரிருத்து வைத்து எழுதிக் கொடுத்த வீட்டையும் வளவையும் பெற்றுக் கொண்டார்.

ஒன்றரைப் பரப்புக் காணியில் அந்த வீடு அமைந்திருந்தது. வீடு என்றால் கல்வீடு தான் நினைவுக்கு வரும். ஆனால் சண்முகத் துக்கு வழங்கப்பட்ட வீடு மண்ணாலுந் தென்னந்தட்டிகளாலும் கட்டப்பட்டது. மண்ணினால் கட்டப்பட்ட திண்ணை சுற்றிவரத் தென்னந்தட்டிகளால் ஆன மறைப்பு. இப்படித்தான் அவரது வீடு அமைந்திருந்தது.

சண்முகத்திடம் வெற்றிலை, சிகரெட், மது என எந்தப் பழக்கமும் இல்லை. ஆடம்பரமாகச் செலவு செய்யமாட்டார். இரண்டு மாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்புகள். அவரை அவதானித்ததில் இவன் இவற்றைத் தெரிந்து கொண்டான்.

"விமலன்" என அவர் அழைத்தார்.

இவன் சண்முகத்தைப் பார்த்தான்.

"உம்மட்டை ஒரு ஐந்நூறு ரூபா எடுக்கேலுமே. சம்பளத் தன்று திருப்பித் தாறன்." இப்படி சண்முகம் கேட்டார். விமலன் எதுவும் பேசவில்லை. அவரிடம் காசைக் கொடுத்தான். நன்றியுடன் பெற்றுக் கொண்டார். சண்முகம் கைமாற்றாக காசு வாங்கினாலும் சொன்னபடி திருப்பித் தருவார். தருவதில் கஷ்டம் ஏற்பட்டால் சில நாட்கள் கழித்து தருவதாகக் கூறுவார். கொடுக்கல் வாங்கலில் நேர்மையைக் கடைப்பிடித்தார்.

"உமக்கு ஒவ்வொரு மாசமும் 'அட்வான்ஸ்' தரேலாதாம் மனேஜர் என்னோட சத்தம் போடுறார்." இப்படித் தலைமை ஒப்புநோக்குநர் யோகநாதன் கூறினார். இதைக் கேட்டு சண்முகத்தின் முகம் வாடிப் போனது. இவனுக்குச் சண்முகத்தைப் பார்க்கப் பாவமாயிருந்தது. அவரது நிலை தான் எதிர்காலத்தில் தனக்கும் ஏற்படும் என எண்ணினான்.

எவ்வளவு அள்ளினாலும் அட்சய பாத்திரத்தில் அன்னம் குறைவடைவதில்லை என அவன் கேள்விப் பட்டிருக்கிறான். அதே போன்று தான் அவனது வேலையும் காலையில் வேலைக்கு வந்தவுடனேயே மேசையில் புல்லுக் கட்டுப் போல அச்சுப் பிரதிகள் குவிந்து கிடக்கும். திருத்தத் திருத்தப் புதிய அச்சுப்பிரதிகளைத் தலைமை ஒப்புநோக்குநர் தந்து கொண்டு இருப்பார். எழுத்துப் பிழைகளைத் தொடர்ந்து திருத்துவதால் அவன் கண்களில் வலி யெடுத்திருக்கிறது. இப்போதெல்லாம் விமலனுக்கு எந்தப் பத்திரிகையையோ புத்தகத்தையோ வாசித்தால் அதில் உள்ள விடயங்கள் மனதில் பதிவதில்லை. அதில் உள்ள எழுத்துப் பிழை களே அவனால் அவதானிக்கப்படுகிறது.



அந்தளவுக்கு ஒப்புநோக்குநர் வேலை விமலனை மாற்றி விட்டது. இந்த அச்சக வேலைக்கு வராமல் விட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என எண்ணினான். அப்பாவைப் போன்று தோட்டம் செய்தால் இதைவிடக் கூடுதல் வருமானம் கிடைத்திருக்கும். இப்படி எண்ணும் அளவுக்கு ஒப்புநோக்குநர் வேலையில் இவனுக்குச் சலிப்பு ஏற்பட்டு விட்டது.

சம்பள முற்பணம் கிடைக்காதது சண்முகத்துக்குக் கவலையாக இருந்தது. விமலன் அவருக்கு ஆறுதல் கூறினான். தனது சம்பள முற்பணம் நிறுத்தப்பட்டதற்கு மைதிலியே காரணம் எனச் சண்முகம் சொன்னார். அவர் கூறியதை விமலன் ஆமோதித்தான். வாயிக்கை கொழுக்கட்டையே என மைதிலி கேட்டதை அவன் இன்னும் மறக்கவில்லை.

மாதங்கள் உருண்டோடின சண்முகத்தின் நடவடிக்கையில் மாற்றந் தெரிந்தது. அவர் இப்போது கசங்கிய உடைகளை அணிந்து வருவதில்லை. 'அயன்' பண்ணிய உடைகளையே அணிகிறார்.

அவர் மத்தியானம் இவனோடு சாப்பிடச் செல்வதில்லை. அச்சகத்திலேயே இருக்கிறார். வீட்டில் என்ன கஷ்டமோ என இவன் எண்ணினான்.

சண்முகம் இப்போது அச்சகத்தில் வேலை செய்யும் பெண்கள் பற்றிக் குறை கூறுவதில்லை. அச்சுப் பிழை திருத்தும் போது அடிக்கடி மைதிலியை நிமிர்ந்து பார்ப்பார். அவளும் இவரைப் பார்த்துப் புன்னகைப்பாள். அடுத்து வந்த நாட்களில் அச்சக ஊழியர்கள் இது பற்றிக் கதைத்தனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிந்தும் மைதிலி அவரை வளைத்துப் போட்டது சரியல்ல. இப்படி ஊழியர்கள் தமக்குள் பேசிக் கொண்டனர்.

விமலனுக்கு இவ்வாறு கதைப்பது பிடிக்கவில்லை. மற்றவர் களின் தனிப்பட்ட நடத்தையை விமர்சிப்பது நல்லதல்ல என நினைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகம் தனது மகளின் சாமத்தியச் சடங்கிற்கு விமலனையும் அழைத்திருந்தார். சடங்கில் அச்சக ஊழியர்களோடு அவனும் கலந்து கொண்டான்.

மைதிலியும் இவர்களோடு வந்தாள். கிளிப்பச்சை நிறத்தில் பட்டுச் சேலை கட்டியிருந்தாள். மைதீட்டிய கண்கள் அவளின் அழகை அதிகப்படுத்தியிருந்தது. பின்னிய கூந்தலில் மல்லிகைச் சரம் வைத்திருந்தாள். இவன் மைதிலியை ஆசையோடு பார்த்தான்.

சண்முகமும் மனைவியும் இவர்களை வரவேற்றனர். அச்சக ஊழியர்கள் அவரது மனைவியைப் பார்த்தனர். சண்முகம் ஐந்தாவது பிள்ளைக்கும் தகப்பனாகப் போவது தெரிந்தது.

அந்தச் சம்பவத்துக்குப் பின்னர் மைதிலி அவரைப் பார்த்துப் புன்னகைப்பதுமில்லை, அவரோடு கதைப்பதுமில்லை. சண்முகம் பார்த்தாலும் அவள் அவரைப் பார்ப்பதில்லை. விமலன் இப்போது வெளியே சாப்பிடப் போவதில்லை. அச்சகத்திலேயே இருக்கிறான்.

சண்முகம் தனியாகவே சாப்பிடப் போகிறார். முன்னரைப் போன்று வடையும் 'பிளேன்ரீயும்' எடுக்கிறார்.

"மைதிலி விமலனுக்குச் சாப்பாடு கொண்டாறாளாம்." இப்படி அச்சக ஊழியர்கள் கதைத்தது அவரது காதுகளிலும் விழுந்தது.

*(தினகரன் வாரமஞ்சரி, 22.01.2012)*

# 3

# பிறந்த மண்

அவன் வேலைக்காகக் கொழும்புக்கு வந்து பதின்மூன்று வருடங்கள் கடந்து விட்டன. இந்தப் பதின்மூன்று வருடங்களில் வேலையில் நிறைய அனுபவம். பதவி உயர்வுகள். இவை எல்லாம் இருந்தும் மனதில் நிம்மதியில்லை. எதையோ இழந்து விட்டது போன்ற தவிப்பு. நிம்மதியைப் பறிகொடுத்து வாழ்வதான நினைவு.

"துன்பத்துக்குக் காரணம் கடந்த கால நினைவுகளே" என அறிஞர் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி கூறியிருக்கிறார். அதனை அவன் உணராமல் இல்லை. ஆனால் அந்த எண்ணங்களில் இருந்து அவனால் விடுபட முடியவில்லை.

அவன் இரவுகளில் அடிக்கடி நித்திரையின்றித் தவிக்கிறான். இன்றும் அப்படித்தான் குமரனுக்கு நித்திரை வரவில்லை. அருகில் விஜயா நிம்மதியாகத் துயில்கின்றாள். அப்பால் மகனும் அவ்வாறே. பாவம் சிறுவன், அவனுக்கு என்ன தெரியும். கொழும்பிலே காசல் வீதி மகப்பேற்று மருத்துவ மனையில் பிறந்தான். ஆறு மாதக் குழந்தையாக இருந்த போது இவனும் மனைவியும் மகனைக் கிளாலிக் கடல் வழியாக யாழ்ப்பாணம் கொண்டு சென்று உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் காட்டி விட்டு வந்தனர். ஆண்பிள்ளை என்பதால் எல்லோரும் கொஞ்சிக் கூத்தாடினர். தலைப்பிள்ளை ஆண்பிள்ளையாகப் பிறந்தால் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சத்துக்குப் பெருமையாம். இப்படி அவனது சொந்தக்காரர்கள் கூறினர்.

ஆண் ஆதிக்கச் சிந்தனை எவ்வளவு வலுவாக எமது சமூகத்தில் வேரூன்றியுள்ளது என்பதை அவனால் உணர முடிந்தது. ஆண்பிள்ளை பிறந்தால் வீட்டுக் கூரையில் தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வழக்கம் முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்ததாம். குமரனின் ஊரைச் சேர்ந்த பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறான்.

ஆறு மாதக் குழந்தையாக யாழ்ப்பாணம் கொண்டு போனது பற்றி மகன் அறிந்திருக்கவில்லை. மகனுக்கு விடயங்கள் புரியத் தொடங்கிய போது "யாழ்ப்பாணம் எங்க இருக்கப்பா."

"வடக்குப் பக்கம்"

"அப்பா வடக்கு என்றால் எந்தப் பக்கம்?" இவன் விளங்கப் படுத்துவான். பதிலில் திருப்தியுறாதவனாக மகனது வினாக்கள் தொடரும்.

"ஏன் அப்பா யாழ்ப்பாணத்தில சண்டை நடக்குது?"

மகனது கேள்விக்கான விடை இவனுக்குந் தெரியவில்லை. மகனின் வினாக்கள் அறிவுபூர்வமானவையாக இருக்கும்.

குழந்தை பிறந்தபோது என்ன பெயர் வைக்கலாம் எனக் குமரன் அதிகம் யோசிக்கவில்லை. தன் பேரனின் பெயரை மகனுக்கு வைக்க விரும்பினான். ஆறுமுகம் என்ற பெயர் மனைவிக்குப் பிடிக்கவில்லை.

ஆண் ஆதிக்கத்தை நிலை நிறுத்த அவன் முயல்வதாக விஜயா குற்றஞ் சாட்டினாள். திராவிடர்கள் தாய்வழிச் சமூகம் எனக் கூறினாள். அவள் அவனை விடப் படித்தவள். அதனால் விஜயாவின் கருத்தைக் குமரன் ஏற்றுக் கொண்டான். எண் சாத்திர முறைப்படி மகனுக்கு 'டுஷான்' எனப் பெயர் வைக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெயர் குமரனுக்குக் குத்துச் சண்டையை நினைவு படுத்தியது. ஆனாலும் பெயரை மாற்றும் அதிகாரம் அவனுக்குக் கிடையாது. அந்த அதிகாரம் விஜயாவிடமே இருந்தது.

'டுஷான்' பாலர் பாடசாலையில் படிக்கிறான். மனைவி தனியார் நிறுவனமொன்றில் வேலை பார்க்கிறாள். அவர்களது திருமணம் நடைபெற்றுப் பத்து வருடங்களாகி விட்டன. மனைவி விஜயா யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். அங்கே பிறந்து அங்குள்ள பிரபல பாடசாலையில் படித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானவள். ஒரு கலைப்பட்டதாரி.

விஜயாவால் எப்படி யாழ்ப்பாணத்தை அவ்வளவு விரைவாக மறக்க முடிந்தது. அவனுக்குப் புரியவில்லை. அவளைப் போலத் தான் பலர் மாற்றங்களுக்கு முகங்கொடுத்துத் தம்மை மாற்றிக் கொண்டு விட்டார்கள்.

காங்கேசன்துறை வீதியில் தட்டாதெருச் சந்தியில் இருந்து அரசடி வீதி வழியாகச் சென்றால் கந்தர்மடம் சந்தியை அடைய முடியும். இடையே கஸ்தூரியார் வீதி பிறவுண் வீதி என்பன அரசடி வீதியோடு இணைப்பை ஏற்படுத்துகின்றன. கந்தர்மடம் சந்தியில் பலாலி வீதியைக் குறுக்கறுத்து அரசடி வீதி செல்கிறது. அப்படிச் செல்லும் போது இடது பக்கத்தில் வருவது தான் பழம் வீதி. அந்த வீதியின் ஆரம்பத்திலே பிள்ளையார் கோயிலொன்றுள்ளது.

பழம் வீதிப் பிள்ளையார் என்றால் எல்லோருக்குந் தெரியும். அந்தப் பிள்ளையார் கோயிலில்த் தான் இவர்களது திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்றுச் சில நாட்களிலேயே விஜயா கொழும்புக்குப் போவோம் என அவனை அவசரப்படுத்தினாள். குமரன் கலியாணத்துக்காக நீண்ட நாள் லீவு எடுத்தே யாழ்ப்பாணம் வந்திருந்தான். ஆனாலும் அவளது அவசரம் அவனுக்கும் தொற்றிக் கொண்டது. உறவினர்கள் பலர் விருந்துக்கு அழைத்தும் அவற்றை எல்லாம் தவிர்த்து ஊரியான் பாதை வழியாகக் கொழும்பு வந்தார்கள்.



ஒரு மாதம் 'லொட்ஜில்' தங்கினார்கள். ஞாயிறு பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களைப் பார்த்து 'அனெக்ஸ்' ஒன்றில் வாடகைக்குக் குடியேறினர். விஜயாவுக்கு கொழும்பு பிடித்திருந்தது. காலி முகத்திடலுக்கும் விகாரமாதேவி பூங்காவுக்கும் அவள் அடிக்கடி போக விரும்பினாள். குமரன் அவள் விரும்பிய இடமெல்லாம் கூட்டிச் சென்றான்.

"குமரன், நீங்கள் கொழும்பில வேலை பாக்கிறியள் என்றதால தான், நான் இந்தத் திருமணத்துக்குச் சம்மதிச்சனான்."

"ஏன் அப்படிச் சொல்லுறீர்."

"எனக்கு யாழ்ப்பாணம் பிடிக்கேல்ல."

"ஏன்" என இவன் கேட்டான்.

"அங்க சண்டை நடக்குது."

"சண்டை இல்லை என்றால் அங்க இருக்க விருப்பமே."

"அது பற்றிப் பிறகு யோசிப்பம்." இப்படி விஜயா கூறினாள்.

"எனக்கென்றால் யாழ்ப்பாணத்தில இருக்கத்தான் விருப்பம்."

"அப்ப வேலையை விட்டுப் போட்டுப் போகப் போறியளே."

"அப்படி நான் சொல்லேல்லை. சண்டை முடிஞ்சு சமாதானம் வந்தால் யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் கேட்டுப் போகலாம்." எனக் குமரன் கூறினான்.

"என்னோட 'கம்பசில' படிச்சதுகள் எல்லாம் கொழும்பில சொந்தமா 'பிளற்சில்' வீடு வாங்கிப் போட்டுதுகள்"

"வாங்கட்டுமென்" என இவன் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு முன்னேற வேணும் என்ற ஆசையில்லை. பட்டிக் காடுகள் போல இருக்கப் பாக்கிறியள்" இப்படி விஜயா கூறினாள்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் A-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கண்காணிப் புடன் பகலில் மட்டும் A-9 நெடுஞ்சாலை வழியாக போக்குவரத் துக்கு அனுமதிக்கப்பட்டது.

குமரன் யாழ்ப்பாணம் சென்று வர விரும்பினான். தனது விருப்பத்தை விஜயாவிடம் கூறினான். அவள் "எல்லோருமாகப் போவோம்" எனச் சொன்னாள். விஜயா ஊருக்குச் சென்றுவர சம்மதித்தது இவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

யாழ்ப்பாணம் சென்றால் எங்கே தங்கி நிற்பது? குமரனின் பெற்றோர் அவனது அக்காவுடன் கனடாவில் வசிக்கின்றனர். விஜயாவின் பெற்றோரும் அவளின் தம்பியின் குடும்பத்தோடு வெள்ளவத்தையில் இருக்கின்றனர். நெருங்கிய உறவினர்கள் வெளி நாடுகளிலும் கொழும்பிலும் வாழ்கின்றனர். தூரத்து உறவினர்கள் சிலர் மட்டுமே யாழ்ப்பாணத்தில் உள்ளனர்.

இந்நிலையில் ஊருக்குப் போய் யார் வீட்டில் தங்கி நிற்க முடியும். இது ஒரு பிரச்சினையாக இருந்தது. விஜயா தான் அதற்கு வழி சொன்னாள்.

"ஏன் எங்கட வீட்டில போய் நிற்பம்"

"வாடகைக்கெல்லே குடுத்திருக்கிறம். அதுதான் யோசிக் கிறன்."

"என்ன பெரிய வாடகை. மாசம் அறுநூறு ரூபா. அதுவும் ஒழுங்காத் தாறேல்ல. என்ன மாசக் கணக்கிலேயே போய்த் தங்கப் போறம். ஒரு கிழமை தானே நிற்கப் போறம்."



விஜயா சொல்வது குமரனுக்கு நியாயமாகத் தெரிந்தது. இரவு ரயிலில் வவுனியா சென்று அங்கிருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்றார்கள்.

சோதனைச் சாவடிகளில் இறங்கி ஏறி யாழ்ப்பாணம் போக வேண்டியிருந்தது. யாழ்ப்பாணம் சென்று திருநெல்வேலியை அடைந்த போது பல மாற்றங்கள் தெரிந்தன. வீதிகள் எல்லாம் சின்னதாகி விட்டது போன்ற உணர்வு. கொழும்பு நகரின் வீதி களுடனான பழக்கத்தினால் இது ஏற்பட்டிருக்கலாம் என இவன் எண்ணினான்.

ஊரில் தெரிந்தவர்கள் என்று சிலரையே காணமுடிந்தது. அநேகர் புதுமுகங்களாகத் தெரிந்தனர். அவர்களுக்குப் பழையவர்கள் பற்றித் தெரிந்திருக்கவில்லை. ஆனால் ஒரு உண்மை புலனாகியது. இவனைப் போல பலர் இந்த மண்ணை விட்டு கொழும்புக்கும் வெளிநாடுகளுக்கும் எனப் போய் விட்டார்கள். அப்படிப் போனவர் களில் பலர் மீண்டும் இப்போது திரும்பி வருகிறார்கள். இங்கு வந்து தமது வீடு வளவுகளை விற்பதில் ஆர்வமாகவுள்ளனர். அவசரமாக அந்தக் காரியங்களை முடித்து விட்டு மீண்டும் திரும்பி விடுகிறார்கள்.

சமாதானம் நிலைக்கும் என்ற நம்பிக்கை பலரிடம் காணப் படவில்லை. இவனோடு பேசியவர்கள் எல்லாம் மீண்டும் எப்போது சண்டை துவங்குமோ என்ற அச்சத்துடனேயே இருந்தனர்.

குமரன் இன்னும் ஒரு கிழமை ஊரில் நிற்க ஆசைப்பட்டான். ஆனால் மனைவியும் மகனும் விரும்பவில்லை.

"இஞ்ச சரியான வெக்கை" இது விஜயாவின் புலம்பல். மனைவியின் புலம்பல் இவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. மரங் களே அற்ற வெறும் கட்டிடங்களால் நிரப்பப்பட்ட வாகனங்களின் புகை நிரம்பிய கொழும்பு மாநகரை விட இயற்கையின் சுகந்தம் இங்கு இதமாக இருந்தது. இதை விஜயாவிடம் விளங்கப்படுத்த முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் கொழும்பில் பிறந்தவன். டுஷானுக்கு ஊர் புதிது. இங்குள்ளவர்கள் புதிது.

"அப்பா, யாழ்ப்பாணத்தில் நிறைய கோயில்கள் இருக்கு" என மகன் ஆச்சரியப்பட்டான். அதுதான் எங்கட பண்பாடு. இந்த மண்ணின் மகத்துவம். ஆனால் இந்த உண்மைகளை மறந்து நாங்கள் எங்கேயோ ஓடிக் கொண்டிருக்கிறம் என இவன் எண்ணினான்.

கொழும்பு திரும்பி ஒரு கிழமையாகி விட்டது. அன்று விஜயா இவனிடம் அன்பாக நடந்து கொண்டாள். திருமணமாகிய புதிதில் இவ்வாறு நடந்து கொண்டதுண்டு.

ஆனால் அந்த அன்பை இப்போது அவளிடம் எதிர்பார்க்க முடிவதில்லை. இவன் எதிர்பார்த்துப் பலநாட்கள் தோற்றுப் போயிருக்கிறான். அவமானத்தால் மனந்துவண்டு போயிருக்கிறான். விஜயா தான் விரும்பிய போது மட்டுமே குமரனோடு உறவு கொண்டாள். இவன் விருப்பத்தோடு அணுகும்போது புறக்கணித்து விடுவாள். ஆண் ஆதிக்கச் சிந்தனையில் இருந்து விடுபடுவதற்கு இவ்வாறான செயற்பாடு அவசியம் என நினைக்கிறாளோ என அவன் யோசித்ததுண்டு.

இன்று விஜயாவின் நடத்தையில் மாறுதல் தெரிகிறது.

"குமரன், எங்களுக்கென்று கொழும்பில் சொந்தமா ஒரு வீடிருந்தால் எவ்வளவு நல்லது."

"எனக்கும் விருப்பந்தான் விஜயா." அவனது பதில் அவளுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது.

"அப்படி என்றால் எங்கட யாழ்ப்பாண வீட்டை வித்துப் போட்டு கொஞ்சம் காசைப் போட்டு கொழும்பில ஒரு வீடு வாங்குவம்" அந்த வார்த்தைகள் அவன் நெஞ்சை ஈட்டியால் பிளப்பது போல் இருந்தது.

"நீர் என்ன சொல்லுறீர்".



"சமாதான ஒப்பந்தம் முறிவடைஞ்சு பிரச்சினைகள் தொடங்கினாப் பிறகு வீட்டை விக்கேலாது."

அவள் கூறினாள்.

"எங்களுக்கென்று இருக்கிற வீட்டை ஏன் விக்கவேணும்".

"இப்ப எங்கட சனங்கள் எல்லாம் அங்க உள்ள வீடு வளவுகளைப் போய் வித்துப் போட்டு வந்து இஞ்சால தானே வாங்குதுகள்".

"ஆரும் வாங்கட்டும்."

"நீங்கள் உப்பிடித்தான் நெடுகச் சொல்லுறியள். இப்ப நிலைமை நல்லாய் இருக்கு. நான் வீட்டை விக்கிறதாய் முடிவு செய்திட்டன்." விஜயா பிடிவாதக்காரி. தன்ர முடிவை மாத்த மாட்டாள். இது அவனுக்குத் தெரியும். யாழ்ப்பாணம் போய் வருவோம் என்ற போது அவள் உடன்பட்டு வந்ததன் நோக்கமும் குமரனுக்கு இப்போது புரிந்தது.

யாழ்ப்பாணத்தில் வீடுகள் என்ன விலைக்கு விற்கப்படுகின்றன. நிலைமை எப்படி இருக்கிறது. வீட்டை யாருக்கு விற்கலாம். இவற்றை அறிவதற்காகவே விஜயா யாழ்ப்பாணம் வந்திருக்கிறாள். இப்படி அவன் எண்ணினான்.

வேலை நிமித்தம் கொழும்பில் இருந்தாலும் ஓய்வு பெற்ற பின்னர் யாழ்ப்பாணம் சென்று வாழவே அவன் ஆசைப் பட்டான்.

மண்ணும் கல்லும் சீமெந்தும் கலந்து கட்டப்பட்ட கட்டிடமாக மட்டும் அவன் வீட்டை நினைக்கவில்லை. அதற்கும் அப்பால் அர்த்தம் நிறைந்த ஒன்றாக அதனை எண்ணுகின்றான்.

அந்த எண்ணத்தைச் செயற்படுத்த விஜயாவின் தயவு வேண்டும். அவள் ஒருபோதும் தனது விருப்பத்துக்கு இணங்கப் போவதில்லை என்பது அவனுக்குத் தெரியும்.

*(வீரகேசரி வாரவெளியீடு 13. 10. 2002)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# சின்ன அரும்பு

அந்த அழைப்பிதழ் மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டிருந்தது. கலைவிழா எனப் பொன் நிறத்தில் எழுதப்பட்டிருந்தது. மகள் மஞ்சுவின் பாடசாலையில் கலைவிழா. இது அதற்கான அழைப் பிதழ். அதனை அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்க்கிறேன். இதனை அச்சிடவே அதிக செலவாகியிருக்கும்.

"அப்பா, எல்லாப் பிள்ளையளின்ர அம்மா, அப்பாவும் கட்டாயம் கலைவிழாவுக்கு வரவேணும் என்று 'மிஸ்' சொன்னவ" மகள் மஞ்சு கூறினாள்.

"அப்பாவுக்கு வேலை. நேரம் வராது. நீங்கள் அம்மாவைக் கூட்டிக்கொண்டு போங்கோ".

அந்தப் பிஞ்சு உள்ளம் நோகாமல் இருக்க இப்படிக் கூறினேன். ஆனால் காரணம் வேறாக இருந்தது.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்பாகவே மஞ்சுவின் பாடசாலையில் கலைவிழாவுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகியிருந்தன. எனது மகள் படிப்பில் மட்டுமல்ல கலைத்துறையிலும் கெட்டிக்காரி. பாலர் பாடசாலையில் படிக்கும்போதே நடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றி பரிசுகளும் பெற்றிருக்கிறாள். பரதநாட்டியம் பழகுவது செலவு மிகுந்த விடயம் என்பதால் அவளைப் பரதம் பயில அனுப்பவில்லை. சங்கீதம் பயில்கின்றாள். சங்கீதத்தை யாரும் இலவசமாகச் சொல்லிக் கொடுக்கவில்லை. இருந்த போதும் பரதநாட்டியத்துடன் ஒப்பிடும் போது கர்நாடக சங்கீதம் கற்பது செலவு குறைந்ததாக இருந்தது.

இந்த வருடம் பாடசாலைக் கலைவிழா பெரிய அளவில் கொண்டாடப்பட இருப்பதாக மனைவி மாலதி சொன்னாள். கலைவிழா ஏற்பாடு தொடர்பான கூட்டத்துக்கு அவள் சென்று வந்திருந்தாள். இப்படியான கூட்டங்களுக்கு நான் செல்வதில்லை. கூடியவரை இவற்றைத் தவிர்த்தே வருகிறேன். பாடசாலைகளில் நடைபெறும் இவ்வாறான கூட்டங்களைக் காசு பிடுங்குவதற்கான கூட்டங்களாகவே நான் கருதுகிறேன்.

"நாட்டில பிரச்சினை இல்லை என்றதால கலைவிழாவைப் பின்னேரம் ஆரம்பிச்சு இரவு எட்டு மணி வரை நடத்தப் போயினமாம்" மாலதி சொன்னாள்.

"ஓம் அது நல்லதுதானே. இப்ப சோதனைச் சாவடிகளும் இல்லை. சோதனைகளும் இல்லை." இப்படி நான் கூற,

"தெருவில சோதனை இல்லை. ஆனால் மனசில"

"என்னப்பா என்ன சொல்லுறீர்."

"கலை விழாவுக்குக் காசு தேவையாம்."

"எவ்வளவு கேட்கினம்".

"ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோரும் இரண்டாயிரம் ரூபா கட்டவேணும் என்று பாடசாலை அதிபர் சொல்லுறார்."

மாலதி இப்படிக் கூறினாள். இரண்டாயிரம் ரூபாவுக்கு நான் எங்க போவன். கொழும்பில சீவிக்கிறதுக்கு என்ர மாதச் சம்பளமே போதாமல் இருக்கு. வீட்டு வாடகை, மின்சாரக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம். இவை போதாதென்று செல்போன் கட்டணம். சில வேளைகளில் இந்தச் செல்போனைத் தூக்கி எறியவேணும் போல இருக்கும். என்ன செய்யிறது. விரும்பியோ விரும்பாமலோ இந்தச் சனியனைப் பாவிக்க வேண்டிய கட்டாயம். செல்போன் சனியனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிக்காவிட்டால் அலுவலகத்தில் உள்ளதுகள் என்னை வேலையில் இருந்தே தூக்கிவிடுங்கள். காலத்துக்கேற்ற முறையில வாழ்க்கையை மாற்றிக் கொள்ள வேணுமாம். பட்டிக்காடுகள் போல இருக்கக் கூடாதாம். என்ர மேலதிகாரிகள் அடிக்கடி உபதேசம் செய்வினம். ஏனென்றால் அவை மேலதிகாரிகள். இலவசமாய் அவையளால செய்யக்கூடியது இந்த உபதேசந்தான்.

எல்லாருக்கும் பவிசாய் வாழ ஆசைதான். ஆரோ மாட்டோம் எண்டோ சொல்லியினம். வாங்குற சம்பளக் காசு அரை மாசத்துக்கே காணாது. ஏதோ அப்படி இப்படி என்று வேற வேலைகள் செய்யிறதால அரைவயிறுக் கஞ்சி குடிக்கக் கூடியதாய் இருக்கு. இந்த அலுவலக மேலதிகாரிகளுக்கு இதுகள் விளங்குமோ. விளங்கினாலும் விளங்காதவை போல நடிப்பினம். சொகுசு வாகனங்களில வந்து போறவை. தங்களுக்கு கீழே உள்ளவை மோட்டார் சைக்கிள்களில வரவேணும் என்று ஆசைப்படியினம். இது எல்லாம் என்னைப் போன்ற ஆட்களின்ர வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற என்று நீங்கள் நினைக்கலாம். அப்படி ஒன்றும் இல்லை. மோட்டார் சைக்கிளில வந்தால் அலுவலகத்துக்கு வேளைக்கே வந்து விடலாமாம். கடன் எடுத்து எண்டாலும் மோட்டார் சைக்கிள் வேண்டட்டாம். அதுக்கான ஏற்பாடுகளை நிர்வாகம் செய்து தருமாம். கடன் எடுக்காமலேயே வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கு. மோட்டார் சைக்கிளும் வாங்கினால் நல்ல சோக்காத்தான் இருக்கும்.

இப்ப இரண்டாயிரத்துக்கு என்ன செய்யிறது. ஏற்கனவே பாட சாலையில நடக்கிற கணினி வகுப்புக்கு மஞ்சுவை விடேல்லை என்றதால அதிபருக்கு என்னிலை கோபம். இப்ப கலை விழாவுக்கு காசு குடுக்காட்டி பாடசாலையை விட்டு மஞ்சுவை நிப்பாட்டினாலும் நிப்பாட்டிவினம். அவை அப்படிச் செய்யக் கூடியவை. அல்லாட்டிப் பாடசாலை நேரத்தில நடக்கிற கணினி வகுப்புக்குக் காசு வேண்டி யினமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னங்கரா இந்த நாட்டுக்கு இலவசக் கல்வியை அறிமுகப் படுத்தினார். அதனால்த் தான் ஏழைகளான அப்புஹாமி, ஐயாத்துரை, அஸ்லம் போன்றவர்களின் பிள்ளைகள் பெரிய படிப்பு படிக்க முடிஞ்சுது. அதனால தான் அவர் மக்களின்ர மனங்களில இன்றைக்கும் நிறைஞ்சிருக்கிறார். எழுத்தறிவிக்கும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் இறைவனாக, இறைவியாகப் போற்றப்பட வேண்டிய வர்கள். இது எந்தக் காலத்துக்கும் பொருந்தும். ஆனால் சிலரின் செயற்பாடுகள் மனதுக்கு வேதனை தருவதாக உள்ளது.

கணினி வகுப்புக்குக் காசு கட்டவில்லை என்பதற்காக மகள் மஞ்சு வகுப்புக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டாள். அவளைப் போல இன்னும் எத்தனையோ பிள்ளைகள்.

"மஞ்சுவின்ர, கையைப் பாத்தனீங்களே" மனைவி மாலதி என்னிடம் கேட்டாள்.

"இல்லை" என்றேன்.

"வகுப்பில ரீச்சர் அடிச்சு கையிரண்டும் சிவத்துப் போச்சு".

என்ர இதயம் வலித்தது. இந்த வலி அதிகமாகி இறந்து விட்டால் நல்லது போல் இருந்தது. ஆனால் என் மகளின் பிஞ்சு முகம் என் எண்ணத்துக்குத் தடை போடுகிறது.

என்ர மஞ்சுவுக்காக என்ர அன்பு மனைவி மாலதிக்காக நான் வாழுவன். எந்தத் துயரத்தையும் தாங்குவன். நான் என் மகளின் கைகளை எடுத்து என் கண்களில் ஒற்றிக் கொண்டேன். என்னையும் மீறிக் கண்ணீர் கசிந்தது. மகள் மஞ்சு ஆதரவாக என் முகத்தைத் துடைத்து விட்டாள்.

"ஏனப்பா அழுகிறியள்".

"ஒன்றுமில்லையம்மா" நான் சமாளிக்கிறேன். என்னால வேறு என்ன செய்ய முடியும். மாலதி மகளின் உள்ளங் கைகளுக்கு நல்லெண்ணெய் தடவினாள்.



"ஈவிரக்கமில்லாமல் இப்படிப் பிள்ளைக்கு அடிக்கிறதே." நான் மாலதிக்குக் கண்ணைக் காட்டினேன். அந்த ஆசிரியை அப்படிக் கடுமையாக நடந்து கொண்டது தவறு. அதே போன்று மஞ்சுவுக்கு விளங்கும் வகையில் அவளது ஆசிரியை பற்றி குறை கூறுவதும் தவறு.

இதனால் மகளுக்கும் ஆசிரியைக்குமான உறவில் இன்னும் பாரிய இடைவெளி ஏற்பட்டு விடலாம். இது மஞ்சுவின் கற்றல் நடவடிக்கைகளிலும் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என நான் பயந்தேன்.

பிள்ளைகளுக்குப் பிரம்பினால் அடிக்கக் கூடாது என்று சட்டத் தில் உள்ளது. அதைப்பற்றிப் பாடசாலை நிர்வாகங்கள் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. கொழும்பு நகரிலே காலை வேளை களில் பாடசாலைகளுக்குப் புத்தகச் சுமைகளுடன் பிரம்புகளையும் கொண்டு செல்லும் மாணவ, மாணவியர்களை சர்வ சாதாரணமாகக் காண முடியும். இதை அவர்கள் மனம் விரும்பிச் செய்யவில்லை. ஆசிரிய, ஆசிரியைகளின் கட்ட ளைக்குக் கீழ்ப்படிந்து செய்கிறார்கள். இந்தக்காலத்துப் பிள்ளைகள் ஆசிரியர்களை மதிப்பதில்லை எனச் சொல்பவர்கள் உண்மை நிலை தெரியாதவர்கள். ஆசிரியர்களை மதிப்பதால்த் தான் பிரம்பைக் கொடுத்து அடிவாங்குகிறார்கள். சட்டம் எப்படியும் இருக்கட்டும் நாம் எமது கைவரிசையைக் காட்டியே தீருவோம். இப்படித்தான் இந்த ரீச்சர்மார் நினைக்கினம். அடியாத மாடு படியாதாம். மாடுகளுக்கு இது பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால் இப்ப மிருகவதைச் சட்டம் அதையும் தடுத்துப் போட்டுது.

புகழ்பெற்ற எழுத்தாளர் பிரபஞ்சன் பாடசாலைகள் சிறைக் கூடங்களாகவும் ஆசிரியர்கள், சிறைக்காவலர்களாகவும் காணப் படுவதாக கூறுகிறார். வன்முறை மனோபாவம் பிள்ளைகள் மனதில் வளர்வதற்குப் பாடசாலைகளும் காரணம் என்பது பிரபஞ்சனின் கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் நான் மஞ்சுவின் பாடசாலைக்குப் போனேன். ரீச்சரைக் கண்டு கதைச்சன்.

"கம்பியூட்டர் கிளாசுக்குக் காசைக் குடுத்து விட்டிருந்தால் அடி விழுந்திருக்காது." ரீச்சர் என்னிடம் கூறினா.

"அப்படி என்றால் எனக்குத் தான் நீங்கள் அடிக்க வேணும்" நான் ரீச்சரிடம் கூறினேன்.

"உங்களுக்கு அடிக்க முடியாததாலதான் மகளுக்கு அடிச்சனான்."

அந்த வார்த்தைகள் எனக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. கஷ்டப்பட்டு என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். அதிகம் கதைத்தால் மகளைப் பாடசாலையை விட்டு நீக்கி விடலாம். 'டொனேசன்' கொடுத்துப் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு நிறையப் பெற்றோர் காத்திருக்கின்றனர். மஞ்சுவுக்குத் தான் வேறு பாடசாலை கிடைக்காமல் போகலாம்.

இப்போது எனக்குள்ள பிரச்சினை இரண்டாயிரம் ரூபா. பாட சாலைக் கலைவிழா கழுத்தை நெரிப்பது போல் உணர்கிறேன்.

அலுவலகத்தில் உடன் பணிபுரிபவர்களிடம் கேட்கிறேன். பவ்வியமாக மறுக்கின்றனர். மாதக் கடைசி என்பதால் அவர் களிடமும் காசு இல்லாமல் இருக்கலாம். பணம் செலுத்தாததால் மஞ்சுவைக் கலைவிழாவில் சேர்க்கவில்லை. என்ர செல்ல மகள் பங்குபற்றாத விழாவுக்கு நான் லீவு போட்டுப் போக வேணுமே? அப்படிப் போனாலும் கவலைதான் மிஞ்சும். பெற்றோரில் ஒருவராவது போகாவிட்டால் அதனைச் சாட்டாக வைத்து மஞ்சு வுக்குத் தண்டனை கொடுப்பார்கள். இதனால் மனைவி மாலதியை அனுப்பி வைத்தேன்.

"அப்பா, எனக்கு ஒரு பரிசும் கிடைக்கேல்லை" மஞ்சு கூறியது கேட்டும் கேட்காதவனாக இருந்தேன்.



"அப்பா நான் தானே ஒரு நிகழ்ச்சியிலையும் பங்கு பற்றேல்ல. அப்ப எப்படிப் பரிசு தருவினம்" மஞ்சுவே இதையும் கூறினாள்.

"என்ர பிள்ளைக்குப் பரிசு கிடைக்காட்டிலும் அவள் கெட்டிக் காரி." நான் மஞ்சுவை ஆறுதல்படுத்த இந்த வார்த்தைகளைக் கூறினேனா? அல்லது எனது இயலாமையை ஆற்றாமையை வெளிக்காட்டாமல் இருக்க என்னையும் மீறி வெளிவந்த வார்த்தைகளா எனக்கே புரியவில்லை. நான் மகளின் தலையை ஆதரவாகத் தடவினேன்.

*(தினகரன் வாரமஞ்சரி 12.06.2011)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# புள்ளிக் கோழி

யோகன் அலுவலகத்துக்குப் போகும் போதும் அங்கிருந்து வரும்போதும் அந்தக் கடைத்தெரு வழியாகவே பயணிப்பான். கடைத்தெரு மூலையில் கோழிக்கடை இருந்தது. கடையின் முன் புறத்தில் கம்பிகளால் அடைக்கப்பட்ட கூடு. அதில் எப்போதும் கோழிகளைக் காண முடியும். வெள்ளை நிறக் கோழிகளே கூடுதலாகக் காணப்பட்டன. அவை இறைச்சிக் கோழிகளாக இருக்கலாம். அவற்றோடு புள்ளிக் கோழிகளும் சேவல்களும் அந்தக் கூட்டிலே அடைபட்டுக் கிடந்தன.

தாம் அறுபடப் போவதை உணராத சேவல்கள் பேடுகளை கவருவதற்காகத் தமக்கிடையே சண்டையிடும். சில வேளைகளில் அவை கூவும். சேவல்கள் தமது ஆண்மையை பேடுகளுக்கு நிரூபிக்க இப்படியான செயல்களில் ஈடுபட்டன. இவனுக்கு அவற்றைப் பார்க்கப் பாவமாக இருக்கும்.

காலையில் வேலைக்குப் போகும்போது அந்தக் கூட்டில் இருக்கும் கோழிகளை வேலை முடிந்து வரும்போது யோகனால் பார்க்க முடிவதில்லை. ஆனால் வேறு கோழிகளை அங்கே கொண்டு வந்து அடைத்து வைத்திருப்பார்கள்.

இவன் ஏன் கோழிகளை அவதானிக்க வேண்டும். கொழும்பிலே சந்திகள் தோறும் கோழிக் கடைகள் உள்ளன. இறைச்சி வாங்குவ



தற்காக இந்தக் கடைகளுக்கு ஆண்களும் பெண்களும் வருகின்றனர். அப்படி இருக்க இவனுக்கு மட்டும் ஏன் கோழிகள் மீது இப்படி ஒரு கரிசனை. இவன் இது பற்றி எண்ணிப் பார்த்திருக்கிறான். ஆனால் அதற்கான விடை யோகனுக்குத் தெரியவில்லை.

மற்றவர்கள் பார்வையில் அவன் பயந்தாங்கொள்ளி. மனத் துணிவு அற்றவன். அதனால்த் தான் இப்படி நடந்து கொள்கிறான். அவனோடு பழகுகின்றவர்களுக்கு இவ்வாறு தான் எண்ணத் தோன்றும்.

யோகன் சிறுவனாக இருந்தபோது வீட்டின் பின்புறம் இருந்த குப்பைக் கிடங்கிலே தெரு நாயொன்று குட்டி போட்டிருந்தது. ஏனோ இவனுக்கு அந்த நாயையும் குட்டிகளையும் காணப் பிடிக்கவில்லை. "பொம்மரேனியன்" நாய்க்குட்டிகள் என்றால் பஞ்சுக் குவியல் போல பார்க்க அழகாய் இருக்கும். ஆனால் இவைகள் குட்டை பிடித்த குட்டிகளாக இருந்தன. பார்க்க அருவருப் பாகக் காணப்பட்டன. இவன் அந்த நாய்க் குட்டிகளை வெறுத் தான்.

ஒரு நாள் தேநீர் குடிக்கும் போது அந்த விபரீத ஆசை ஏற்பட்டது. சூடான இந்தத் தேநீரை அந்தக் குட்டைபிடித்த நாய்க்குட்டிகள் மீது ஊற்றினால் என்ன? இப்படி எண்ணியவன் அந்த அருவருப்பான சீவன்கள் மீது கொட்டினான். நாய்க்குட்டிகளின் அலறல் சத்தம் அம்மாவுக்குக் கேட்டிருக்க வேண்டும்.

"யோகன், என்ன செய்தனி?"

அம்மாவின் கேள்விக்கு அவன் பதிலேதும் சொல்ல வில்லை. யோகன் என்ன செய்திருப்பான் என்பது அம்மாவுக்கு விளங்கி விட்டது.

"உது பாவம் உப்பிடிச் செய்தால் நீ மறுபிறவியில நாயாத் தான் பிறக்க வேண்டி வரும்." இப்படி அம்மா சொன்னா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சம்பவத்தை இவனால் இன்றளவும் மறக்க முடிய வில்லை. அதன் பின்னர் அப்படி ஒரு செயலை அவன் செய்யத் துணியவில்லை. "உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்" என்ற பாரதியின் வரிகளைப் படித்த பின்னர் யோகன் முன்பை விடவும் பிராணிகளை அதிகளவு நேசித்தான்.

உயிரியல் பாடத்தின் போது தவளையை வெட்டிப் பரிசோதிக்க மறுத்தான். இதனால் ரீச்சர் அவனை வகுப்புக்கு வெளியே நிற்க வைத்தா. "பாவம் பாத்தா உயிரியல் படிக்கேலாது."

இப்படி ரீச்சர் கூறியபோதும் யோகன் அதனைப் பொருட் படுத்தவில்லை. இதனால்த் தான் தனக்குப் பல்கலைக்கழகம் செல்ல முடியாமல் போய்விட்டதோ எனப் பின்னாளில் நினைத்திருக்கிறான். ஆனாலும் அவன் தனது கொள்கையில் உறுதியாக இருந்தான். உயிர்களை நேசிக்க வேண்டும் என்பது அவனது மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது.

வீட்டுக்கு விருந்தினர்கள் வந்தால் அம்மா கோழிக்கறி வைப்பா. அம்மாவுக்கு கோழி அறுக்கத் தெரியாது. அல்லது அறுப்பதற்குப் பயமாக இருக்கலாம். ஆனால் சுலோசனா அக்கா அந்த வேலையைச் சிறப்பாகச் செய்வா. கோழிக்கறி வைப்பதென்றால் அம்மா அவவை அழைத்து வருவா.

யோகன் வீட்டிலே கோழிகள் அடைத்து வளர்க்கப்பட வில்லை. அவை முற்றம் கோடி என எல்லா இடங்களிலும் திரியும். குப்பை களைக் கிளறிப் புழு, பூச்சிகளை உண்ணும். அம்மா சாப்பாட்டு மிகுதிகளை கோழிகளுக்குப் போடுவா. மாலையானதும் அவை மரங்களில் ஏறி உறங்கும். கோழிகள் முட்டை இடுவதற்காக வீட்டுத் திண்ணையில் கடகம் வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடகத்துக்குள் உமி போடப்பட்டிருக்கும். இப்படித்தான் யோகனின் வீட்டிலே கோழிகள் வளர்க்கப்பட்டன.

அன்று காலை அவனது வீட்டுக்கு மாமா வந்திருந்தார். அவர் அம்மாவின் தம்பி, கொழும்பிலே இருக்கிறார். நீண்ட காலத்துக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் வந்ததால் அம்மாவும் அப்பாவும் அவரை அன்போடு வரவேற்றனர். மாமா இவனுக்கும் தங்கைக்கும் நிறைய 'சொக்லற்' வாங்கி வந்திருந்தார். யோகனுக்கு மாமாவைப் பிடிக்கும். அவர் அவனுக்குக் கதைப் புத்தகங்கள் வாங்கித் தந்திருக்கிறார். அவரோடு கதைப்பதென்றால் அவனுக்கு நல்ல விருப்பம்.

"தம்பியும் கன காலத்துக்குப் பிறகு இஞ்சாலை வந்திருக்கிறான்." என அம்மா சொன்னா.

"அப்ப வாய்க்கு ருசியா ஏதாவது செய்து குடும்." அப்பா இவ்வாறு கூறினார்.

"உந்தப் புள்ளிக் கோழி முட்டை இடுறதில்லை."

"அப்ப அதைப் பிடிச்சு மத்தியானத்துக்குச் சமையும்" என்று கூறிய அப்பா அலுவலகத்துக்குச் சென்றுவிட்டார். பாடசாலைத் தவணை விடுமுறை என்பதால் இவனும் தங்கையும் வீட்டிலே இருந்தனர். அம்மாவும் அப்பாவும் கதைத்தது யோகனுக்கும் கேட்டது.

"யோகன், புள்ளிக் கோழியைப் பிடிச்சு கடகத்தால மூடிவை. நான் சுலோசனாவைப் போய்க் கூட்டிக் கொண்டு வாறன்."

"எனக்கேலாது நான் பிடிச்சு அடைக்க மாட்டன்."

இப்படி இவன் அம்மாவிடம் கூறினான்.

"பாவம் உன்ர மாமா கொழும்பில நல்லது நடியது சாப் பிட்டிருக்கமாட்டான். வாய்க்கு ருசியா ஏதாவது வச்சுக் குடுக்க வேண்டாமே."

"மாமா சாப்பிடுறதுக்காக கோழியைக் கொல்லுறது பாவமல்லோ."

"பாவ புண்ணியம் பற்றி எனக்குத் தெரியும்" எனச் சொன்ன அம்மா அடுக்களைக்குள் சென்று விட்டா.



கதைப் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தவனுக்கு மீண்டும் அம்மாவின் நினைவு வந்தது. அடுக்களைக்குள் போய்ப் பார்த்தான். அங்கே அம்மாவைக் காணவில்லை. மாமா அறைக்குள் நித்திரையில் ஆழ்ந்திருந்தார். இரவுப் பயணத்தின் போது நித்திரை கொண்டிருக்க மாட்டார் என எண்ணினான்.

மாமா நல்லவர். யோகன் பாடசாலைக்கு நடந்து போகிறான் என அறிந்து புதுச் சைக்கிள் வாங்கி அனுப்பியிருந்தார். கொழும்பிலே இருந்து வந்த சைக்கிள் என்பதால் இவனுக்குப் பெருமையாக இருந்தது. நண்பர்களுக்கெல்லாம் தனக்கு மாமா சைக்கிள் வாங்கித் தந்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். மாமா அடிக்கடி வரமாட்டார் ஆனால் யாழ்ப்பாணம் வந்தால் இவனையும் தங்கையையும் எல்லா இடங்களுக்கும் அழைத்துப் போவார். ஐஸ்கிறீம், றோல்ஸ் என எல்லாம் வாங்கித் தருவார்.

அவருக்கு நல்ல சாப்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்பதுல் அவனுக்கும் விருப்பந்தான். அதற்காக ஒரு உயிரைக் கொல்ல வேண்டுமா. அதுவும் தான் ஆசையாக அரிசிபோட்டு வளர்த்த கோழிகளில் ஒன்று கொல்லப்படுவதை அவன் விரும்பவில்லை. யோகன் கூப்பிட்டால் வளவில் எந்த மூலையில் மேய்ந்து கொண்டிருந்தாலும் அந்தப் புள்ளிக் கோழி இவனிடம் ஓடி வந்து விடும். முட்டை இடவில்லை என்பதற்காக அதனைக் கொல்ல வேண்டுமா?

தனது அழைப்புக்குக் கட்டுப்படும் அந்த அப்பாவிக் கோழியைப் பிடித்து அறுக்கக் கொடுப்பதில் அவனுக்கு விருப்பமில்லை. புள்ளிக்கோழி பிடிபடாமல் இருக்க வேண்டும் எனக் கடவுளிடம் வேண்டினான்.

அம்மாவின் ஞாபகம் வந்தது. அடுக்களைக்குள்ளும் அவவைக் காணவில்லை. அப்படி என்றால் எங்கே போயிருப்பா. முற்றத்தில் வந்து பார்த்தான். அங்கேயும் அவவைக் காணவில்லை. முற்றத்து மாமரத்தடியில் கடகம் கவிழ்க்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகனுக்கு விளங்கி விட்டது. அம்மா, சுலோசனா அக்கா வீட்டை போயிட்டா. அவ சுலோசனா அக்காவைக் கூட்டிக் கொண்டு வாறதுக்கிடையில கோழியைத் திறந்து விட வேணும்.

இப்படி நினைத்தவன் கவிழ்க்கப்பட்டிருந்த கடகத்தை தூக்கினான். அங்கே அவனது புள்ளிக் கோழி காணப்பட்டது. அவன் அதனை ஓடுமாறு கலைத்தான். அது ஓடவில்லை. அவன் தனக்கு எந்தத் தீங்கும் செய்யமாட்டான் என அந்தக் கோழி நம்பியிருக்கலாம்.

யோகன் கீழே குனிந்து கோழியைத் தூக்கினான். தன் நெஞ் சோடு அந்தக் கோழியை அணைத்தவன் அதன் தலையை வருடிக் கொடுத்தான். அந்த வருடல் அதற்குப் பிடித்திருக்க வேண்டும். அது அமைதியாக இருந்தது.

செல்லம்மா உப்புமாச் செய்து கொடுத்தால் பாரதியார் அதில் ஒரு பகுதியைப் பறவைகளுக்குப் போடுவாராம். காக்கை, குருவி எங்கள் சாதி எனப் பாடிய அந்த மகாகவி அதனைச் செயலிலும் காட்டியிருக்கிறார். சதீஸ் மாஸ்ரர் தான், பாரதியார் பற்றி வகுப்பில் இவ்வாறு கூறியிருந்தார்.

இவனுக்குப் பாரதியாரைப் பிடித்திருந்தது. அவரைப் போல உயிர்களை நேசிக்க வேண்டும் என விரும்பினான்.

சுலோசனா அக்கா ஏன் இப்படி நடந்து கொள்ளுறா. அவ என்னை விட பெரிய படிப்புப் படிக்கிறா. பாரதியாரைப் பற்றி அவவுக்குத் தெரிஞ்சிருக்காதே. திருக்குறள் அவ படிச்சிருக்க மாட்டாவே.

சுலோசனா அக்கா இவனோடு அன்பா நடப்பா. யோகன் பாடங்களில் சந்தேகம் என்றால் அவவிடந்தான் கேட்பான். பொறுமையாக இவனுக்கு விளங்கப்படுத்துவா. அப்படி அன்பா நடக்கிறவ ஏன் இந்தப் பாவத்தைச் செய்யிறாவோ தெரியேல்லை. வீட்டில கோழிக்கறி வைக்கிறதென்றால் அம்மா சுலோசனா அக்காவைத் தான் கூட்டி வருவா.



யோகனின் அப்பா கோழி உரித்ததில்லை. அவர் பயந்தவராக இருக்கலாம். ஆனால் கோழி இறைச்சியை விரும்பி உண்பார். அம்மா மிக ருசியாகக் கோழிக்கறி சமைப்பா என அப்பா கூற அவன் கேட்டிருக்கிறான்.

யோகன் புள்ளிக் கோழியை வேலிப் பொட்டுக்குள்ளால் கலைத்து விட்டான்.

படலை திறக்கும் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். அம்மாவும் சுலோசனா அக்காவும் வந்தனர். அம்மா கடகத்தைத் திறந்து பார்த்தா அங்கே கோழியைக் காணவில்லை.

"யோகன் தான் கடகத்தைத் திறந்து கோழியைக் கலைச்சிருக்க வேணும்" என அம்மா சொன்னா.

"அன்ரி, நீங்கள் கொஞ்சம் அரிசி கொண்டாங்கோ."

இப்படி சுலோசனா அக்கா கூறினா.

அரிசியைப் போட்டதும் எல்லாக் கோழிகளும் ஓடி வந்தன. சுலோசனா அக்கா புள்ளிக் கோழியை அமுக்கிப் பிடித்தா. அது அவவின் கைகளிலிருந்து விடுபடத் துடித்தது. ஆனால் பிடி இறுக்கமாக இருந்ததால் அதன் முயற்சி பலிக்கவில்லை.

அக்கா கோழியைத் தூக்கிக் கொண்டு அடிவளவுக்க போனா. யோகன் அவவுக்குத் தெரியாமல் பின்னால்ச் சென்றான். சுலோசனா அக்கா வேலியோரம் இருந்த கயிற்றில் சுருக்குப் போட்டா. சுருக்கு முடிச்சிட்ட வளையத்தைக் கோழியின் தலையில் மாட்டி கயிற்றின் மறுநுனியை வேலிக்கதியாலில் கட்டிவிட்டா. புள்ளிக்கோழி இறக்கைகளை விரித்து துடிதுடித்தது. சிறிது நேரத்தில் எல்லாம் அடங்கி விட்டது. அம்மா சட்டியைக் கொண்டு போய்ச் சுலோசனா அக்காவிடம் கொடுத்தா.

இவனது உடம்பு நடுங்கியது. கண்களில் இருந்து கண்ணீர் வந்தது. அதற்கு மேல் அந்தக் காட்சியைக் காணப் பிடிக்காத வனாய் அங்கிருந்து அகன்றான். புள்ளிக் கோழியை அவனால் மறக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. கட்டிலில் போய்ப்படுத்தவன் கண்ணயர்ந்து போனான்.

கண் விழித்த போது அம்மா அடுக்களையில் நிற்பது தெரிந்தது. அடுப்பிலே கறி கொதித்துக் கொண்டிருந்தது.

யோகன் அன்று சாப்பிடவில்லை. அம்மா பலமுறை அழைத்தும் அவன் மறுத்து விட்டான்.

நாட்டிலே ஏற்பட்ட வன்முறை பல உயிர்களைக் காவு கொண்டது. மனித உயிர்களுக்கே மதிப்பற்றுப் போன நிலையில் காக்கை, குருவி எங்கள் சாதி என எவராலும் பாட முடியவில்லை.

வயிற்றுப் பசியால் எத்தனை நாள் வாடமுடியும். கோழிகளையும் தூக்கிக் கொண்டு இடம்பெயர முடியுமா? யோகனது குடும்பம் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, சாவகச்சேரியில் இருந்த போது தான், அந்தச் சம்பவம் நடந்தது. இவர்கள் தங்கியிருந்த வீட்டின் சொந்தக்காரி கோழி ஒன்றைக் கொண்டு வந்தாள். அதனை அறுத்துத் தருமாறு இவனிடம் நீட்டினாள்.

எல்லோரும் வயிறாற சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டன. கோழிக் கறியோடு எல்லோருக்கும் சோறு சமைத்துப் போட வீட்டுக்காரி விரும்பியிருக்கலாம். அகதியாக வந்தவர்களுக்குத் தனது வீட்டில் அடைக்கலம் தந்தவள். இவனால் மறுக்க முடிய வில்லை. யோகன் கோழியை வீட்டுக்காரியிட மிருந்து வாங்கினான். அவனது கைகள் நடுங்கின. அவன் செய்வதறியாது நின்றான். இவனால் அதனைக் கொல்ல முடியவில்லை. வீட்டுக்காரி தன்னை நிச்சயமாக ஒரு ஆம்பிளையாகக் கருதியிருக்க மாட்டாள் என இவன் எண்ணினான். தான் அப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாதோ என நினைத்தான்.

யோகன், இப்போது கொழும்பிலே வேலை பார்க்கிறான். அலுவலகத்தில் அவன் யாரோடும் அதிகம் கதைப்பதில்லை. தான் அதிகம் கதைத்தால் மற்றவர்கள் தன்னைப் பயந்தாங்கொள்ளி என இனங்கண்டு விடலாம் என எண்ணினான்.



"யோகன், ஏன் நீங்கள் ஒருத்தரோடையும் கலகலப்பாய் கதைக் கிறேல்லை." இவனோடு வேலை பார்க்கும் காயத்திரி கேட்டாள். இவன் பதிலேதும் சொல்லவில்லை.

"இப்படி இருந்தியள் என்றால் எல்லாரும் உங்களை மட்டந் தட்டிப் போடிவினம்."

"என்ர இயல்பு அப்படி" யோகன் கூறினான்.

"உங்கட இயல்பை எனக்காக மாத்த மாட்டியளே" என காயத்திரி கேட்டாள்.

அவன், அவளது முகத்தை நோக்கினான். இதற்கு முன் யாரும் இவனைப் பார்த்து இப்படிக் கேட்டதில்லை.

அன்று வேலை முடிந்து வரும்போது காயத்திரியும் இவனோடு கூட வந்தாள். அதே கடைத்தெரு. மூலையில் அந்தக் கோழிக்கடை. இவன் அலுவலகத்துக்குப் போகும் போதும் வரும்போதும் பார்க் கின்ற அதே கடை. கம்பிக் கூட்டுக்குள் வெள்ளைக் கோழிகளோடு புள்ளிக் கோழிகளும் காணப்பட்டன.

"யோகன், நீங்கள் இதில நில்லுங்கோ. நான் உந்தக் கடைக் கொருக்காப் போயிட்டு வாறன்." எனக் கூறிய காயத்திரி கோழிக் கடைக்குள் நுழைந்தாள்.

அவள் காட்டிய புள்ளிக் கோழியைக் கடைக்காரர் அறுப்ப தற்காகப் பிடித்தார். யோகன் கடைவாசலில் நின்றவாறு அந்தக் காட்சியைப் பார்த்தான். தான் ஆசையாக வளர்த்த புள்ளிக் கோழியை சுலோசனா அக்கா பிடித்து அறுத்தது நினைவுக்கு வந்தது.

கோழிக் கடைக்கு வெளியே வந்த காயத்திரி தூரத்தே யோகன் நடந்து போவதைக் கண்டாள். அவனுக்கும் அவளுக்கும் இடை யிலான தூரம் இப்போது அதிகரித்திருந்தது.

*(வீரகேசரி வாரவெளியீடு 18.12.2011)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# அந்திமம்

“அம்மா நாங்கள் எல்லாரும் கனடா போவம்” என நிமலன் கூறினான்.

“ஓம், இஞ்ச இருந்து என்ன செய்யிறது. மகளும் ‘டெலிபோனில’ கதைக்கிற போதெல்லாம் அங்க வரச்சொல்லித் தானே கேட்கிறாள்”

இப்படி நிமலனின் தாய் கலா கூறினாள்.

“அக்கா அங்க எங்களைக் கூப்பிடுறதுக்கு எல்லா ஒழுங்கும் செய்து போட்டாவாம். எனக்கு வாற மாசத்தோட “கம்பஸும்” முடியுது. பிறகு வேலை தேடி அலைய வேணும்.”

“தம்பி கனடா போனால் உந்தப் பிரச்சினை இல்லை. அங்க கெதியா வேலை எடுக்கலாம்.”

“அம்மா, உவர் அப்பா தான் கொஞ்சம் பின்னடிக்கிறார்.”

“அவர் உப்பிடித்தான் என்னத்துக்கு முன்னுக்கு நிண்டவர் எல்லாத்துக்கும் ஒவ்வொரு நொட்டை சொல்லுவார்.”

“அப்பா வராட்டில்”............

“நாங்கள் போவம்.”

“அப்பாவை இஞ்ச விட்டுப் போட்டுப் போனால் பாக்கிறவை ஒண்டுஞ் சொல்லாயினமே” நிமலன் கேட்டான்.

“நாங்கள் கனடா போறதில உறுதியா நிண்டால் உன்ர அப்பாவால என்ன செய்யேலும் அவரும் எங்களோட வந்திடுவார்.”

மனைவியும் மகனும் உரையாடியதை தனது அறையில் இருந்தவாறு குமார் கேட்டார். கி.ராஜநாராயணன் எழுதிய நூல்கள் என்றால் அவர் விரும்பி வாசிப்பார். அன்றும் அப்படித்தான் சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறு புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தார்.

மூத்த எழுத்தாளரான கி.ராஜநாராயணன், கரிசல் மண்ணை அங்கு வாழும் மக்களின் பண்புகளைத் தனது படைப்புக்கள் வாயிலாகப் பதிவாக்கியவர். மூத்த எழுத்தாளரான அவரின் கருத்துக்களை இன்றைய இளந் தலைமுறையினர் மிக மதிப்போடு நோக்குகின்றனர்

அந்தப் படைப்பாளனின் படைப்புக்களை விரும்பி வாசிக்கும் குமாரின் நிலையோ வேறாக இருந்தது.

பத்து வருடங்களுக்கு முன் அவர் ஆசிரியராக வேலை பார்த்தார். அந்த ஊதியத்தைக் கொண்டே அவரது குடும்பத்தின் தேவைகள் நிறைவேற்றப்பட்டன.

நான்கு பேரைக் கொண்ட சிறிய குடும்பம். ஆடம்பரச் செலவுகள் என்று அதிகம் இல்லை. குமாரின் திருமண வாழ்க்கை திருப்தி யாகவே அமைந்திருந்தது.

“அம்மா நான் பள்ளிக்கூடம் போட்டுக் கொண்டு போற சப்பாத்து பழசாய்ப் போச்சு. புதுசு வாங்க வேணும்.”

இப்படி நிமலன் கூறினான்.

“இன்னும் கொஞ்ச நேரத்தில அப்பா வந்திடுவார்.

அவரிட்டக் கேட்டுப் போட்டு வாங்கித் தாறன்.” மனைவி சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அந்தக் காலம். காலம் போக வயதும் போகிறது என்பதை இவர் உணரவில்லை. இவரது நினைவுகள் எப்போதும் பின்னோக்கியே இருந்தன.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலையில் குமார் அப்போது ஆசிரியராக வேலைபார்த்தார்.

அவரது சொந்த ஊர் காரைநகர். அங்குள்ள பாடசாலையில்த்தான் அவர் படித்தார். காரைநகரிலிருந்து தினமும் பாடசாலைக்கு வந்து போவது சிரமமாக இருந்தது. அதனால் அரசடி வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அருகில் உள்ள வீட்டில் அறையொன்றில் வாடகைக்குக் குடியிருந்தார்.

வெள்ளிக்கிழமை பாடசாலை விட்டதும் ஊருக்குப் போவார். திங்கட்கிழமை காலை காரைநகரிலிருந்து புறப்பட்டுப் பாடசாலைக்கு வருவார். ஏனைய நாட்களில் பாடசாலை விட்டதும் அறையிலேயே தங்கி விடுவார்.

அரசாங்க உத்தியோகம் என்பதால் ஊரில் அவருக்குப் பெண் கொடுக்கப் பலரும் முன்வந்தனர்.

குமார் தங்கியிருந்த வீட்டுக்கு அருகில் தட்டாதெருச் சந்தியில் 'குகானந்த பவன்' என்ற சைவ உணவகம் இருந்தது. தேநீர் குடிக்கவும் சாப்பிடவும் இவர் அங்கே போவார்.

அன்றும் அப்படித்தான். சாப்பிடக் கடைக்குப் போகத் தயாரானார். அப்போது அறைக் கதவை ஆரோ மெல்லத் தட்டினார்கள். இவர் கதவைத் திறந்தார். அங்கே கலா நின்றிருந்தாள். கையில் அலுமினியத் தட்டு. அது வாழையிலையினால் மூடப்பட்டிருந்தது.

"அம்மா குடுத்துவிடச் சொன்னவ."

புன்னகையோடு கூறியவள், அங்கிருந்து சென்று விட்டாள். இவர், கலா போவதைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

தட்டில் அப்பங்கள் அழகாக அடுக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் வெள்ளிக்கிழமைகளில் காலையில் நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்குச் சைக்கிளில் போவார். கோயில் வீதியில் நல்லை ஆதீனத்துக்கு அருகில் வீதி ஓரத்தில் வயதான பெண்ணொருத்தி அப்பம் சுட்டுக் கொண்டிருப்பாள்.

மூன்று கல்லுகள் அடுக்கப்பட்ட விறகடுப்பின் மேல் அப்பச் சட்டி வைக்கப்பட்டிருக்கும். அப்பச் சட்டியின் மீது தென்னம் பொச்சு மட்டைத் தணல் நிரம்பிய மற்றுமொரு மண் சட்டி காணப்படும். இதனால் அப்பத்தின் அடிப்பகுதி மாத்திரமன்றி மேல்ப்பகுதியும் நன்றாக வேகக்கூடியதாக இருக்கும்.

மாவைப் புளிக்க வைக்கப் பனங்கள்ளு பயன்படுத்தப் படுவதை இவர் அறிந்திருந்தார். அந்த வயதான பெண்ணிடம் குமார் அப்பம் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறார். ஆனால் அதனை விடவும் இன்று காலை கலா கொண்டு வந்த அப்பங்கள் அவருக்குச் சுவையாக இருந்தன. இது அவளின் மீது கொண்ட விருப்பத்தினால் ஏற்பட்ட உணர்வாக இருக்கலாம். இப்படி அவர் எண்ணிக் கொண்டார்.

இவர் கல்வி கற்பிக்கத் தொடங்கிய காலத்தில் ஆசிரியர்கள் நீளக் காற்சட்டை அணிந்தனர். ஆனாலும் பலர் தேசிய உடையிலேயே காணப்பட்டனர்.

குமார் "பெல்பொட்டம்" அணிந்தே பாடசாலைக்குச் செல்வார். "ஹிப்பிஸ்ரைலில்" தலைமயிரை வளர்க்க அவருக்கு ஆசையாக இருந்தது. ஆனால் தான் ஓர் ஆசிரியர் என்பதால் அதனை அவர் தவிர்த்து விட்டார்.

கலாவின் அப்பா யாழ்நகரில் 'ரேடியோ' திருத்தும் கடையொன்றை நடத்தி வந்தார். அப்போது தொலைக்காட்சி அறிமுகம் ஆகியிருக்கவில்லை. கலாவின் வீட்டில் எப்போதும் 'ரேடியோ' ஒலித்துக் கொண்டிருக்கும்.

இலங்கை வானொலி நிகழ்ச்சிகளையே அவள் விரும்பிக் கேட்பாள். திருச்சி, சென்னை வானொலி நிலையங்களில் இருந்து ஒலிபரப்பான கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் இவருக்குப் பிடிக்கும்.



அதனால் தனது அறையில் வானொலிப் பெட்டி ஒன்றை வைத்திருந்தார்.

கலாவுக்கு இரண்டு தங்கைகள். இவளைக் கரைசேர்த்து விட்டால் பிறகு மற்றவர்களின் திருமணங்களையும் முடித்து விடலாம் என அவளின் பெற்றோர் எண்ணினர்.

இவரது அறையில் இருந்து பார்க்கும்போது முற்றத்தில் நடப்பவற்றை அவதானிக்க முடியும். கிளிச்சொண்டு மாமரமும் அம்பலவி மாமரமும் மதாளித்து நின்றன. பலாமரத்தில் பிஞ்சுகளும் காய்களும் காணப்பட்டன. அவள் கனகாம்பரச் செடிகளுக்கும் செவ்வரத்தைச் செடிகளுக்கும் நீரூற்றிக் கொண்டிருந்தாள்.

இவர் கலாவைப் பார்ப்பதற்காகவே அறையின் ஜன்னலருகே கதிரையைப் போட்டு அமர்ந்திருந்தார். கையிலே ஆங்கில நாவல். அப்போது தான் மதிப்பாக இருக்கும். இப்படிக் குமார் எண்ணினார்.

கையிலே புத்தகம் இருந்தாலும் கண்கள் அவளையே நோட்டமிட்டன. "மினிஸ்கேட்" கலாவுக்கு அழகாக இருந்தது. கிடுகுவேலிக் கலாசாரம் என்று சொல்லப்பட்ட யாழ்ப்பாண கலாசாரம் மெல்ல மாற்றம் பெற்று வருவதை இவரால் உணர முடிந்தது. வாடகைக்கார்களில் பள்ளிக்கூடங்களுக்குப் போய்வந்த பணக்கார வீட்டுப் பெண்பிள்ளைகள் இப்போது சைக்கிளில் போனார்கள்.

"என்ன அப்படிப் பாக்கிறியள்" கலா தான் கேட்டாள்.

"ஒன்றுமில்லை" என இவர் சொன்னாலும் அவளோடு கதைக்க ஆசைப்பட்டார்.

"தங்கச்சி பூமணி, இப்ப கல்லூரி ஒழுங்கையில சைக்கிள் ஓடிப் பழகிறாள்" கலா கூறினாள்.

"சைக்கிள் பழகிறது நல்லது தானே நீங்கள் பழகேல்லையே" இவர் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீங்கள் என்ன சொல்லுவியளோ”..... அவள் முடிக்க வில்லை.

“நான் என்னத்தைச் சொல்லுறது. உங்கட அப்பாவிட்டக் கேட்டுப் போட்டு அவர் ஓம் என்றால் பழகுங்கோ” இவர் கூறினார்.

“உங்களுக்குச் சம்மதம் என்றால்த்தான் நான் பழகுவன்”

இப்படி அவள் கூறினாள். இவர் கலாவை நோக்கினார். அந்த முகத்திலே தெரிவது அன்பா ஆசையா அல்லது இரண்டுமா குமாரால் இனங்காண முடியவில்லை. கலா அதிகம் நிறமில்லை. ஆனால் அழகாகக் காணப்பட்டாள். அந்த அழகு அவரை ஆட் கொண்டு விட்டது.

அவர்களின் திருமண வாழ்க்கை நன்றாகவே அமைந்தது. மகள் பிறந்தபோது என்ன பெயர் வைக்கலாம் என இவர்கள் யோசித்தனர். சங்கவி என்ற பெயர் இவருக்குப் பிடித்திருந்தது. குமாருக்குப் பிடித்த பெயர் அவர் மனைவி கலாவுக்கும் பிடித்தது. மகன் பிறந்த போது நிமலன் எனப் பெயர் வைத்தார்.

அவர்களது வீட்டில் இருந்த வாளி மலகூடம் குமாரின் ஊதியத்தில் நீர் அடைப்பு மலகூடமாக மாற்றிக் கட்டப்பட்டது. மல வண்டில்களை வீதிகளில் கண்டால் குமார் மூக்கைப் பொத்திக் கொண்டு நடப்பார். இப்போது மலவண்டில்களை இவரால் காண முடிவதில்லை. யாழ்நகர் மாற்றம் அடைந்து வருவதை இவர் அவதானித்தார்.

மனைவியும் பிள்ளைகளும் ஒவ்வொரு விடயத்தையும் குமாரின் விருப்பத்தைக் கேட்டே நிறைவேற்றினர். அந்த வீட்டின் உழைக்கும் சக்தியாக அவர் கருதப்பட்டார்.

மகளுக்குப் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக் கிடைக்க வில்லை. தன்னிடம் இருந்தவற்றை எல்லாம் கொடுத்து அவளின் திருமணத்தை முடித்து வைத்தார்.



நாட்டில் ஏற்பட்ட யுத்தம் யாழ் நகரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியது. மகளும் மருமகனும் கனடாவுக்குப் புலம் பெயர்ந் தனர். அவர் மனைவியோடும் மகனோடும் வெள்ளவத்தையில் வாடகை வீட்டில் குடியேறினார்.

குமார் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுப் பத்து வருடங்களாகி விட்டன.

“உங்கட ‘பென்சன்’ காசு ஒரு கிழமைக்குக் கூட காணுதில்லை.” இப்படிக் கலா கூறினாள்.

“அப்ப வாரும் யாழ்ப்பாணம் போவம்.” குமார் கூறினார்.

“அங்க இனிப்போய் எப்படி இருக்கிறது. என்னால முடியாது.”

“என்னப்பா புதுக்கதை சொல்லுறீர்.”

“என்ர சொந்த பந்தமெல்லாம் இப்ப இஞ்சதான் இருக்கினம். நான் அவையள விட்டுப் போட்டு யாழ்ப்பாணம் வரமாட்டன்.”

“அப்பிடி என்றால்” இவர் கேட்டார்.

“நாங்கள் கனடா போவம். மகள் எல்லா ஏற்பாடுகளும் செய்யிறாளாம்.”

“நான் வரயில்லை.”

“அப்ப என்ன செய்யப் போறியள்” கலா கேட்டாள்.

“யாழ்ப்பாணம் போகப் போறன். கடைசிக் காலத்தில அங்க போயிருக்க ஆசைப்படுறன்.” இப்படிக் குமார் கூறினார். அவரது வார்த்தைகளை மனைவியோ, மகனோ கேட்கத் தயாராயில்லை. சாறு பிழியப்பட்ட வெறும் சக்கையாகவே அவர்களுக்கு இவர் தெரிந்தார்.

*(தினகரன் வாரமஞ்சரி 13.11.2011)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# மீட்சி

அன்று காலையிலிருந்தே முகுந்தன் யோசித்துக் கொண்டிருந் தான். அலுவலகத்தில் இருக்கையில் அமர்ந்து வேலை பார்ப்பது கூட அவனுக்குச் சிரமமாக இருந்தது. ஆரிடமாவது ஒரு இரண்டாயிரம் ரூபா வாங்கிவிட முடிந்தால், இப்படி இவன் எண்ணினான்.

"கன்ரீனுக்குப் போவமா."

இவனுக்கு எதிர்ப்புறம் இருக்கும் இருக்கையில் அமர்ந்து வேலை பார்க்கும் காஞ்சனா கேட்டாள்.

முகுந்தன் மறுப்பேதுமின்றி அவள் பின்னால் சென்றான். காலையில் இருந்து இவன் எதுவும் சாப்பிடவில்லை. மாதக் கடைசி என்பதால் கையில் காசும் இல்லை. காஞ்சனாவோடு சென்றால் அவள் தேநீர் வாங்கித் தருவாள். காலைப் பசிக்கு அவனுக்கு அது போதும்.

அவர்கள் சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்த போது அங்கிருந் தவர்கள் இவர்களைப் பார்த்தனர். சிலர் இவர்களைக் கண்டதும் குரல்களைத் தாழ்த்தி ஏதோ இரகசியம் பேசினர். இருவரும் வசதி யான ஒரு இடத்தில் அமர்ந்தனர்.

"ஏதும் சாப்பிடுவமே"



காஞ்சனா கேட்டாள்.

"எனக்கு ரீ போதும்"

இவன் கூறினான்.

"நீங்கள் சாப்பிட்டியளே"

மீண்டும் இவள் கேட்டாள்.

"ஓம் சாப்பிட்டன்."

"என்ன சாப்பிட்டியள்."

முகுந்தன் பதில் தேடினான். காஞ்சனா புரிந்து கொண்டாள். வடையும் வாய்ப்பனும் வாங்கினாள். இருவரும் சாப்பிட்டனர்.

காலையில் வரும்போது அப்பாவுக்கும் தங்கைக்கும் மணியம் பேக்கரியில் பாண் வாங்கிக் கொடுத்து விட்டு வந்தான்.

"அண்ணா, நீங்கள் சாப்பிடேல்லையே" தங்கச்சி கேட்டாள்.

"இல்லை சரோ, நீயும் அப்பாவும் சாப்பிடுங்கோ நான் கன்ரீனில சாப்பிடுறன்"

இப்படிச் சொல்லி விட்டுத்தான் அவன் அலுவலகம் வந்தான்.

அம்மா இருந்திருந்தால் இப்படி ஒரு நிலை வந்திருக்காது. அப்பா குடிக்கு அடிமையாகி நடைப்பிணம் போல் ஆகியிருக்க மாட்டார்.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் நல்ல புரிந் துணர்வு இருந்தது. சிறு பிரச்சினைகள் வந்தாலும் மனக்கசப்பு ஏற்பட்டதில்லை. அம்மா கோபத்தைச் சாதிக்க முற்பட்டாலும் அப்பா சாதிப்பதில்லை. சமாதானமாகி விடுவார். இது சரணா கதியாகவும் இருக்கலாம் என முகுந்தன் எண்ணினான்.

அப்பாவுக்கு உழைக்க மட்டுமே தெரிந்திருந்தது. அம்மா தான் குடும்பத்தை நிர்வகித்தா. அப்பா சம்பளப் பணத்தை அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்து விடுவார். அம்மா காசிலே சிக்கனம். அப்பாவுக்கு காசு கொடுப்பதென்றால் கூட என்னத்துக்கு என்று கேட்டுத்தான் கொடுப்பா.

அவர்கள் வீட்டில் எல்லோரும் சைவ உணவு தான் உண்பார்கள். ஆனால் அம்மா கோழிகள் வளர்த்தா. அயலவர்களுக்கு முட்டை கள் விற்றா. கோழிகள் அடைகிடக்கும் போது குஞ்சுகள் பொரிக்க வைக்கப்பட்டன. பாலூட்டும் தாய்மாருக்குப் பத்தியக்கறி வைப்ப தற்காக விடைப்பருவ குஞ்சுகள் விரும்பி வாங்கப்பட்டன.

அயல் வீட்டுப் பெண்களோடு சேர்ந்து அம்மா சீட்டுப் பிடிப்பதிலும் ஈடுபட்டா. இதனால் அவர்களது குடும்பத்தில் பணக் கஷ்டம் இருக்கவில்லை.

அம்மாவின் இறப்பு அப்பாவை அதிகம் பாதித்து விட்டது. அம்மா இருந்தவரை அவதான் அப்பாவின் உடுப்புக்களைத் தெரிவு செய்வா. அம்மா 'அயன்' பண்ணிக் கொடுக்கும் உடுப்புக்களையே அப்பா அணிந்து அலுவலகம் செல்வார். அவை அவருக்கு எடுப்பாக இருந்தன.

அப்பா இப்போது வேலைக்குச் செல்வதில்லை. அரசாங்க வேலை என்றால் ஓய்வூதியத்துக்காவது விண்ணப்பித்திருக்கலாம். தனியார்துறை என்பதால் எதுவும் செய்ய முடியவில்லை.

அப்பா 'அயன்' பண்ணிய ஆடைகளை அணிந்து அதிக காலம் ஆகிவிட்டது. கசங்கிய உடைகளுடனேயே நடமாடித் திரிகின்றார். ஒவ்வொரு நாளும் குளிப்பதில்லை. எப்பவாவது குளிக்க வேண்டும் போல் இருந்தால் குளிப்பார். அதே போன்று முகச்சவரம் செய்வதிலும் அக்கறை காட்டுவதில்லை. எப்போதும் தன்னை மறந்த நிலையில் இருக்கவே ஆசைப்படுகிறார். அதற்காக அவர் அதிகம் மது அருந்துகிறார். மதுபோதை அவருக்கு மனநிம்மதியைத் தருவதாக நினைக்கிறார்.

அப்பா சாப்பாட்டில் கூட அதிகம் அக்கறை கொள்வதில்லை. தங்கை வில்லங்கப்படுத்திக் கொடுத்தால் சாப்பிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் வீட்டு முகட்டை வெறித்தபடியே இருப்பார். அம்மாவின் நினைவு வந்தால் அழுவார். அப்பா அழுவதை இவர்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. தங்கையும் அப்பாவோடு சேர்ந்து அழுவாள். இவனுக்குத் துக்கம் தொண்டையை அடைக்கும். அதனை வெளிக்காட்டாமல் அவர்கள் இருவரையும் தேற்றுவான்.

அம்மா உயிரோடு இருந்த வரை அவர் நன்றாகவே இருந்தார். அரிசிமாப் பிட்டும் கத்தரிக்காய் பொரியலும் என்றால் விரும்பிச் சாப்பிடுவார். அம்மா கத்தரிக்காயை சிறிய துண்டுகளாக வெட்டி நல்லெண்ணையில் பொரித்தெடுப்பா.

தங்கை சரோவுக்கும் கத்தரிக்காய் பொரியல் என்றால் விருப்பம். அப்பா வேலை விட்டு வருமுன்னரே இவர்கள் இரவுணவைச் சாப்பிட்டு விடுவார்கள். அம்மா, அப்பாவுக்கான பங்கை வேறாக எடுத்து வைத்திருப்பா. அவர் சாப்பிட அமர்ந்ததும் தங்கையும் அருகில் போய் அமர்ந்து விடுவாள்.

"சரோ, அப்பா வேலையால களைச்சுப் போய் வந்திருக்கிறார். அவரைச் சாப்பிட விடு."

இப்படி அம்மா தங்கையிடம் கூறுவா. அவளோ கத்தரிக் காய்ப் பொரியலைக் காட்டி வேணும் என்பாள்.

"உனக்குத் தந்தனான் தானே. வேணும் என்றால் நாளைக்கு இன்னும் பொரிச்சுத்தாறன்."

அம்மா சொல்லுவா. "எனக்கு இப்ப வேணும்" எனத் தங்கை அடம் பிடிப்பாள்.

"அதுக்கென்ன அவள் என்னட்டத் தானே கேட்கிறாள்"

என அப்பா கூறுவார்.

ஒவ்வொரு பொரியலாக எடுத்து அவளுக்கு ஊட்டி விடுவார். அவள் "போதும்" என்பாள்.



"பரவாயில்லைச் சாப்பிடம்மா."

என அப்பா தங்கையின் தலையை வருடி விடுவார்.

வேலை முடிந்து வரும்போது அப்பா ஏதாவது தின்பண்டம் வாங்கி வருவார். என்ன வாங்கி வந்தாலும் அதனை நான்காகப் பிரிப்பது வழக்கம். அப்படிப் பிரித்தாலும் அம்மாவின் பங்கும் அப்பாவின் பங்கும் இவர்களுக்கே வந்து விடும்.

இவை எல்லாம் அம்மா இருந்த வரை நடந்தவை. இப்போது அப்பா எல்லாவற்றையும் இழந்தவர் போலாகி விட்டார். அம்மா இறந்த அன்றே அப்பாவும் இறந்து விட்டதாகவே முகுந்தன் எண்ணினான். அவரது உணர்வுகள் என்றோ மரணித்து விட்டன. அவர் வெறும் சடமாக வாழ்ந்து கொண்டிருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

கடந்த சில நாட்களுக்கு முன் என்ன நினைத்தாரோ தெரிய வில்லை. நிலக்கடலை வாங்கி வந்தார். கடலைச் சரையில் இருந்த வற்றை நான்கு பங்குகளாகப் பிரித்தார். முகுந்தன் அப்பாவின் செய்கையை அவதானித்தான்.

"அப்பா, ஏன் நாலாப் பிரிக்கிறியள்"

தங்கை கேட்டாள். அப்பா ஒன்றும் கதைக்கவில்லை. அவரது கண்கள் கலங்கியிருந்தன. அப்பாவிடம் அப்படிக் கேட்டிருக்கக் கூடாது என சரோவும் நினைத்திருக்கலாம். அவளது கண்களும் கலங்கி விட்டன.

அப்பா நான்கில் ஒரு பங்குக் கச்சானை எடுத்துச் சென்று அம்மாவின் படத்துக்கு முன்னால் வைத்தார். மிகுதி மூன்று பங்கு களையும் இவர்களிடம் கொடுத்தார். தனக்காக அவர் எதனையும் எடுத்துக் கொள்ளவில்லை.

ஆருக்கும் கச்சான் சாப்பிட வேண்டும் என்ற ஆசை இருக்க வில்லை. அம்மாவின் நினைவுகள் அவர்களை ஆட்கொண் டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா, அம்மாவின் படத்தையே பார்த்துக் கொண்டு நின்றார். பின்னர் சிறு குழந்தை போலத் தேம்பித் தேம்பி அழுதார். அப்பாவின் கண்ணீரைத் தன் கைகளால் துடைத்து விட்டபடி சரோவும் அழுதாள். அப்பாவையும் தங்கையையும் தேற்ற முடியாத துக்கத்தில் முகுந்தன் சிக்கித் தவித்தான்.

அப்பாவால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லாமல் போய் விட்டது. அவரைப் பார்க்க உறவினர்களோ, நண்பர்களோ வருவ தில்லை. அம்மா இருந்தவரை எல்லோரும் வந்தார்கள். உறவு கொண்டாடினார்கள். இப்போது உறவு எனச் சொல்லிக் கொள்ள அவர்களுக்கு எவரும் இல்லை. அதுபற்றி அவனோ தங்கையோ கவலைப்படவில்லை.

அப்பா மது அருந்துவதை அவர்கள் தவறாக எண்ணவில்லை. அவரின் உணர்வுகள் என்றோ இறந்து விட்டன. இது அவர்களுக்குத் தெரியும். அம்மாவோடு வாழ்ந்த நாட்கள் அவரைப் பொறுத்தவரை அர்த்தமுள்ளவை. அப்பா அப்போது மதுவைத் தொட்டுக் கூட பார்த்ததில்லை. ஆனால் இப்போது எல்லாமே தலைகீழாகி விட்டது.

அப்பா இவர்களோடு இன்னும் அதிககாலம் வாழ வேண்டும் என்றே இவனும் தங்கையும் விரும்பினர். அம்மாவை இழந்து விட்ட இவர்களுக்கு அப்பா இருக்கிறார் என்ற உணர்வே சற்று ஆறுதலைத் தந்தது. அதுவும் சரோ அப்பாவின் மேல் அளவு கடந்த பாசத்தைக் கொண்டிருந்தாள். அந்தப் பாசம் அவரை மதுப் பழக்கத்திலிருந்து விடுவிக்கும் என முகுந்தன் நம்புகிறான்.

நாளை சரோவின் பிறந்த நாள். அம்மா இருந்தால் பிறந்த நாளுக்கு ஏதாவது பலகாரம் செய்வா. இவர்கள் எல்லோரது பிறந்த நாட்களின் போதும் அவ கட்டாயம் காலையில் கோயிலுக்குப் போவா. இவர்கள் எல்லோரும் நல்லாயிருக்க வேணும், என அம்மா விரும்பினா.



எல்லோரது பிறந்த நாட்களையும் ஞாபகத்தில் வைத்திருக்கும் அம்மா, தனது பிறந்த நாளை மட்டும் ஞாபகம் வைத்திருப்ப தில்லை.

அப்பா தான் அம்மாவின் பிறந்த நாளை நினைவு படுத்துவார். அவர் அம்மாவுக்காக கோயிலுக்குப் போவார். மாலை அலுவல கத்தில் இருந்து வரும்போது அம்மாவுக்குப் புதுச்சேலை வாங்கி வருவார்.

அம்மாவுக்கு இதிலெல்லாம் அதிகம் ஆசை இல்லை.

"ஏன் வீணாக இப்படிக் காசைச் செலவழிக்கிறியள்."

என்று சொல்லுவா.

அப்பாவுக்கு அது வீண் செலவாகத் தெரிவதில்லை. அவர் அன்போடு வாங்கி வருகிறார் என்பதற்காகவே ஏற்றுக் கொள்ளுவா. அப்பா மனம் நோகக் கூடாது என்பதில் அம்மாவுக்கு அதிக கரிச னை இருந்தது.

ஆனால் இன்று அப்பா எல்லாவற்றையும் இழந்தவர் போலாகி விட்டார். அம்மாவின் மறைவு அவரை அதிகம் பாதித்து விட்டது. அந்தப் பாதிப்பில் இருந்து அவரை விடுவிக்கவேண்டும். இப்படி முகுந்தன் எண்ணினான்.

நாளை தங்கையின் பிறந்த நாள். அவளுக்கு ஏதாவது பரிசுப் பொருள் வாங்கிக் கொடுக்க வேண்டும். அவளை மகிழ்விக்க வேண்டும் என அவன் விரும்பினான். ஆனால் கையிலோ காசில்லை. ஆரிடம் கடன் வாங்கலாம் என நினைத் தவனுக்கு காஞ்சனாவின் ஞாபகம் வந்தது. அவள் பாவம். அவளுக்கும் ஆயிரம் பிரச்சினை கள் இருக்கலாம் என எண்ணியவன் அந்த எண்ணத்தைக் கைவிட் டான்.

ஒரு முடிவுக்கு வந்தவன், சம்பள முற்பணம் கேட்டு மேலதிகாரிக்குக் கடிதம் எழுதினான். அவனது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனா கேட்டேன். சம்பள முற்பணந் தானே கேட்டேன். அதைக் கூட தர மறுக்கிறார்களே என அவன் நினைத்தான். முகுந்தனுக்கு இந்த வாழ்க்கை மீதே வெறுப்பாக இருந்தது.

"என்ன யோசிக்கிறியள்."

காஞ்சனா கேட்டாள்.

"ஒன்றுமில்லை" இவன் கூறினான்.

"என்னட்ட மறைக்க வேண்டாம்".

விடயத்தை அறிந்து கொள்ளும் ஆவல் அவள் கண்களில் தெரிந்தது. அந்தப் பார்வை முகுந்தனை வசீகரித்தது.

"நாளைக்குத் தங்கச்சியின்ர 'பேத்டே'"

இப்படி இவன் கூறினான்.

"அதுக்கேன் யோசிக்கிறியள். வேலை முடிஞ்சு போகேக்க சரோவுக்கு நல்லதா ஒரு சுடிதார் வாங்குவம்."

எனக் கூறிய காஞ்சனா ஆதரவாக அவன் கரங்களைப் பற்றினாள். அவளது அன்பும் பரிவும் அவனுக்கு ஆறுதலைத் தந்தது.

*(ஞாயிறு தினக்குரல் 16.10.2011)*

# 8

# வேதனை

அவரது வலது கையிலே ஊசி குத்தப்பட்டு அதன் மூலம் மருந்துகள் உடலுக்குள் செலுத்தப்படுகின்றன. தலைக்கு மேல் சுழரும் மின்விசிறி தெளிவாகத் தெரிவதும் பின்னர் தெளிவற்றுப் போவதும் காட்சி மாற்றம் போல் உணர்கிறார்.

கனவு நிலையில் இருக்கவே மோகன் ஆசைப்படுகிறார். அதுவே அவரை வேதனையில் இருந்து விடுவிக்கிறது.

வயிற்று வலியால் அவதிப்பட்ட அவரை வதனா ஆஸ்பத்திரிக்கு கூட்டி வந்தாள். மோகனைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவரை அங்கேயே அனுமதித்து விட்டனர்.

"கன நாள் இருக்க வேணுமே." இவர் கேட்டார்.

"ஒரு கிழமை மட்டில இஞ்ச இருக்க வேண்டி வரலாம்." இப்படி வைத்தியர் கூறினார்.

வதனா அடிக்கடி இவரைப் பார்க்க வந்தாள். ஆஸ்பத்திரியில் மோகன் அனுமதிக்கப்பட்டு வாரம் ஒன்றாகி விட்டது. அந்தப் பத்தாம் இலக்க "வாட்டில்" இருந்தவர்களில் பலர் இவருக்குப் பழக்கமாகி விட்டனர்.

"உங்களுக்கு என்ன வருத்தம்." இவருக்கு அருகில் இருந்த கட்டிலில் படுத்திருந்தவர் மோகனிடம் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈரல் பழுதாகிப் போச்சுதாம்." இவர் கூறினார்.

"குடிக்கிறனியளே."

"ஓம்".

"உங்களுக்குக் குடிச்சதால வருத்தம். எனக்குக் குடிக்காமலேயே வருத்தம்." பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்தவர் சொன்னார்.

மோகன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் இரண்டு தடவைகள் நீர்குத்தி எடுத்தனர். வயிற்று வீக்கம் சற்றுக் குறைந்திருந்தது. ஆனால் உணவு உட்கொள்வதில் சிரமப்பட்டார்.

சிறுநீர் கழிப்பதில் சிக்கல் இருக்கக் கூடாது என்பதற்காக சிறுநீர் துவாரத்தில் குழாய் பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் குழாயின் முடிவில் பிளாஸ்ரிக் பை காணப்பட்டது. கால் பக்கமாக கட்டிலின் சட்டத்துடன் பிளாஸ்ரிக் பை கட்டப்பட்டிருந்தது. அந்தப் பையின் அடியில் ஒரு மூடி. சிறுநீர் நிரம்பியதும் அந்த மூடியை திறந்து பிளாஸ்ரிக் பையில் உள்ள சிறுநீரை வேறொரு பிளாஸ்ரிக் போத்தலில் ஊற்ற வேண்டும். பின் மலசலகூடத்துக்கு எடுத்துச் சென்று போத்தலை கழுவி வைக்க வேண்டும்.

இதனை மோகனால் செய்ய முடியவில்லை. வதனாவே இவற்றை எல்லாம் செய்தாள். இது அவருக்குச் சங்கடமாக இருந்தது.

கையிலே குத்தப்பட்டிருக்கும் ஊசி, அதன் ஊடாகச் செலுத்தப்படும் மருந்துகள், சல வாசலில் பொருத்தப்பட்டிருக்கும் குழாய். இவை எல்லாம் அவர் இஷ்டத்துக்கு புரண்டு படுக்க இடைஞ்சலாக இருந்தன.

இப்படி ஒரு நிலை ஏற்படுவதற்குத் தானே காரணமாக அமைந்துவிட்டதை எண்ணி அவர் வருந்தினார்.

பாடசாலையில் படிக்கும் காலத்தில் நண்பர்களோடு சேர்ந்து பனங்கள்ளு அருந்தியிருக்கிறார். அப்படி ஆரம்பமான பழக்கம் அவரைச் சாராயம் வரை கொண்டு சென்று விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மது அருந்துவதும் மதிமயங்கிக் கிடப்பதுமே மகிழ்வான விடயங்கள். மதுப் பழக்கம் அற்றவர்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கத் தெரியாதவர்கள். இப்படி அவர் எண்ணியிருக்கிறார்.

மாலை ஐந்து மணியாகி விட்டால் மோகனைத் தேடி நண்பர் கள் வருவார்கள். அவர்களோடு சேர்ந்து இவர் மது அருந்தச் செல்வார்.

அவர் சிறுவனாக இருக்கும் போதே அப்பா இறந்து விட்டார். அப்பாவின் ஓய்வூதியத்தில் அம்மா இவரைக் கஷ்டப்பட்டு படிக்க வைத்தா. தனிப்பிள்ளை என்பதால் அவருக்கு அம்மாவிடம் அதிக செல்லம். செல்லம் கொடுத்தே மோகனைப் பழுதாக்கி விட்டதாக உறவினர்களும் நண்பர்களும் அம்மாவைக் குறை கூறினர்.

பாடசாலை ஆசிரியராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அம்மா ஆனந்தப்பட்டா. உறவினர்களும் நண்பர்களும் மோகனை ஒரு வித மரியாதையுடன் நோக்கினர்.

இளமைத் துடிப்புடன் அவர் வேலைக்குப் போய் வந்த நாட்கள் மிக இனிமையானவை. அன்று அவர் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்திருக்கும் இன்றைய மோகன் அல்ல. சினிமாத்தனங்களற்ற இயல்பான இளைஞனாக அப்போது அவர் காணப்பட்டார்.

அதனால்த்தான் கலா ரீச்சர் அவரோடு அதிகம் பழகினாள். அவளின் நட்பு மோகனுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியது. கலா ரீச்சரோடு பழக ஆரம்பித்த பின் அவர் மதுப் பழக்கத்தைக் கைவிட்டார்.

பாடசாலையில் படிக்கும் போதும் பல்கலைக் கழகத்தில் கற்கும் போதும் பல நண்பர்களோடு பழகியிருக்கிறார். ஆனால் ஆசிரியப் பணியில் சேர்ந்த பின்னர் தான் பெண்ணிடம் மனதைப் பறி கொடுத்தார்.



சின்ன விடயங்களைக் கூட அவர் இரசிக்கத் தொடங்கினார். கலா ரீச்சரோடு கதைக்கும் போது இதயம் ஐஸ்கட்டி போல குளிர்வதை உணர்ந்தார்.

ஆசிரியர் ஓய்வறையில் கலா ரீச்சரைக் கண்டால் மோகன் உடனே அங்கு சென்று விடுவார். பலர் முன்னிலையில் அவளுக்கு அருகில் சென்று அமர்வதை நாகரிகம் கருதி அவர் தவிர்த்திருக் கிறார். ஆனால் சற்று விலகியிருந்து கலா ரீச்சரை இரசித்திருக்கிறார். மற்றவர்கள் பார்க்காத வகையில் இருவரும் புன்னகைகளை பரிமாறியிருக்கின்றனர்.

கலா ரீச்சர் கறுப்பு. அந்தக் கறுப்பு மோகனுக்குப் பிடித் திருந்தது. கார் முகிலாக கலா ரீச்சர் இவரை ஆட் கொண் டிருந்தாள். அவளின் ஆக்கிரமிப்புக்குள் இவர் அடங்கிப் போயிருந்தார். காலமெல்லாம் அப்படி அடங்கிக் கிடப்பதையே இவர் மகிழ்வாகக் கருதினார்.

காலம் எதையும் மாற்றிவிடும். இனிப்பான விடயங்களும் காலவோட்டத்தில் கசப்பாகி விடுகின்றன.

மோகனை மோகித்த கலா ரீச்சர் இப்போது அவரின் பார்வையிலிருந்து விலக முற்பட்டாள். இவராகப் போய் கதைத்த சந்தர்ப்பங்களிலும் ஓரிரு வார்த்தைகளுடன் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

தொடர்ந்து வந்த நாட்களில் பாடசாலையில் கலா ரீச்சரை காணமுடியவில்லை. ஏன் பாடசாலைக்கு வரவில்லை என்பதும் யாருக்கும் தெரியவில்லை. இவர் ஒவ்வொரு நாளும் கலா ரீச்சரின் வருகையை எதிர்பார்த்தார். பின்வந்த நாளொன்றில்

"கலா, கனடா போயிட்டாள்" என ரேவதி ரீச்சர் கூறினாள்.

"எங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே" என்று மலர் ரீச்சர் கூறினாள்.

"சொல்லியிருக்கலாம் ஆனால் அவள் சொல்ல விரும்பேல்ல" எனச் சொன்ன ரேவதி ரீச்சர் ஓய்வறையில் அமர்ந்திருந்த மோகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரக்கண்ணால் மற்றவர்களுக்குக் காட்டிச் சிரித்தாள். அவள் ஏளனப் படுத்தியதைக் கண்டும் காணாதவர் போல இவர் இருந்து விட்டார்.

துக்கம் தொண்டையை அடைத்தது. கலா ரீச்சரின் நினைவைத் தொலைக்க அன்று அதிக மது அருந்தினார். எதை மறக்க நினைத்தாரோ அதுவே அவரை ஆட்கொண்டது.

கலா ரீச்சரினால் அவரது ஆளுமை மழுங்கடிக்கப்பட்டு விட்ட தாக உணர்ந்தார். காற்றுப் போன பந்தாக தான் ஆகிவிட்டதாக நினைத்தார்.

போர் முடிந்து மீள் குடியேற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மோகன் கல்வி கற்பிக்கும் பாடசாலையிலும் புதிய மாணவ மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

அப்படித் தான் கலைநிலாவும் அந்தப் பாடசாலையில் சேர்க் கப்பட்டாள். பரட்டைத் தலை. குழிவிழுந்த கண்கள். எலும்புக் கூட்டுக்குச் சட்டை போட்டது போன்ற தோற்றம்.

தந்தையை இழந்த அவள் மீது இவருக்கு இரக்கம் ஏற்பட்டது. தன்னை விடவும் துன்பப்படுபவர்கள் இன்னும் பலர் இருக்கின்றனர் என உணர்ந்தார். அந்த எண்ணம் மோகனுக்கு தன்னம்பிக்கையைத் தந்தது.

மூன்றாம் வகுப்பில் படிக்கும் கலைநிலாவுக்குத் தேவை யானவற்றை இவர் வாங்கிக் கொடுத்தார். அந்த சிறுமியின் மகிழ்வு இவருக்கு மனநிறைவைத் தந்தது. தன் வாழ்க்கையிலும் அர்த்தம் இருப்பதாக அவர் எண்ணினார்.

கலைநிலாவின் தாய் வதனா, அவரைக் கண்டு நன்றி தெரிவித்தாள். மோகன் அதை எல்லாம் எதிர்பார்க்கவில்லை. கலைநிலா அந்தப் பாடசாலைக்கு வந்த பின்னர் அவரது வாழ்க்கையே மாறிப்போய் விட்டது. அவர் மதுவைக் கைவிட்டு அதிக நாட்களாகி விட்டன.



காலையில் பாடசாலைக்கு வந்ததுமே கலைநிலா வந்திருக் கிறாளா எனப் பார்ப்பார். அவளது வரவு அவருக்கு மகிழ்வைத் தந்தது.

கலைநிலாவின் அம்மா வதனா, 'கம்பியூட்டர்' கற்றிருந்தாள். மோகனின் முயற்சியால் 'கொமியூனிக்கேசன்' ஒன்றில் வதனாவுக்கு வேலை கிடைத்தது.

இப்போதெல்லாம் மாலை வேளைகளில் அவர் நண்பர்களோடு சேர்ந்து மது அருந்துவதில்லை. கலைநிலாவுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக அவளின் வீட்டுக்குச் செல்வார். அப்போதெல்லாம் வதனா இவருக்குத் தேநீர் தந்து உபசரிப்பாள். ஆரம்பத்தில் மோகனோடு ஓரிரு வார்த்தைகள் பேசிய வதனா, இப்போது சகஜமாக உரையாடினாள். அந்தக் குடும்பத்தில் ஒருவராக இவர் உள்வாங்கப்பட்டிருந்தார்.

"மோகன் மாஸ்டர் பெரிய கில்லாடி தான். மாடும் கண்டுமா எல்லோ பிடிச்சிருக்கிறார்."

ரேவதி ரீச்சர் இவருக்கு கேட்கும்படியாக வேறு ஆசிரியர்களிடம் கூறினாள். அந்த வார்த்தைகள் அவரைக் காயப் படுத்தின. ஆனால் அவர் அதனை வெளிக்காட்டவில்லை.

மோகனின் தாய் உயிரோடு இருந்த வரை அவருக்குத் திருமணம் செய்து வைப்பதில் ஆர்வம் காட்டினா. கலா ரீச்சர் மீதான காதல் தோல்வியால் இவர் திருமணத்தை விரும்பவில்லை.

அம்மாவின் இறப்பு இவரை இன்னும் வருத்தியது. இதனால் மது அருந்தினார். மதுவுக்கு அடிமைப்பட்ட இவருக்கு யாரும் பெண் கொடுக்க முன்வரவில்லை.

கலைநிலாவின் வரவு மோகனின் வாழ்க்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. அந்தச் சிறுமியை இவர் தன் பிள்ளையாகவே நினைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை அவரைப் பார்க்க வதனா ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாள். அவளின் கைத்தாங்கலின் உதவியால் மோகன் கட்டிலில் எழுந்தமர்ந்தார். திட உணவுகளை உண்பது அவருக்குச் சிரமமாக இருந்தது. இதனால் அவள் பாற்கஞ்சி கொண்டு வந்திருந்தாள். அதனை வதனாவே அவருக்கு ஊட்டினாள். இவர் மிகுந்த சிரமப்பட்டுக் குடித்தார்.

“வதனா, நீங்கள் வீணாக் கஷ்டப்படுறியள்.”

“எனக்கிது கஷ்டமாத் தெரியேல்லை” என அவள் கூறினாள்.

இவர் வதனாவைப் பார்த்தார். அவள் மழையின்றி ஏங்கும் நிலம் போலத் தெரிந்தாள். மேகங்களற்ற வானமாகத், தான் இருப்பதை நினைத்து இவர் வேதனைப்பட்டார்.

*(சுடர் ஒளி 11.09.2011)*

# 9

# வாழ்க்கைப் பயணம்

அவன் வலந்தலைச் சந்தியை வந்தடைந்த போது விடியத் தொடங்கியிருந்தது. பொன்னாலைக் கடலுக்கப்பால் அடி வானில் சிவப்புப் பந்தாகக் கடல் குளித்து எழும்பும் சூரியன்.

கோடை காலத்தில் இந்தத் தரிசனத்தைக் கண்டு கொண்டே அரவிந்தன் வேலைக்குப் போவான்.

கோடையைப் போன்றே மாரிகால இருட்டும் குளிரும் அவனுக்குப் பிடிக்கும். கார் காலப் பொழுதுகளில் பொன்னாலைக் கடலில் ஓரா மீன்கள் பிடிபடும். இவை பொரியலுக்குச் சுவை யானவை. இங்கு பிடிக்கப்படும் கயலும், திரளியும், கீளியும் இவனுக்குப் பிடிக்கும். கயல் மீன் சினை மிகவும் ருசியானது. அரவிந்தன் மீன் வாங்குவதற்காக மாலை வேளைகளில் உமல்பையுடன் கடற்கரைக்கு வருவான்.

இவன் வலந்தலைச் சந்தியில் மீன் சந்தைக்கு முன்னாலுள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் காத்து நிற்கிறான்.

வழித்தட இலக்கம் எழுநூற்றி எண்பத்திரண்டு பேரூந்துகள் காரைநகர் - யாழ்ப்பாணம் மார்க்கத்தில் அடிக்கடி பயணிக்கின்றன. இவை மூளாய் ஊடாக யாழ்ப்பாணம் செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவிந்தனின் அம்மா, அப்பா இருவரும் மூளாய் வைத்திய சாலையில் தான் பிறந்தார்கள். அங்கு கடமையாற்றிய வைத்திய கலாநிதி சம்பந்தன் மிகத் திறமை வாய்ந்தவர். அவரிடம் காட்டப் பருத்தித்துறையில் இருந்தும் நிறையப்பேர் வருவார்கள். இதனால் பருத்தித்துறையில் இருந்து மூளாய்க்கு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேரூந்துகள் சேவையிலீடுபட்டன. மூளாய் வைத்தியசாலையில் இருந்த சிற்றுண்டிச்சாலை மிகவும் பிரசித்த மானது. அந்த சிற்றுண்டிச்சாலையை நடத்தியவர் மிகச் சுவையாகத் தேநீர் தயாரிப்பார். இவனது தாத்தா அந்த வைத்தியசாலையில் செயலாளராக இருந்துள்ளார்.

இவை எல்லாம் அப்பா சொல்லி அரவிந்தன் தெரிந்து கொண்டது.

முன்னைய காலத்தில் காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு மக்கள் மாட்டு வண்டில்களையே பயன்படுத்தினர். பயணம் நீண்டதாக இருந்ததால் இடையில் இளைப்பாறிச் செல்வார்கள். மூளாய் வைத்தியசாலைக்குப் பக்கத்தில் ஒரு பாரிய ஆலமரமும் அதற்கு அருகில் கிணறும் இருக்கிறது. அது புட்டுத் தின்னி ஆலமரம் என ஊர் மக்களால் அழைக்கப்படுகிறது.

இவன் வேலைக்குப் போகும் போதும் வேலை முடிந்து வரும்போதும் அந்தப் புட்டுத்தின்னி ஆலமரத்தைப் பார்க்கத் தவறுவதில்லை. அந்த ஆலமரத்தில் இப்போது இலைகளைக் காண முடிவதில்லை. ஆலமரம் பட்டுவிடக் கூடாது என இவன் எண்ணிக் கொள்வான். எமது இருப்பை நிலைநிறுத்தும் பண்பாட்டுச் சின்னங்கள் கால மாற்றத்தில் அழிவுற்றுப் போவது அவனுக்குக் கவலை தருவதாக இருந்தது.

சுமதியை இன்னும் காணவில்லை. அவள் எப்பவும் இப்படித் தான். நேரஞ் செல்லத்தான் வருவாள். வயதான தாய், பாடசா லைக்குச் செல்லும் தங்கச்சி, இவர்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்து வைத்து விட்டே அவள் வெளிக்கிட வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுக்கென்றால் ஒரு பொறுப்பும் இல்லை. எல்லாம் அம்மா கவனிச்சுக் கொள்ளுவா

புடைவைக் கடையில் வேலை பார்ப்பது அரவிந்தனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இவனது படிப்புக்கு இப்படியான வேலை கிடைத்ததே பெரிய விடயம். இன்னும் கொஞ்சம் கவனமாகப் படித்திருந்தால் இதைவிட நல்ல வேலை கிடைத்திருக்கலாம்.

அரவிந்தன் கஷ்டப்பட்டுத்தான் படித்தான். படித்தவர்கள் எல்லாம் பாஸ் பண்ணுகிறார்களா? வெற்றி பெற்றவர்கள் மட்டுமே வரலாற்றில் பதியப்படுகிறார்கள். இவனைப் போல தோல்வி அடைந்தவர்களைச் சமுதாயம் கண்டுகொள்வதில்லை.

காரைநகரில் உள்ள கலவன் பாடசாலையில்தான் இவன் கல்வி கற்றான். பாடசாலைக்கு வரும்போது தினமும் வழியில் உள்ள சேவுகரை வணங்கி விட்டு வருவான். அரவிந்தனின் வீடு இலகடியில் இருந்தது. சேவுகர் கோயிலை கடந்து தான் இவன் பாடசாலைக்குப் போக வேண்டும். அது சிறிய தெருக்கோயிலாக இருந்தாலும் சிறப்புமிக்கதாக இருந்தது. இலகடி யைச் சேர்ந்தவர்கள் சேவுகரை காவல் தெய்வமாகப் போற்றி வணங்கினர்.

ஆறுமுகம் வாத்தியார் கொடுக்கும் வீட்டுக் கணக்குகளைச் சரியாகச் செய்யாமல் இவன் பல நாட்கள் அவரிடம் அடிவாங்கி யிருக்கிறான். கணக்குப் பாடம் அவனுக்குக் கசப்பாக இருந்தது. வாத்தியாரிடம் அடிவாங்கிய நாட்களை அவனால் மறக்க முடியாது.

அரவிந்தனுக்குப் பாடசாலை சிறைக்கூடம் போன்றே தெரிந்தது. அவன் சிறைக்கூடம் சென்றதில்லை. ஆனால் சிறைக்கூடங்கள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். சிலவேளை சிறைக்கூடங்கள் இந்தப் பாடசாலைகளை விட சிறப்பாக இருக்கலாம். அங்குள்ள காவலர்கள் ஆசிரியர்களை விடவும் அன்பானவர்களாகக் காணப் படலாம். இப்படி இவன் எண்ணியிருக்கிறான்.



“இந்தச் சின்னக் கணக்குக் கூட உனக்குத் தெரியேல்லை. மண்டையிக்க களிமண்ணே அடைஞ்சிருக்கு” என்று கூறி ஆறுமுகம் வாத்தியார் அடிக்கும் போது “அடியாதேங்கோ, அடியாதேங்கோ, இனிமேல் சரியாய்ச் செய்வன்” என இவன் கெஞ்சுவான். அவர் மிஞ்சுவார்.

“நீ எல்லாம் ஏன் படிக்க வாறியோ” என வாத்தியார் கூறும்போது இவனுக்கு மிகுந்த அவமானமாக இருக்கும். அதுவும் தனது வகுப்பில் படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு முன்னால் இப்படி அடியும் பேச்சும் வாங்குவதை அவன் விரும்பவில்லை.

தான் வணங்கும் சேவுகரும் தன்னைக் கைவிட்டு விட்டாரே என எண்ணி அழுதிருக்கிறான்.

அவன் பாடசாலையில் படிக்கும் காலத்தில் எந்தப் பெண் பிள்ளைகளும் அவனைப் பார்த்ததில்லை. இவனோடு கதைத்த தில்லை. இவன் ஏதும் கேட்டால் சொல்வதில்லை. அரவிந்தனைப் போல இன்னும் சிலர் அந்த வகுப்பில் இருந்தார்கள். மொக்குகள் என இவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

ஒரு நாள் இவனது வீட்டுக்கு அப்புச்சி மாமா வந்திருந்தார். தலைவாசல், வீடு, அடுக்களை என மூன்று பகுதிகளைக் கொண்டதாக அரவிந்தனின் வீடு அமைந்திருந்தது. வளவில் பனை மரங்களும் புளிய மரங்களும் நின்றன.

அப்புச்சி மாமா இவனது அம்மாவின் ஒன்று விட்ட தம்பி. இவர்களது குடும்பத்தில் அதிகம் அக்கறை கொண்டவராகத் தன்னைக் காட்டிக் கொள்பவர்.

தலைவாசலில் போடப்பட்டிருந்த வாங்கில் அவர் கால் மடித்திருந்தார். அருகில் வெற்றிலைத் தட்டு. அதிலிருந்து ஒரு வெற்றிலையை எடுத்தவர் காம்பைக் கிள்ளிவிட்டுச் சுண்ணாம்பைத் தடவினார். வெற்றிலையை வாய்க்குள் திணித்தவர் பாக்குச் சீவலையும் போட்டுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா தலைவாசல் படிக்கட்டில் அமர்ந்திருந்தா. கையிலே அரிசி நிரம்பிய சுளகு. அரிசி புடைப்பதில் அவவின் கவனம் இருந்தது.

அப்புச்சி மாமா தொண்டையை ஒரு தரம் செருமிக் கொண்டார். பாடசாலை விளையாட்டுப் போட்டியில் ஒலி வாங்கி சரியாக இயங்குகிறதா எனச் சோதிப்பதை அவரது செய்கை இவனுக்கு நினைவூட்டியது.

"ஆறுமுகம் வாத்தியார் என்னோட கதைச்சவர். அரவிந்தன் படிக்கிறான் இல்லையாம்" இப்படி அப்புச்சி மாமா கூறினார்.

"அவன் படிப்பான்" என அம்மா சொன்னா.

"அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிறதில பிரயோசனம் இல்லை என்று வாத்தியார் சொல்லுறார்."

"அப்ப என்ன செய்யிறதாம்." அம்மா கேட்டா.

"எங்கையாலும் கடையில பிடிச்சு விடட்டாம். எனக்கும் அது சரி என்று தான் படுகுது. அத்தானும் எவ்வளவு காலம் மேசன் வேலை செய்யிறது. உடம்பும் இடங் கொடுக்க வேணுமே."

அப்புச்சி மாமா கூறினார்.

"தம்பி, நீ உன்ரை பொம்பிளைப் பிள்ளையைப் பட்டணத் துக்கு அனுப்பிப் படிப்பிக்கிறாய். எங்களுக்கு அதுக்கு வசதி யில்லை. அவன் இஞ்சை என்றாலும் படிக்கட்டும்".

அம்மா தீர்க்கமாகக் கூறிவிட்டா.

அரவிந்தன் தொடர்ந்து படித்தான். சாதாரண தரத்தில் ஏனைய பாடங்களில் சித்தியடைந்த போதும் அவனால் கணிதத்தில் சித்தியடைய முடியவில்லை. ஆறுமுகம் வாத்தியாரின் அடிகளும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

அப்புச்சி மாமாவுக்குத் தெரிந்த ஒருவரின் புடைவைக் கடையில் இப்போது அவன் விற்பனையாளனாகப் பணிபுரிகிறான். அந்த



வேலையை அப்புச்சி மாமாவே இவனுக்கு எடுத்துத் தந்தார். உறவு என்ற வகையில் அவர் இதனைச் செய்திருந்தார்.

அக்கா என உறவு பாராட்டி அப்புச்சி மாமா வந்த போதும் மாமியோ, மகளோ அரவிந்தனின் வீட்டுக்கு வருவதில்லை. காசும் படிப்பும் அவர்களை இவர்களிடம் இருந்து பிரித்து விட்டதாக இவன் எண்ணினான்.

புடைவைக் கடையில் வேலை செய்வது கஷ்டமாக இருந்தாலும் சுமதியின் அறிமுகம் அவனுக்கு ஆறுதலைத் தந்தது.

பாடசாலையில் படிக்கும் போது சக மாணவர்களாலும், மாணவிகளாலும் அவன் ஒதுக்கப்பட்டான். உறவினர்கள் அவனை அண்டுவது இல்லை. ஆறுமுகம் வாத்தியார் பிரம்பால் அடித்தே இவனது ஆளுமைகளை மழுங்கடித்து விட்டார்.

இவன் புடைவைக் கடைக்கு வேலைக்குப் போன முதல் நாள் புதன் கிழமையாக இருந்தது. புதன்கிழமை நல்ல நாள். அன்று அட்டமி, நவமி என்று எதுவும் இல்லை. அதனால் அந்த நாளை அப்புச்சி மாமா தெரிவு செய்திருந்தார்.

"நீர் காரைநகர் தானே."

இப்படித்தான் சுமதி இவனோடு அறிமுகமானாள்.

"உம்மை நான் இதற்கு முந்தி எங்கையோ கண்டிருக்கிறன்."

சுமதி கூறினாள்.

"மடத்துக்கரை அம்மன் கோயில் திருவிழாவில கண்டிருப் பியள்." என அரவிந்தன் சொன்னான்.

"இருக்கலாம்" என அவள் கூறினாள்.

சுமதி மாநிறமாக பார்க்க அழகாக இருந்தாள். அந்தக் கிராமத்து அழகு அவனைச் சுண்டி இழுத்தது. அவளின் கண்கள் கயல்மீனின் கண்களை அவனுக்கு நினைவூட்டின. அவளோடு நிறையக் கதைக்க வேண்டும் என இவன் விரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமதி கடையில் காசாளராக இருந்தாலும் இவனோடு நட்புடன் பழகினாள். தலைக்கனம் இல்லாத அவளின் பண்பு இவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

நேற்று இவனது வீட்டுக்கு அப்புச்சி மாமா வந்திருந்தார்.

"ராசன்ர பெட்டையோட அரவிந்தன் திரியிறானாம். ஊரில ஆக்கள் கதைக்கினம்."

அப்புச்சி மாமா இவனது தாயிடம் கூறினார்.

"அதுக்கென்ன, அவையும் மனிசர் தானே."

அம்மா அமைதியாகக் கூறினா.

அப்புச்சி மாமா எதுவும் கதைக்கவில்லை. எழுந்து சென்று விட்டார்.

பொன்னாலைக் கடலுக்கப்பால் மறுகரையில் கிருஷ்ணன் கோயிலின் கோபுரம் தெரிகிறது. கவிஞர் மு. பொன்னம்பலம் எழுதிய கவிதை இவனுக்கு ஞாபகம் வருகிறது. கவிஞனுக்குக் கிடைக்காத கிருஷ்ணனின் தரிசனம் இறால் பிடிக்கும் பெண்ணுக்குக் கிடைப்பதை மு.பொ. அழகாக எழுதியிருந்தார்.

அன்று காலை வரும்போதும் இவன் சேவுகர் கோயிலை வணங்கி விட்டுத்தான் வந்தான். சேவுகர் இவனைக் கைவிடவில்லை.

தூரத்தே சுமதி வருவது தெரிகிறது. காத்திருத்தலின் சுகத்தை அவன் இப்போது உணர்கிறான். பேரூந்தில் மட்டுமல்ல, வாழ்க் கையிலும் அந்தத் தாழ்ந்த சாதிப் பெட்டையோடு ஆம், சுமதியோடு பயணிக்க இவன் தயாராகி விட்டான்.

*(வீரகேசரி வாரவெளியீடு 17.07. 2011)*

# 10

# தயக்கம்

சித்திரை மாதத்து நண்பகல் என்பதால் வெப்பம் அதிகமாக இருந்தது. சோளகம் இன்னும் வீசத் தொடங்கவில்லை. சோளகக் காற்று வைகாசி நடுப்பகுதிக்குப் பின்னரே ஆரம்பமாகும். கச்சேரி நல்லூர் வீதியில் தார் உருகி உள்ளிருந்த கற்கள் மேலே துருத்தி நின்றன. அந்த வீதிக்குக் கடைசியாகத் தார் ஊற்றியது எப்போது என்று ஞாபகமில்லை. தொண்ணூறாம் ஆண்டுக்கு முன்பு என்பது ஊகம்.

வீதியின் இரு மருங்கிலும் கிடுகுவேலிகளில் சீமைக்கிழுவை களுடன் இப்பில் இப்பில் செடிகள். அப்பால் கண்டி வீதிக்கு அண்மையாக ரயில் கடவை. முன்பெல்லாம் இதைக் கடக்கும் போது அவதானம் தேவை. இங்குள்ள குழந்தைகளுக்கு ரயில் என்றால் என்னவென்று தெரியாது. ரயில் கடவையை அண்டிக் காணப்படும் அந்த வேப்பமரத்துக்குப் பக்கத்தில் தெரிவது தான் கந்தசாமி முதலாளியின் மருந்துக் கடை.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மருந்து வகைகள். நல்லெண்ணெய் நிரம்பிய போத்தல்கள். சாந்தி கொண்டு வந்து கொடுக்கும் நாட்டுக் கோழி முட்டைகள். கடையின் முன்பாக "சுத்தமான நல்லெண்ணெய் இங்கே கிடைக்கும்" என்ற வாசகம் கடதாசி அட்டையிலே எழுதப்பட்டு மாட்டப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமி முதலாளி மதனிடம் கடையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுச் சாப்பிடப் போய்விட்டார். அவர் வீட்டுக்குச் சென்று உணவருந்தி சிறிது நேர நித்திரைக்குப் பின்பே கடைக்கு வருவார். கந்தசாமி வருவதற்குப் பிற்பகல் இரண்டு மணிக்கு மேலாகும். அவர் வந்த பின்னரே மதன் சாப்பிடப் போவான்.

இவனுக்கு இன்று ஏனோ வயிற்றில் பசியில்லை. முகத்திலே கவலையின் ரேகைகள். எதற்காக இப்படி, இவனுக்கே புரிய வில்லை.

"இந்தா, இந்த மருந்துக் குளிசை இருக்கே. எனக்கொரு பதினைஞ்சு வேணும்."

அந்தக் கடையின் வாடிக்கையாளரான இராசம்மாக்கா காகிதத் துண்டொன்றை அவன் முன் நீட்டியபடி சொன்னா. மதன் துண்டை வாங்கிப் பார்க்கிறான். அந்த மருந்தினை தொண்ணூறாம் ஆண்டுக்குப் பின்பு இவன் இந்தக் கடையில் கண்டதில்லை. மதனின் முகபாவமே மருந்தில்லை என்பதை இராசம்மாவுக்கு உணர்த் தியது.

"தம்பி, இந்தத் தொய்வு நோய் தாங்க முடியேல்ல. கொழும் புக்குப் போறவையிட்டக் கொடுத்தாலும் மருந்தென்றவுடன் மறுத்து விடுயினம்."

இராசம்மாக்கா சென்று விட்டா. பாவம் இவவைப் போல இஞ்ச இன்னும் எத்தனையோ. இவன் பெருமூச்செறிந்தான்.

சில மாதங்களுக்கு முந்தி நாய் கடிக்குப் போடும் ஊசி மருந்தில்லாமல் சனங்கள் கஷ்டப்பட்டது மதனுக்குத் தெரியும். சாந்தியின் அம்மாவுக்கு பரமசிவம் மாஸ்டரின் நாய் கடித்த சம்பவமும் இவன் நினைவுக்கு வந்தது.

மாஸ்டர் தான் சைக்கிளில் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார். அங்கு தடுப்பூசி மருந்தில்லை. மருந்தை வெளியில் வாங்கி வருமாறு சொல்லி விட்டார்கள். கலங்கிய கண்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்கு வந்தவளைக் கண்ட போது மதனுக்குப் பாவமாக இருந்தது. இவன் எங்கெல்லாமோ அலைந்து அந்த ஊசி மருந்தினை வாங்கி சாந்தியிடம் கொடுத்த போது அவள் நன்றிப் பெருக்குடன் இவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அந்தச் சம்பவம் நடந்து சில நாட்களின் பின் சாந்தி கடைக்கு வந்திருந்தாள்.

"கோழி முட்டையிருக்கு எடுப்பியளே" அவள் கேட்க இவன் முதலாளியைப் பார்த்தான்.

"எங்க பார்ப்பம்" அவள் மாதிரிக்கு ஒன்றை எடுத்து முதலாளிக்குக் காட்டினாள். நாட்டுக் கோழி முட்டை தவிட்டு நிறத்தில் பெரிதாக இருந்தது. கந்தசாமி முதலாளிக்கு மனதுள் திருப்தி. ஆனால் வெளிக்காட்டி கொள்ளாதவராக,

"பிள்ளை, உனக்குத் தெரியுந்தானே. இஞ்ச சனங்கள் முட்டை சாப்பிடுறதை மறந்து கனநாளாச்சு. கொண்டு வந்ததைத் திருப்பி அனுப்பக்கூடாது என்றதுக்காக எடுக்கிறன்."

சொல்லி முடித்தவர் முட்டைகளைப் பெற்றுக் கொண்டு காசைக் கொடுத்தனுப்பினார். அன்றிலிருந்து சாந்தி கடைக்கு முட்டைகள் கொண்டு வந்தாள்.

முன்பெல்லாம் யாழ்ப்பாணத்தில் கோழிப்பண்ணை நடத்தி கைநிறையக் காசு சம்பாதித்தோர் அதிகம். எண்பத்து ஏழாம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கோழிப் பண்ணைகள் அருகத் தொடங்கின. வந்தவர்கள் "சிக்கன், சிக்கன்" என்று இங்கிருந்த கோழிகளை யெல்லாம் தின்று தீர்த்தார்கள். தொண்ணூறின் நடுப் பகுதியிலிருந்து முட்டைகளும் இங்கு அனுப்பப்படுவதில்லை.

பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே சாந்தியை இவனுக்குத் தெரியும். அவளின் வீடு கச்சேரி நல்லூர் வீதியை அண்டியுள்ள நாயன்மார் வீதியில் தான் இருந்தது. மிகவும் இரம்மியமான காலைப் பொழுதுகளில் சைக்கிளில் பாடசாலைக்குச் செல்வது மதனுக்குப் பிடிக்கும்.



சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர் தரத்துக்குச் சென்றது, இவனுக்கு நினைவிருக்கிறது. அன்றுதான் மதன் முதற் தடவையாக நீளக்காற்சட்டை அணிந்தான். நீளக்காற் சட்டையை அப்போது பதினொன்று என மாணவர்கள் கேலியாகச் சொல்லு வார்கள். தற்போதைய ஆண்டு முறை பாடசாலைகளில் அறிமுக மாகாத காலம். வகுப்பு என்ற பதமே அமுலில் இருந்தது. பத்தாம் வகுப்பில் சாதாரண தரப் பரீட்சை எழுதி பதினொராம் வகுப்புக்குள் நுழையும் போது நீளக்காற் சட்டை அணிவதால் பதினொன்று என அதனை அழைத்தார்கள்.

அந்த பதினொன்றை அணிந்து இவன் பாடசாலைக்குச் சென்ற போது முத்திரைச் சந்தியில் சங்கிலிய மன்னனின் சிலையை அண்டிய பஸ் தரிப்பு நிலையத்தில் மாணவிகள் மத்தியில் ஒருத்தியாகச் சாந்தியும் நின்றாள்.

வாளுடன் குதிரையில் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் நல்லூர் இராசதானியின் மன்னன் சங்கிலியன் தன்னை அவதானிப்பது போன்றதோர் உணர்வு இவனுக்குள் ஏற்பட்டது. வெறும் சிலை என்று புறக்கணித்துவிட முடியாதவாறு அந்தச் சிலை உயிர்த் துடிப்புடன் வடிக்கப்பட்டிருந்தது.

மதன் அடிக்கடி அவளைச் சந்திக்க முயன்றான். அதற்காகவே பாடசாலைக்கு நேரத்தோடு சென்றான். பஸ்தரிப்பு நிலையத்தில் சாந்தியைக் காணும் போதெல்லாம் மனதிலே இன்ப வருடல். இவன் நல்லூர்க் கந்தசாமி கோயிலை அண்மிக்கும் போது கோயில் கோபுரத்தில் அமைந்துள்ள மணிக்கூட்டிலே நேரம் ஏழுநாற்பத்தி ஐந்தைத் தாண்டி விட்டிருக்கும். நேரத்தைப் பார்த்தவாறே இன்னும் உற்சாகமாகச் சைக்கிளை ஊன்றி மிதிப்பான். பாடசாலையிலும் பாடங்களுக்கிடையே சாந்தியின் நினைவு அவனை அலைக் கழிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பார்மஸிஸ்ட் கோஸ்" படித்து விட்டு இவன் கந்தசாமி முதலாளியின் மருந்துக் கடையில் வேலைக்குச் சேர்ந்தான். மதன் கடையில் பணி புரிந்துவரும் போது தான் சாந்தியை மீண்டும் சந்திக்க நேர்ந்தது.

அவளின் தாய்க்கு நாய் கடித்ததற்குத் தடுப்பூசி மருந்து வாங்கக் கடைக்கு வந்தபோது தான் மதன் முதன் முறையாகச் சாந்தியுடன் கதைத்தான். முட்டைகள் கொண்டு வந்து விற்பதற்காகக் கொடுத்த போது உறவு வளர்ந்தது. சில நாட்களுக்கு முன் ஒரு மாலை வேளை. மாலைப் பொழுதின் மனோரம்மியத்தைச் சிதைத்து விடுமாப்போன்று வானத்தில் மூன்று இயந்திரப் பறவைகள் வட்ட மிட்டன.

மதன் பிரதான பாதையால் போவதற்கு அஞ்சி சைக்கிளை அந்த ஒழுங்கையால் செலுத்தினான். சிறிது தூரம் சென்று முடக்கிலே சைக்கிளைத் திருப்பியபோது, சாந்தி வானத்தைப் பயத்துடன் நோக்கியபடி வாசலில் நின்றிருந்தாள். இயந்திரப் பறவைகள் இப்போ தாழப் பறந்தன.

"மரத்துக்குக் கீழ ஓடி வாங்கோ" சாந்தி பதற்றத்துடன் கூப்பிட்டாள். இவனுக்கு ஓடுவதற்கு அவகாசம் போதவில்லை. சைக்கிளைப் போட்டு விட்டு நிலத்திலே குப்புறப்படுத்தான். இயந்திரப் பறவைகள் அருகில் எங்கோ எச்சங்களைப் போட்டு விட்டுச் சென்றன.

சத்தங்கள் அடங்கிய போது சனங்கள் நடமாடத் தொடங்கினர். செஞ்சிலுவை அடையாளம் இட்ட வாகனம் ஒன்று ஸ்தலத்தை நோக்கி விரைவதை அவதானித்தான்.

மதன் சைக்கிளை உருட்டி வந்து சாந்தி வீட்டு வேலியோரம் நின்ற பூவரசுடன் சாத்தினான். வீட்டுத் திண்ணையில் பாதி இழைக்கப்பட்ட நிலையில் பனையோலைப் பெட்டி ஒன்று கிடந்தது. சாந்தி பனையோலையில் அழகாகக் கைவினைப் பொருட்கள் செய்வாள். இதுவும் அவளின் கைவண்ணமாகத் தான் இருக்க



வேண்டும் என அவன் நினைத்தான். "என்ன மௌனமாய் இருக்கிறியள்" இவனே பேச்சைத் தொடங்கினான். "ஒன்றுமில்லை" அவள் சமாளித்தாள்.

"ஆர் பிள்ளை வந்திருக்கிறது" சாந்தியின் தாய் உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தாள்.

"தம்பி, இவள் சாந்திக்கு ஒரு சம்பந்தம் வந்திருக்கு. பொடியன் சுவிஸில இருக்கிறான். சீதனம் என்று எதுவும் வேண்டாமாம். தன்ர செலவிலேயே இவளைக் கூப்பிடுறானாம்."

மதன் விடைபெற்று வரும்போது சாந்தியின் கண்களில் நீர் நிறைந்திருந்ததை அவதானித்தான்.

"மதன், போய்ச் சாப்பிட்டுவிட்டு வாரும்" கந்தசாமி முதலாளியின் குரல் கேட்டு சிந்தனையிலிருந்து விடுபட்டவன். கடிகாரத்தைப் பார்க்கிறான். நேரம் பிற்பகல் இரண்டு முப்பதைத் தாண்டி விட்டிருந்தது. வயிற்றில் பசி இல்லை. இவன் வீதியில் இறங்கி நடக்கிறான்.

*(வீரகேசரி வாரவெளியீடு 12.09.1993)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

## மறக்க முடியேல்லை!

சைக்கிளின் பின்சில்லை தம்பு மிக பக்குவமாகக் கழற்றினார். சில்லில் பொருத்தப்பட்டிருந்த கம்பிகளை அவர் ஒவ்வொன்றாக இறுக்கி "பக்கிள்" எடுப்பதை இவன் உன்னிப்பாக அவதானித் தான்.

தம்புவின் கைகளில் ஒரு இலாவகந் தெரிந்தது. அவருக்கு வயது அறுபதைத் தாண்டி இருக்கலாம். ஆனால், உடம்பில் தளர்ச்சி இல்லை. தலை மாத்திரம் நரைத்திருந்தது.

ரகு அந்தச் சைக்கிளை புதுசாக வாங்கியிருந்தான். புதுச் சைக்கிள் என்ற போதும் அவனுக்குத் திருப்தி இல்லை. சைக்கிளைக் கழற்றிப் பூட்டக் கொடுத்த இடத்திலும் அவர்கள் அந்தப் பணியைத் திறம்படச் செய்திருக்கவில்லை. "பிறேக்" அடிக்கடி கழன்றது. சைக்கிள் இருக்கை சரியாகப் பொருந்தவில்லை. எத்தனையோ சைக்கிள் திருத்தகங்களில் கொடுத்தும் குறையின்றிச் சைக்கிளைத் திருத்திக் கொள்ள முடியவில்லை.

ஆளுக்காள் ஒவ்வொரு அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர். சிலர் இப்ப வாற சைக்கிள்கள் சரியில்லை என்றனர். இன்னும் சில திருத்தகங்களை நடத்துவோர் சைக்கிள் விற்பனை செய்வோரைக் குறை கூறினர். ஆனால், அவனது சைக்கிளை நல்ல முறையில் திருத்திக் கொடுக்க அவர்களால் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் அவனுக்குத் தம்புவின் ஞாபகம் வந்தது. தம்பண்ணை இப்பவும் சைக்கிள் கடை வைச்சிருப்பாரோ. கனடா, பிரான்ஸ் அல்லது கொழும்பு என்று இடம்பெயர்ந்து போயிருந்தால், எதுக்கும் போய்ப் பார்ப்பம்? இப்படி எண்ணிய ரகு திருநெல்வேலி யில் இருந்து தட்டாதெருச் சந்திக்குச் சைக்கிள் மிதித்தான்.

தம்புவின் சைக்கிள் திருத்தகத்தைக் கண்டுபிடிப்பது அவனுக்குச் சிரமமாக இருக்கவில்லை. காங்கேசன்துறை வீதியில் தம்புவின் சைக்கிள் திருத்தகம் அமைந்திருந்தது. அதற்கு அருகில் சில புதிய கடைகள். அந்தத் தேநீர்க் கடை அப்படியே இருந்தது.

வசந்தியோடு போய் அந்தக் கடையில் பல தடவைகள் வடையும் மோதகமும் சாப்பிட்டுத் தேநீரும் குடித்திருக்கிறான்.

பல வருடங்களுக்குப் பிறகு ரகு இப்போது யாழ்ப்பாணம் வந்திருக்கிறான். இங்கேயே தங்கி விடுவது என்ற நோக்கத்துடன் மனைவியுடன் வந்து விட்டான். முப்பது வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் ரகுவைக் கொழும்புக்கு இடம்பெயர வைத்தது. அங்கே இவன் உழைத்தது வீட்டு வாடகைக்கும் சாப்பாட்டுக்கும் கூட போதுமானதாக இருக்கவில்லை. தெகிவளையில் ஒரு 'அனெக்சில்' ரகுவும் மனைவியும் காலத்தை ஓட்டினார்கள்.

தம்புவின் கடையில் போடப்பட்டிருந்த வாங்கில் உட்கார்ந்தவாறு இவன் கடையை நோட்டம் இட்டான். கடையின் மூலையில் பழைய சைக்கிள் ரயர்களும் ரியூப்களும் காணப்பட்டன.

பழைய சைக்கிள் உதிரிப் பாகங்கள் மற்றொரு பக்கம் காணப் பட்டன. திருத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சைக்கிள்கள் சிலவும் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

சைக்கிள் கடையின் உட்பக்கச் சுவரிலே புதிய சினிமா நடிகர்கள் மற்றும் நடிகைகளின் படங்கள். இவற்றுக்கிடையே வசந்தமாளிகை திரைப்படத்தில் சிவாஜி கணேசனும் வாணிஸ்ரீயும் தோன்றும் காட் சியைச் சித்திரிக்கும் படமும் காணப்பட்டது. வாணிஸ்ரீயின் முகத்தில் வசந்தியின் சாயல் தெரிந்தது. அந்தப் படத்தைத் தம்பு இன்னமும் பேணி வைத்திருக்கிறார்.



சிவாஜி கணேசன் சிறந்த நடிகர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவரது மிகை நடிப்பு பற்றிய விமர்சனங்கள் அவ்வப் போது முன்வைக்கப்பட்டன. அந்த வகையில் வசந்தமாளிகை திரைப்படத்தில் சிவாஜி அதிகம் மிகை நடிப்பை வெளிப்படுத்தி யிருந்தார் எனக் கூறப்பட்டது. ஆனால், மக்கள் அந்த மிகை நடிப்பை விரும்பினர்.

அதனால் வசந்தமாளிகை திரைப்படம் வெற்றி பெற்றது. யாழ்ப் பாணம் வெலிங்டன் திரையரங்கில் வசந்தமாளிகை திரைப்படம் ஒரு வருடம் ஓடியது சிறுவனாக இருந்த போதும் ரகுவுக்கு நன்றாகத் தெரியும்.

தங்களது வீடுகளுக்கு யாழ்ப்பாணத்தவர் வசந்தமாளிகை எனப் பெயர் வைத்து மகிழ்ந்தனர். மயக்கமென்ன என்ற வசந்தமாளிகை திரைப்படப் பாடலில் இவனுக்கும் மயக்கமிருந்தது. இது வசந்தியின் மேலிருந்த மயக்கமாக கூட இருக்கலாம். இன்றும் அடிக்கடி யாழ் நகர உணவகங்களில் இந்தப் பாடல் ஒலிக்கவிடப்படுவதை இவன் கேட்டிருக்கிறான்.

பிரமாண்டங்களில் எப்போதும் மக்களுக்கு விருப்பமிருக்கிறது. இவனுக்கும் அப்படியே. அதனால்த் தான் வாணி ஸ்ரீயில் வசந்தியைக் கண்டான்.

புதுமையை ஆதரித்தாலும் யாழ்ப்பாணத்தவர் பழைமை பேணுபவர்கள். பிரித்தானியாவில் எப்போதோ தமது உற்பத்திகளை நிறுத்தி விட்ட "ஒஸ்ட்டின்" "மொறிஸ்" நிறுவனங்களின் தயாரிப்பில் உருவான கார்களை யாழ்ப்பாணத்தில் இப்பவும் இவனால் காண முடிகிறது.

"தம்பி எப்ப யாழ்ப்பாணம் வந்தனீர்" தம்பு அண்ணையின் வினாவால் சிந்தனையில் இருந்து விடுபட்டவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“போன மாசம் வந்தனான்” எனக் கூறினான்.

“மனிசியும் வந்தவவோ” என அவர் கேட்டதற்கு “ஓம்” என இவன் தலையசைத்தான்.

அப்ப வசந்தியும் இவனோடு வந்து விட்டாள் என நினைத்தவர், அதற்கு அப்பால் என்ன விடயத்தைக் கதைப்பது எப்படிக் கதைப்பது என எண்ணியவராக தம்பு அவனது சைக்கிளைப் பழுது பார்ப்பதில் கவனத்தைச் செலுத்தினார்.

இவன் ஐந்தாம் வகுப்புப் படிக்கும்போது சைக்கிள் ஓடப் பழகினான். திருநெல்வேலிச் சந்தியில் மணியம் என்பவர் சைக்கிள் திருத்தகம் நடத்தினார். அவரது கடையில் சைக்கிள்கள் வாடகைக்கு விடப்பட்டன. மணித்தியாலத்துக்கு ஒரு ரூபாய் வாடகையாக அறவிடப்பட்டது. ரகு அப்படி ஒரு சைக்கிளை வாடகைக்குப் பெற்றுச் சைக்கிள் ஓடப் பழகினான்.

அப்போதெல்லாம், “றலி”, “ஹம்பர்”, “பி.எஸ்.ஏ. “றஜ்” சைக்கிள்களுக்குக் கூடுதல் கிராக்கி காணப்பட்டது. அநேகம் பேர் “றலி” சைக்கிள்களை விரும்பி வாங்கினர். இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்குக் கூடுதல் மவுசு இருந்தது. “ஒஸ்டின்”, “மொறிஸ்” கார்களைப் போல இப்பவும் பழைய “றலி” சைக்கிள்களுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது.

படிக்கும் காலத்தில் “றலி” சைக்கிள் ஒன்று இவனிடம் இருந்தது. கைச் செலவுக்குக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு அந்தச் சைக்கிளை அழகுபடுத்தியிருந்தான். “டயனமோ”, “ஹெட்லைட்டை”ச் சுற்றி மஞ்சள் துண்டு, “றோலிங்பெல்”, குஞ்சம் வைத்த “பார்கவர்”, “கோவாகரியர்” என ரகுவின் சைக்கிள் அழகாகக் காணப்பட்டது. மண்ணெண்ணெயும் தேங்காய் எண்ணெயும் கலந்து அந்தச் சைக்கிளை வாரத்துக்கு இரு தடவை துடைப்பான்.

இவனைப் போன்று பலரும் அப்போது சைக்கிள்களை அழகுற வைத்திருந்தனர். யாழ் மண்ணின் வாகனமாக சைக்கிள் கருதப் பட்டது.



“தம்பி, தேத்தண்ணி குடிப்பமே”

தம்பு அண்ணை இவனிடம் கேட்டார். அவர் இப்பொழுது சைக்கிள் சில்லை முழுமையாக “பக்கிள்” எடுத்திருந்தார். ரகு அவரைப் பின் தொடர்ந்தான்.

இவன் வசந்தியோடு வந்து தேநீர் குடித்த கடை அதிகம் மாற்றம் இல்லாமல் இருந்தது. “வடையும் தேத்தண்ணியும் கொண்டு வாரும்.”

தம்பு அண்ணை கடைப் பையனிடம் கூறினார்.

“அண்ணை, நான் பிளேன்ரீ தான் குடிக்கிறனான்.”

“எப்ப இருந்து இந்தப் பழக்கம்”

தம்பு இவனிடம் கேட்டார்.

“கொழும்புக்குப் போனதிலிருந்து.”

“ஏன், கொழும்பில் உள்ள கடைகளில் தேத்தண்ணி நல்லாப் போட மாட்டாங்களோ” தம்பு கேட்டார்.

“அவங்கள் நல்லாத் தேத்தண்ணி போடுவாங்கள்”

“அப்படி என்றால், ஏன் நீர் தேத்தண்ணி குடிக்கிறதை கைவிட்டனீர்.”

“அண்ணை, நான் சிலதை மறக்க விரும்புறன்” என்னத்தை என்பது போல் தம்பு இவனின் முகத்தை நோக்கினார்.

“வசந்தியோட பழகினதை.”

“அப்படி என்றால் நீர் வசந்தியைக் கலியாணம் முடிக் கேல்லையே.”

தம்பு அண்ணை அப்பாவித்தனமாய்க் கேட்டார்.

“எல்லாக் காதலும் கலியாணத்தில முடியிறதில்லை” என இவன் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்ப நான் கேட்டதற்கு அவளையும் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் வந்ததாய்ச் சொன்னீர்.”

“ஓம், நிர்மலாவையும் கூட்டிக் கொண்டு தான் யாழ்ப்பாணம் வந்தனான்.” என ரகு கூறினான்.

“அப்ப தேத்தண்ணி குடிக்கிற பழக்கத்தை மறந்தது போல??” தம்பு முடிக்கவில்லை. இவன் குறுக்கிட்டான்.

“வசந்தியின் நினைவுகளையும் மறந்திட்டியா எனக் கேக்கிறியள். பதினைஞ்சு வருசமாகியும் அண்ணை, அந்த நினைவுகளை என்னால மறக்க முடியேல்லை.”

இதைச் சொல்லும் போது ரகுவின் கண்கள் கலங்கியதைத் தம்பு அண்ணை கண்டு கொண்டார்.

*(ஞாயிறு தினக்குரல் 26.6.2011)*

# 12

# இதம்

இருபத்தாறு வருடங்களின் பின் அந்தச் சந்திப்பு இடம்பெற்றது. விபுல் என அழைக்கப்பட்ட விபுலாநந்தன் வீட்டிலேயே அவர்கள் சந்தித்தார்கள்.

அவர்கள் அவனோடு ஒன்றாகப் படித்தவர்கள். காலச் சக்கரம் சுழன்றதில் இப்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில். அருகில் இருந்தவர்கள் சிலரைக் கூட இனங் காண முடியவில்லை. காலம் அவர்களில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இருபத்தாறு வருடங்கள் என்பது ஒரு மனிதனின் ஆயுட் காலத்தில் மிகக் கணிசமான காலம். கதிரேசனுக்கு அந்தச் சந்திப்பு பிடித்திருந்தது.

எத்தனை மகிழ்வான நாட்களவை. அவற்றை வாழ்வின் அந்திம காலம் வரை மறக்க முடியாது. கல்லூரிகள் முடிந்து அரசடி வீதி வழியாகக் கதிரேசன், டேவிட், மல்லிகா, ஸ்ரெலா, விபுல் என நண்பர்கள் நடந்து வருவார்கள். கதிரேசன், டேவிட், விபுல் இவர்கள் கஸ்தூரியார் வீதிக்கு அருகிலுள்ள பிரபல ஆண்கள் கல்லூரியில் படித்தனர். மல்லிகாவும் ஸ்ரெலாவும் அரசடி வீதியிலுள்ள பெண்கள் கல்லூரியில் படித்தனர். ‘டியூசன்’ வகுப்புக்கு ஒன்றாகச் செல்வதால் நண்பர்களாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்மடம் சந்தியில் வந்து தான் பஸ் ஏற வேண்டும். இப்போது போன்று கல்லூரி வாசல்களுக்கு பஸ்கள் வராது. கந்தர்மடம் சந்தியில் பஸ் கிடைக்காத போது கதிரேசன் திருநெல்வேலியில் உள்ள தனது வீடு வரை நடந்து போயிருக்கிறான். கந்தர்மடம் சந்தியில் கிளி மாமாவின் வாடகைக் கார் தரிப்பிடம் இருந்தது. சைக்கிளில் பலாலி வீதி வழியாகச் செல்பவர்கள் இலவசமாகச் சைக்கிள் சக்கரங்களுக்குக் காற்று அடிக்க முடியும். அதற்கான வசதியும் அந்தக் கார் தரிப்பிடத்தில் இருந்தது. கந்தர்மடம் சந்தியில் அரசடி வீதியின் மறுபக்கம் ஒரு தேநீர்க்கடை. எப்போதும் அங்கே வாளிகளில் சுத்தமான குடிநீர் இருக்கும். வாளிகள் மூடப்பட்டு அதன் மேல் மூக்குப் பேணிகள் கவிழ்க்கப்பட்டுக் காணப்படும்.

இவர்கள் கந்தர்மடம் சந்தியை அடைந்ததும் நடந்த களைப்புத் தீர வாளியில் உள்ள தண்ணீரைப் பேணிகளில் அள்ளிக் குடிப் பார்கள்.

பஸ் கிடைக்காவிட்டால் சில வேளைகளில் உழவு இயந்திரங்கள், மாட்டு வண்டில்களிலும் அவர்கள் ஏறி வீடுகளுக்குப் போயிருக் கின்றனர். விபுலுக்கு உழவு இயந்திரத்தில் ஏறுவதென்றால் பயம். ஸ்ரெலா மிகவும் துணிச்சல்காரி. உழவு இயந்திரத்தில் எல்லோருக்கும் முன்னதாக அவள் பாய்ந்து ஏறிவிடுவாள். அவள் விபுலைக் கேலி பண்ணுவாள்.

அரசடி வீதியின் ஓரத்தில் இருந்த பெரிய மரம் ஒன்றிலே இராச குளவிகள் கூடு கட்டியிருந்தன. பாடசாலை விட்டு வரும்போது ஒருநாள் கதிரேசன் அந்தக் கூட்டுக்கு கல்லெறிந்து விட்டான். குளவிகள் பெருமளவில் பறந்து வந்தன. இவர்கள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். வீதியால் வருவோரும் போவோரும் குளவிகளுக்கு அஞ்சி விலகி ஓடினார்கள். ஆனால் ஒருவர் மட்டும் அந்த வீதியால் எந்தவித பிரக்ஞையும் அற்று வருவதை இவர்கள் கண்டார்கள். அவர் மிகவும் ஆறுதலாக சைக்கிளை மிதித்தபடி வந்தார்.

"நல்லா மாட்டுப் படப் போறார்" என ஸ்ரெலா கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குளவி குத்தினால் எப்படியிருக்கும்" என கதிரேசன் கேட்டான். ஸ்ரெலா சிரித்துக் கொண்டே "இப்படி இருக்கும்" என்று சொல்லி அவனின் கையில் இறுக்கிக் கிள்ளினாள். கதிரேசனுக்குக் கண்ணீர் வந்து விடும் போல் இருந்தது. அந்தளவுக்கு வலித்தது. ஆனால் மௌனமாக அந்த வலியைத் தாங்கிக் கொண்டான். டேவிட் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

எல்லோரும் நடக்கவிருக்கும் அவலத்தை வேடிக்கை பார்த்தனர். குளவிகள் சைக்கிளில் வந்தவரை விரட்டத் தொடங்கின. அவரும் அவற்றிடம் இருந்து தப்புவதற்காக சைக்கிளை வேகமாக மிதித்தார். அப்படியும் இரண்டு குளவிகள் அவரைக் கொட்டி விட்டன.

"ஐயோ பாவம்" என விபுல் கூறினான். இவர்கள் அவனைப் பயந்தாங்கொள்ளி எனக் கேலி பண்ணினர். அதற்கு மேல் அவர்கள் அங்கே நிற்கவில்லை. கல்லெறிந்தது கதிரேசன் தான் எனத் தெரிந்தால் அன்று என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்து அதற்குப் பின் வந்த நாட்களிலும் அவன் நடுங்கியிருக்கிறான்.

நண்பர்களுக்கு முன்னால் தன் வீரத்தைக் காட்டவே அவன் குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்தான். வேறு விதத்தில் வீரத்தைக் காட்டக் கதிரேசனுக்குத் தெரியவில்லை. மல்லிகாவும், ஸ்ரெலாவும் தன்னை ஒரு ஆண் மகனாக அங்கீகரிக்க வேண்டும் என அவன் விரும்பினான். விபுலையும், டேவிட்டையும் விடத் தான் வீரன் என வெளிக்காட்ட கதிரேசனுக்கு இருந்த ஒரே வழி குளவிக் கூட்டுக்குக் கல்லெறிவது தான். அதனால்த்தான் அவன் அப்படி நடந்து கொண்டான்.

எங்கே தன்னையும் பயந்தாங்கொள்ளி என மல்லிகாவும், ஸ்ரெலாவும் சொல்லி விடுவார்களோ என எண்ணியதால் தான் கதிரேசன் தன் வீரத்தை வெளிப்படுத்தினான்.

ஆனால் அவன் எதிர்பார்த்த அளவுக்கு நண்பர்களிடம் இருந்து வரவேற்புக் கிடைக்கவில்லை. குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்ததை அவர்கள் பெரிய விடயமாக எடுக்கவில்லை. அவனைவிட ஸ்ரெலா



அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்திருப்பாள் என்பது கதிரேசனுக்கும் தெரியும்.

இன்னும் ஸ்ரெலா அந்தச் சம்பவத்தை நன்கு நினைவில் வைத்திருந்தாள். அவள் அதைக் கூறியபோது இவர்கள் வாய் விட்டுச் சிரித்தனர்.

ஸ்ரெலா இப்போது கண்ணாடி அணிந்திருந்தாள். முன்னர் கறுப்பாக இருந்தவள் இப்போது சற்று நிறத்திருந்தாள். வெள்ளவத்தையில் உள்ள அடுக்குமாடி வீட்டின் சொந்தக்காரி. குளோரின் தண்ணி அவளின் மேனியின் நிறத்தை மாற்றி விட்டது. கண்ணாடியின் கீழே முகத்தில் கருவளையங்கள்.

தோலிலே சுருக்கங்கள். முதுமை ஸ்ரெலாவை அணுகி விட்டதன் அடையாளங்கள். தலைமயிர் மட்டும் கருநாகம் போல் காணப்பட்டது. பூச்சு மையின் மகிமையாக இருக்கலாம் எனக் கதிரேசன் எண்ணிக் கொண்டான்.

டேவிட் அவன் எண்ணத்தைக் கலைத்தான். "நீ செல்வனைக் கண்டனியே?"

கதிரேசன் இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான்.

செல்வன் பிராமணப் பொடியன். ஒருநாள் டேவிட்டும் நண்பர்களும் சேர்ந்து செல்வனின் சாப்பாட்டுப் பாசலுக்குள் மீன் துண்டுகளைக் கலந்து விட்டனர். இதை அறியாத செல்வன் அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்ட போது மீன் துண்டு கடிபட அவன் சின்னத்தம்பி மாஸ்டரிடம் சொல்லிப் போட்டான். பிறகென்ன மாஸ்டரின் பிரம்பு டேவிட்டின் முதுகைப் பதம் பார்த்தது. "சின்னத்தம்பி மாஸ்டரிடம் அடிவாங்கியதையிட்டு நான் கவலைப்படேல்லை" என டேவிட் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கதிரேசன், அண்டைக்கு அது எனக்கு விளையாட்டா தெரிஞ்சுது. ஆனால் அதை எண்ணிப் பிறகு நான் கவலைப்பட்டிருக்கிறன்" என்றான்.

"அது ஒரு காலம்" இவன் கூறினான்.

"உண்மை தான். அப்ப இருந்த டேவிட் இப்ப இல்லை. காலம் எல்லாத்தையும் மாத்திப் போட்டுது." என்று கூறிய டேவிட் "நான் செல்வனைக் கண்டால் அண்டைக்கு அவன்ர சாப்பாட்டுக் குள்ள மீனைப் போட்டதற்காக மன்னிப்புக் கேட்பன்" எனச் சொன்னான்.

நண்பர்கள் அவனைப் பெருமிதத்துடன் பார்த்தனர்.

"இருபத்தாறு வருடங்களுக்குப் பிறகு இப்படிச் சந்திப்போம் என எங்களில் யாரும் எதிர்பார்க்கவில்லை" என மல்லிகா சொன்னாள்.

"முகநூல் (face book) எங்களை இணைச்சிருக்கு" ஸ்ரெலா கூறினாள். "என்னடா விபுல் பேசாமல் இருக்கிறாய்" என மல்லிகா இயல்பாய் கேட்டாள்.

"இல்லை நீங்கள் கதைக்கிறதைக் கேட்டுக் கொண்டிருக்கிறன்" என விபுல் கூறினான்.

விபுலின் வீடு கோண்டாவிலில் இருந்தது. அங்கே தான் அவர்கள் சந்தித்தார்கள். விபுலின் மனைவி பலகாரமும் தேநீரும் கொடுத்து உபசரித்தாள். இரண்டு பிள்ளைகள். நாற்பத்தைந்து வயதாகியும் விபுலுக்கு இன்னும் பொருத்தமான வேலையொன்றும் கிடைக்கவில்லை. மல்லிகா அவனுக்கு உடனடியாக நல்லதொரு வேலை எடுத்துத்தரத் தன்னால் முடியும் என்றாள். அது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. மல்லிகாவின் கணவன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர். அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. அவளும் கொழும்பில் தான் வசிக்கிறாள். ஆனால் ஸ்ரெலாவுக்கு இது தெரியாது.



"இவளைக் கண்டாலும் எனக்கு அடையாளம் பிடிச்சிருக்க முடியாது" என ஸ்ரெலா கூறியதைக் கதிரேசன் ஆமோதித்தான். மல்லிகா முன்பு ஒல்லியாக இருந்தாள். இப்போது உடல் பருத்திருந்தது. ஸ்ரெலாவால் மட்டுமல்ல தன்னாலும் ஒரு பொது இடத்தில் மல்லிகாவைக் கண்டால் அடையாளம் பிடிக்க முடியாது என அவன் எண்ணினான்.

டியூசன் வகுப்பில் நாகநாதன் மாஸ்டர் விலங்கியல் படிப்பிக்கும் போது கூறியது அவனுக்கு நினைவுக்கு வந்தது. "இஞ்ச படிக்கிற பொடியளைப் பத்து வருசத்துக்குப் பிறகும் என்னால அடையாளம் காணமுடியும். ஆனால் பொம்பிளைப் பிள்ளையளை அடையாளம் காண முடியாது" நாகநாதன் மாஸ்டர் இப்படிக் கூறியபோது கதிரேசன் மறுவரிசையில் அமர்ந்திருந்த ஸ்ரெலாவை ஓரக் கண்ணால் பார்த்தான். அவள் இவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகை அவனுக்கு மிகக் குளிர்ச்சியாக இருந்தது.

காலம் விரைவாக உருண்டோடி விட்டது. ஆனால் மனது மட்டும் காலத்தோடு ஓடத் திராணியற்று அங்கேயே நின்று விட்டது. அன்று குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்த போது ஸ்ரெலா இவனின் கையில் கிள்ளினாள். அந்த இடத்தை இப்போது கதிரேசன் தடவிப் பார்த்தான். அது அவனுக்கு இதமாக இருந்தது.

*(சுடர்ஒளி 24.07.2011)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகேசு ரவீந்திரன்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் முதற்தர அறிவிப்பாளராகப் பணியாற்றும் முருகேசு ரவீந்திரன் எழுத்துத்துறையிலும் மிகுந்த ஆர்வமுள்ளவர்.

இவர் பத்திரிகைகளில் எழுதிய சிறுகதைகள் பலராலும் கவனிப்புக்குள்ளாகின. காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு ரவீந்திரன் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

1993இல் வானொலியில் ஒலிபரப்பாகி வந்த 'நாளைய சந்ததி' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரவீந்திரன் 1994ஆம் ஆண்டு வானொலி நாடகக் கலைஞராகத் தேர்வு செய்யப்பட்டார். கல்விச் சேவையில் வாராந்தம் ஒலிபரப்பான 'ஆய்வரங்கம்' நிகழ்ச்சியை நடத்துவதில் வெற்றிகண்டார். வீரகேசரியில் ஒப்புநோக்குநராகப் பணியாற்றிய இவர், 1997ஆம் ஆண்டு வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராகி 1999இல் செய்தி வாசிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டு 2000ஆம் ஆண்டு ஒப்பந்த அறிவிப்பாளரானார். 2001இல் நிரந்தர அறிவிப்பாளராகித் தற்போது முதற்தர அறிவிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுப் பணியாற்றி வருகிறார். செய்தி வாசித்தல், நேர்காணல், வர்ணனை, 'பாராளுமன்றத்தில் இன்று' போன்ற நிகழ்ச்சிகள் வாயிலாகத் தமது ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆர். கணபதிப்பிள்ளை
பணிப்பாளர்
தமிழ்ச் சேவை
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ISBN 978-955-54221-0-9
9 789555 422109
விலை ரூபா 300.00

Printed by Kumaran Press (Pvt) Ltd kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org